
கல்கி

KALKI 17.9.95 ரூ. 3.00



அப்பா ஆகப் போறீங்களா?



என் சிநேகிதியிடம்
சொன்னேன்,
"போதும், உன்
பணம் வீணாவதை
நிறுத்து" என்று

விலை குறைவாக தோன்றும் பேன்ட்டிகளை வாங்கிடும் விருப்பம், புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால், பின்பு தெரியவரும் அதன் கஷ்டங்கள்: உடலை உறுத்திப் பிடிக்கும் எலாஸ்டிக்.

சாயம் போகுதல். துணி தளர்ந்து தொங்கிப் போகுதல். இதில் கவனிக்க வேண்டியது, நீங்கள் இந்த அவதிகளுக்கு உட்படவே வேண்டாம்.

காரணம்: "யூ" எனும் ஒரு பேன்ட்டி இப்போது கிடைக்கிறதே! மகளிருக்கான இளம் [illegible]. இறக்குமதி செய்யப்பட்ட "[illegible]" ரப்பர் எலாஸ்டிக். மிருதுவான, 100% தூய்மையான உயர்தர பருத்தியிலிருந்து தயாரிப்பு. உங்கள் உடல்வாகுடன் அணைந்து கொடுத்திடும் தன்மை. அதற்கேற்றபடி நீண்டு-வ-ளை-ந்-து கொடுக்கும் எலாஸ்டிக் மற்றும் துணி. ஆனாலும் துவைத்தல் பலமுறைகளுக்கு பின்பும் தளர்ந்து போகாது. மொத்தத்தில், பேன்ட்டிகளுக்கு ஆகும் செலவு உண்மையில் குறைவு.

"யூ" இருக்கையில் வேறெந்த, மட்டமான பேன்ட்டிகளை வாங்கி காசை ஏன் வீணாக்க வேண்டும்!



ஒரு தயாரிப்பு

you®

100% பருத்தித்துணி பேன்ட்டிகள்

உடலுக்கு நல்ல சுகம்.
பணத்திற்கு நல்ல பலன்.

Distributors in the Middle East : * GULF IND International Co., P.O. Box. 14730, Doha, Qatar. Ph : 974-417606, 428944, Fax : 974-442199, 328770. * AL-BARAHA For Readymade Garments and shoes Est., P.O. Box. 23967, Safat, Kuwait.

முதல்வரானால்...



"இது நல்லாயில்லைங்க!"
"என்னது?"
"முதல்வரின் ஸ்டைல் எதுவாக வேணா இருக்கலாம். அதுக்காக சீப்பை ஒரு ஆடம்பர, அனாவசியப் பொருளாகக் கருதி அதன் மீது 200 சதவீதம் வரியை அதிகரித்திருப்பது நியாயமா?"

"என்னதான் தலைவர் ஜாலி மூடுல இருந்தாலும், சட்டசபைக்குள்ள 'ஃபிகரு ஃபிகருதான், சூப்பர் ஃபிகருதான்'னு பாடுறது நல்லால்ல!"
"தப்பா எடுத்துக்காதீங்க. முதல்வர் ஆட்சியிலே இந்த ஆண்டு பட்ஜெட்டில் பற்றாக்குறை ஃபிகர் ரொம்பக் கம்மி. அந்த மகிழ்ச்சியிலேதான் இப்படி."

"அந்த ஸ்டெனோவுக்கு என்ன ராஜ மரியாதை?"
"முதல்வர் பேச்சை அப்படியே சுருக்கெழுத்திலே எழுதிக்கிற அளவு ஸ்பீட் உள்ளவராச்சே."

- குல்லூ

ஸ்ட்ரீட் ஃபைட்டர்



'ஹீரோ' விஜயசாந்தி! - சின்ன வயதிலிருந்தே தெருச் சண்டைகளில் விருப்பமுள்ளவர் என்று ஒரு அவுட்-லைன் காட்டி விடுகிறார்கள்.

வெகு உபயோகம். சந்து, தெரு, சாலை, ரயில்வே டிராக், போலீஸ் ஸ்டேஷன், ஜெயில் என்று பூலோகத்தில் காணக் கிடைக்கிற சகலவிதமான லொக்கேஷன்களிலும் வில்லன்களைப் போட்டுப் புரட்டி எடுக்கிறார்.

ஆயினும் அலுக்கவில்லை. காரணம், ஆண்மையின் வேகத்தில் குறிப்பிட்ட அளவு பெண்மையின் நளினத்தைக் கலந்து விடுகிறார். மிகுந்த ரிஸ்க் எடுத்து டூப் போடாமல் பறந்து, பறந்து தாக்குவதெல்லாம் வெகு சுவாரஸ்யம். (இதையே வழக்கமான ஹீரோக்கள் செய்திருந்தால் இத்தனை ரசிக்குமா, தெரியவில்லை.)

கதையில் சண்டை என்றில்லாமல் சண்டைகளுக்கிடையே கதை வைத்தாக வேண்டிய உபத்திரவ சோலி, இயக்குநருக்கு. இடைவேளை வரை ஒரு ரேஞ்சில் குத்துமதிப்பாக குடும்பப் பாசம் - தெருச் சண்டை - பேங்க் கேஷியர் அக்கா - அன்னாரின் நேர்மை என்று இழுத்துப் போனாலும், விஜயசாந்தி கைதாகிற பிறகு புயல் வேகம். பாசப் போராட்டம், நீதிப் போராட்டம், அநீதி வெறியாட்டம் என்று அடுக்கடுக்காகத் திருப்பம் நிறைந்த காட்சிகள். சிட் நுனி என்பது பழைய பிரயோகம். இது ஸ்கிரீன் நுனிக்கு ஓடவைக்கிற விஷயம்.

'ஹீரோயின்' ஆனந்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். ஃப்ரீலான்ஸ் போட்டோகிராபர் என்றொரு டெஸிக்னேஷன் கொடுத்து, தொழிலையும் கவனிக்க விடாமல், ஹீரோ விஜயசாந்தியை ஆற அமர காதலிக்கவும் முடியாமல் (அதுக்கெல்லாம் ஏதுங்க நேரம்?) திரையில் வெற்றிடம் கிடைக்கிற போதெல்லாம் பரிதாபமாக வந்து, நின்று போகிறார். அவரை விட, பெண் வேஷத்தில் வரும் அந்த தடி நண்பர் ஜோர். (எண்ணெய் தேய்க்கிறதும் ஆடுகிறதுமான ஓரிரு விரச உற்சவங்களை சென்ஸார் எப்படி விட்டது?)

வில்லனுக்கென்று வகுக்கப்பட்டிருக்கிற கல்யாண குணங்கள் ஏதுமின்றி ஒரு பொம்மை வில்லன். கொசுறாக மலையாள தேவன் வேறு. தேவனெல்லாம் வில்லத்தனம் காட்ட முயல்வது நல்ல தமாஷ்.

ஆங்கிலத் தலைப்புடன் தமிழுக்கு வந்திருக்கும் தெலுங்குப் படம். மொழியா முக்கியம்? ஹீரோ, விஜயசாந்தி என்னும் போது, திரை கிழியும் சண்டைக் காட்சிகளைத் தவிர, வேறு எது எக்கேடு கெட்டால் என்ன?

— ஆர்.பி.ஆர்





• இசக்கி & திருமதி இசக்கி

சிரிக்க வைத்தார்; சிங்கப்பூர் சென்றார்!







• மிருகக் காட்சி சாலைக் காட்சிகள்...

சென்ற இதழ் தொடர்ச்சி

முஸ்தபா சென்டரில் கண் பார்த்ததையெல்லாம் கை எடுத்து, கூடையில் நிரப்பி, பெட்டர் 'ஹாஃபின்' குறைந்தபட்ச ஆசையில் பத்து சதவீதம் நிறைவேற்றி விட்ட மகிழ்ச்சியில் 'பில்' செக்ஷனில் வந்து நின்ற போதுதான்... "பேக்?" என்று பெரிதாய் அலறினாள் மனைவி.

"அய்யோ.. மிஸ்ஸாகி விட்டதே!"

ஆடிப் போய் விட்டேன் நான்.

உள்ளே பாஸ்போர்ட்டும் பதினைந்தாயிரம் மதிப்புள்ள டாலரும்!

கடையில் சுற்றி வந்த இடமெல்லாம் பதறிப் போய்ப் பார்த்தோம்.

வழி அனுப்பி வைக்கும்போதே ஆசிரியர், 'பாஸ்போர்ட்டை மிக மிக பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்' என்று அழுத்தமாய் எச்சரித்திருந்தும் கோட்டை விட்டு விட்டோமே!

உள்மனம் புலம்பியது.


"பணம் போனா போகட்டும். பாஸ்போர்ட் இல்லேன்னா நாடு திரும்பறது சங்கடமாச்சே."


"திருடறதுக்குன்னே சில பேரு இங்க வராங்க தெரியுமா?"


"சிங்கப்பூருல ஒரு பாஸ்போர்ட்டை பிளாக்குல முப்பதாயிரம் ரூபாய்க்குக் கூட வித்திடுவாங்களாக்கும்."

"சரி, போனது போனதுதான்... இனி வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்... போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் கொடுத்துட்டு இந்தியன் எம்பஸிக்குப் போங்க."

"எதுக்கும் அரை மணி நேரம் வெயிட் பண்ணிப் பாருங்க. சில பேர் டாலரை மட்டும் எடுத்துட்டு, பாஸ்போர்ட்டை வீசிட்டுப் போயிடுவானுங்க."







• சிம்பன்ஸியுடன் டிபன் சாப்பிடலாம்!

"முதல்ல இங்க உள்ள செக்யூரிட்டிகிட்ட போயி விஷயத்தைச் சொல்லுங்க."

செக்யூரிட்டியிடம் ஓடினேன். கூடவே அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக தர்மபத்தினி!

சும்மா சொல்லக் கூடாது.

ஆறு பேர் கணம் தாமதிக்காமல் பம்பரமாய் - கம்ப்யூட்டர் பம்பரமாய்ச் சுழன்றார்கள்.

பத்தே நிமிடத்தில் பலன்!

"யூ ஆர் லக்கி... எங்க பாஸ் உங்களைக் கூப்பிடுகிறார்" - அழைத்துச் சென்றார்கள்.

இனிமையான இளைஞர். முஸ்தபா சென்டரின் முதலாளி முஷ்டாக் அகமதுவின் இளவலாம்! புன்னகையால் வரவேற்றார்.

"இதுதானே உங்க பேக்? எல்லாம் சரியாக இருக்கிறதா... நன்றாக செக் பண்ணிக் கொள்ளுங்கள்!"

உச்ச சந்தோஷத்தில், "தேங்க்யூ.. தேங்க்யூ.. தேங்க்யூ..." பத்துத் தடவை சொல்லியிருப்போம்!

ஒரு ஃபைலை நீட்டி, 'தவற விட்டதை திரும்பப் பெற்றுக் கொண்டதற்கு' என்னிடம் கையெழுத்து வாங்கினார்.

"இப்படித்தான் ஒரு தடவை பேனசிர் புட்டோவின் உதவியாளர் மூவாயிரம் அமெரிக்கன் டாலரை இங்கே தவற விட, உடனே கண்டுபிடித்துக் கொடுத்தோம். யூ ஆர் ஆல்ஸோ ரியலி லக்கி..." -

ஊர் திரும்பியதும் யாராவது ஒளி இடம் கொடுத்தால் முஸ்தபாவுக்கு ஒரு சிலை வைக்க உறுதி பூண்டேன்.

மண்டேய் மிருகக் காட்சி சாலை!

மலேசியப் பாதையில் இருக்கிறது. சகட்டு மேனிக்கு இடத்தைச் சுற்றி வளைத்து ஜமாய்த்திருக்கிறார்கள்.

தெரியுமா? சிங்கையிலிருந்து மலேசியாவுக்கு மூன்றரை மணி நேர பஸ் பயணம்தான்.

குடும்பத்தோடு விசிட் அடித்தால் நாள் முழுக்க உல்லாசமாய்க் களித்து விட்டு வரலாம். ஃபேண்டாஸ்டிக்!

'மேப்' உட்பட அனைத்து விவரங்களும் அடங்கிய 'கைடு' புக்கை நுழைவாயிலில் ஒரு 'வெள்ளி'க்கு வாங்கி 'பாப்கார்ன்' கொறித்துக் கொண்டே ஐந்து நிமிடம் பார்த்தால் போதும்..

எத்தனை மணி நேரம் அங்கு செலவழிக்க



சாப்பாட்டை மறக்கலாமா?

நாம் திட்டமிட்டிருக்கிறோமோ... அந்த நேரத்துக்குத் தகுந்தபடி Zooஐ ரவுண்ட் அடிக்க - விளக்கமாய் குறிப்பு தந்திருக்கிறார்கள்.

அங்கே ஒரு ஆஸ்திரேலிய இளஞ்ஜோடியைச் சந்தித்துப் பேசியது இனிய அனுபவம். (Zooவாசிகள் இல்லை சார்!)

லேட்டஸ்ட் தம்பதிகளாம்!

பெண்ணைப் பெற்ற மாமா பெருஞ்செல்வந்தர் போலும். மணமக்களுக்குத் தம் அன்புப் பரிசாக கைநிறைய டி.சி.யைக் (டிராவலர்ஸ் செக்) கொடுத்து, உலகம் சுற்றி தேனிலவைக் கொண்டாடச் சொல்லி விட்டாராம்...! (ம்ம்... அதற்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேண்டும்!)

'இந்தியா' என்றதும் எங்களிடம் ஆர்வமாய்ப் பேசினார்கள். மலேசியாவுக்குப் போய் வந்த பின் நம் நாட்டுக்கு வருகிறார்களாம்!

தாஜ்மகாலைக் கேட்டார்கள். ராமேஸ்வரத்தைக் கேட்டார்கள். கண்ணகியைக் கேட்டார்கள். கமலஹாசனைக் கூட கேட்டார்கள்! என்ன ஒரு உலக ஞானம்!

Zooவில் நாங்கள் பார்த்து மனதைப் பறிகொடுத்தது - மும்மூர்த்திகளின் முத்தான 'காமெடி' காட்சி.

உர்ராங் உட்டான் - சிம்பன்ஸி - அது என்ன கிப்பனா.. ஜிப்பனா ஏதோ ஒண்ணு! இந்த மூன்று வகை மூதாதை வர்க்கங்களும் அந்த ஒல்லியான மாஸ்டரோடு அடிக்கின்ற லூட்டி இருக்கிறதே...

அப்பப்பா!

கோல்டன் பீச்சில் ஆடாமல் - அசையாமல் - சிரிக்காமல் சவால் விட்டு நிற்கின்ற 'அண்ணாச்சி' என்ன, நம்ம பிரதமர் கூட இந்த மும்மூர்த்திகளின் கொட்டங்களைப் பார்த்து உட்கட்சிப் பூசலையெல்லாம் மறந்து சிரித்துத் தான் ஆக வேண்டும்!

விரும்பினால் இந்தக் குறும்புக்கார உர்ராங் உட்டானோடு உட்கார்ந்து டிபன் சாப்பிடலாம். டீ குடிக்கலாம். அதற்கு தனிக்கட்டணம்!

சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் தாயகத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

"25 வயது வரை வேலை கிடைக்காமல் - வேறு வழி தெரியாமல் இங்கே வந்தேன். கஷ்டமான வேலைதான். ஆனாலும் உழைப்புக்கு - ஊதியம் கிடைக்கிறது. நேர்மைக்கு மரியாதை கிடைக்கிறது. வேற என்ன வேணும்?"

-மன்னார்குடி. நெப்போலியன்.

ராமநாதபுரம் மாவட்ட மாரியூரில் பிறந்து முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இங்கே வாழ்ந்து வரும் காஜாமுகைதீன், "ஊருல பெஞ்சாதி, புள்ளைங்களையெல்லாம் விட்டுட்டு எங்க ஊருக்காரங்க ரொம்ப பேரு இங்க தனியா இருக்காங்க. பகல் முழுக்க கடுமையா

சிங்கப்பூர் சிப்ஸ்

- தி ஸ்ட்ரெயிட் டைம்ஸ் என்ற சிங்கப்பூர் பத்திரிகை, தனது 150வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிட்டிருந்தது. உலகப்புகழ் பெற்ற கலைஞர்களையெல்லாம் முழுசாக இரண்டு பக்கங்களில் படம் போட்டு கவுரவித்திருந்ததில் - என் கண்ணில் பட்டு, மகிழ்ச்சி தந்தது- அதிலிருந்த இரண்டு தமிழ்நாட்டுக் கலைஞர்கள். எம்.ஜி.ஆர், ஸ்ரீதேவி!
- தலைவலியா? முதுகுவலியா? சிறுநீரகச் சிக்கலா? இதயத்தில் கோளாறா? எதுவாயினும் சரி- தொலைபேசியிலேயே இலவச 'ஹைடெக்' மருத்துவ சேவை- நாடு முழுவதும்!
- 'பவர் கட்' பிசினஸே இல்லை! "மின் தடையா? அப்படின்னா?" என்கிறார்கள்.
- ஊழியர்களை 58 வயதில் துரத்தும் சோகம் இங்கு இல்லை. ஆரோக்கியமாக இருந்தால் 70 வரை கூடப் பணியாற்றலாமாம்!
- அரசியலில் இதற்கு நேரெதிர்! உற்சாகமான தலைவர்கள் கூட தாமாக முன்வந்து இளைஞர்களை மேலேற்றி, தாம் விலகி விடுவார்களாம். (மெய்யாத்தாங்க!)
- எம்.பி.க்கு சம்பளம் 88,000/- அமைச்சருக்கு 10 லட்சம்; பிரதமருக்கு 15 லட்சம். சிங்கை பிரதமரின் சம்பளம், அமெரிக்க ஜனாதிபதி சம்பளத்தை விட அதிகம்!
- நடுராத்திரி 12 மணிக்கு தன்னந்தனியாக கன்னிப்பெண் தாராளமாய் நடு ரோட்டில் நடந்து வரலாம்! காந்தி இங்கே கண்ட கனவு அங்கே போய் பலித்திருக்கிறதோ?
- ஹோட்டலில் ஒரு கரப்பான் பூச்சி தெரிந்தால் போதும்- 500-1000 டாலர் என்று அபராதம். 2-வது தடவை பிடிபட்டால் ஒரு மாதம் கடையை அடைக்க வேண்டும். 3வது தடவை பிடிபட்டால் கடை லைசென்ஸ் க்ளோஸ்!
- எல்லா பக்கமும் இந்த வாசகம் இருக்கிறது. 'Helping hands straight from the heart' வாசகத்தில் மட்டும் அல்ல. நடைமுறையிலும் தான்.
- அங்கு நாங்கள் இருந்த போது அடிபட்ட செய்தி:

பிரதமர் 'கோ-சோங் டோக்'க்கு அமெரிக்காவின் மசாசூசெட்ஸில் உள்ள வில்லியம்ஸ் கல்லூரி, வரும் செப்டம்பரில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க முடிவு செய்தது. ஆனால் அந்த முடிவுக்கு அமெரிக்கர் இருவர் (1. வில்லியம் சஃபையர் 2. கல்வித்துறையாளர் ஜார்ஜ் கிரென்) - எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதைப் பற்றி விவாதிக்குமாறு சஃபையர், பிரதமருக்கு சவால் விடுத்தார். அந்த சவாலை ஏற்ற பிரதமர் கோ-சோங்-டோக், சஃபையரையும் கிரெனையும் சிங்கப்பூர் வந்து விவாதிக்குமாறு அழைத்திருக்கிறார்!



"ஆரவார அரசியல் இங்கே இல்லை!"

சிங்கப்பூரில், 'தமிழ் முரசு' பத்திரிகை நடத்தி வரும் திருநாவுக்கரசிடம் சிங்கப்பூர் அரசியல் பற்றி ஒரு மினி பேட்டி கண்டேன்:

''1159ல் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை. அன்றிலிருந்து இன்று வரை ஒரே கட்சி தான். மக்கள் செயல் கட்சி (PAP) ஆட்சியில் இருக்கிறது. ஏழெட்டு கட்சிகள் இங்கே இருக்கின்றன. நான்காண்டுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கிறது. இருந்தும் தொடர்ந்து ஒரே கட்சி வெற்றி பெற்று வருவதற்குக் காரணம்– ஆட்சி முறையில் ஒழுங்கு. 'சட்டத்தின் முன் எல்லோரும் சமம்' என்பது நூற்றுக்கு நூறு நடைமுறையில் இருக்கிறது. 'நான் ஆளுங்கட்சிக்காரன்' என்று மார் தட்டி யாரும் விசேஷ சலுகையை அனுபவிக்க முடியாது. மேலும் பெரும்பான்மையாக இருக்கின்ற சீனர்கள் நடைமுறை சிந்தனை (Practical mind) கொண்டவர்கள். எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்ப்பதில்லை. ஆட்சியாளர்களும் அடுத்து வரும் தேர்தலை சிந்தித்து செயல்படாமல், அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்தித்து செயல்படுகிறார்கள். எனவே 'இன்னொரு கட்சி' என்ற பேச்சுக்கே இது வரை இங்கே இடமில்லை. இன்னொரு விஷயம்... சிங்கப்பூர் அரசியல், உலகம் தழுவிய பொருளியல் சார்ந்தது. வெறும் ஆரவாரக் கூச்சல் அரசியல் இல்லை.''

''இங்குள்ள இந்தியர்கள் பற்றி...?''

''சிறுபான்மையினராக (8–9%) இருந்தாலும் மேலான பதவிகளில் நிறைய பேர் இருக்கிறார்கள்! பஞ்சாபி, சிந்தி, குஜராத்தி, தமிழர்களில் சில பேர் வளமாகவும் இருக்கிறார்கள். இதை மட்டும் வைத்துக் கொண்டு திருப்தி பட்டுக்கொள்ள முடியாது. பல பேரிடம் திட்டமிட்டு உழைக்கின்ற நுணுக்கம் இல்லை. இதனால்தான் புரோட்டாக் கடையும் பெட்டிக் கடையும் வைத்து பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறோம். இன்னொரு குறைபாடு என்னவென்றால்– கால மாறுதலுக்கு ஏற்ப மாறிக் கொள்ளும் மனோபாவம் இந்தியரிடம் இல்லை. 'பழசை என்ன சொன்னாலும் விடமாட்டேன்' என்ற முரட்டு உடும்புப் பிடிவாத குணம் இருக்கிறது.''

''பழமையிலும் மனித வாழ்க்கைக்குத் தேவையான பண்பட்ட விஷயங்கள் இருக்கிறதல்லவா?''

''இல்லை என்று சொல்லவில்லையே! தேவையானவைகளை விட்டு விட்டு தேவையில்லாதவைகளை பற்றிக் கொண்டிருக்கிற போக்கைப் பற்றித்தான் நான் சொல்கிறேன்!''

''சிங்கப்பூரின் முன்னேற்றம் பற்றி...''

''உலகில் வேகமான வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் இதுவும் ஒன்று. 93 சதவீதம் பேர் படிப்பறிவுள்ளவர்கள். வறுமைக்கோடு– பிச்சைக்காரர்கள்– லஞ்ச லாவண்யம்– சிவப்பு நாடா முறை– வேலையில்லா பிரச்னை போன்ற சமூகச் சீரழிவுகள் இங்கு துளியும் கிடையாது. இரண்டாவது– பெரிய துறைமுகம். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அதிக முதலீடு... 35 சதவீதம் பேர் கார் வைத்திருக்கிறார்கள். 27 சதவீதம் பேர் கம்ப்யூட்டர் வைத்திருக்கிறார்கள்.

...இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். மனிதன் தன் திறமைகளை மேம்படுத்த இங்கே ஏராளமான வசதிகள் இருக்கின்றன. ஆனால் ஒன்று: எல்லாவற்றுக்கும் பிற நாடுகளை எதிர் பார்த்துத் தான் இந்த நாடு இயங்கிக் கொண்டி ருக்கிறது!''

''சரி... இந்த வெற்றிக்குக் காரணம் என்று எதைக் கூறுகிறீர்கள்?''

''கல்வி வளர்ச்சி... மனிதப் பண்பாடு... கஷ்டங்களை, தோல்விகளை– காயங்களை சந்தோஷத்துடன் ஏற்று பழக்கப்படுத்திக் கொள்கின்ற கடுமையான உழைப்பு!''

வேலை செஞ்சிட்டு, ராத்திரி வீட்டுக்குத் திரும்பும் போது, மனைவி-மக்களோட நாலு வார்த்தை போன்ல பேசணும்னு ஆசைப்படுறது நியாயமா, இல்லையா?"

"பேசுறதுல என்ன பிரச்னை?"

"ஊருல போன் வசதி கிடையாதே! போன மாசம் ஊருக்குப் போன போது இது விஷயமா தொலைபேசித் துறை மேலதிகாரிகளைச் சந்தித்துப் பேசினேன். எம்.பி.ட்ட போயி கையெழுத்து வாங்கிட்டு வரச் சொல்லிட்டாங்க... நம்ம ஊரு எம்.பி.யை லேசுல பார்க்க முடியுமாங்க! எங்களோட என்.ஆர்.ஐ. (வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் மூலமாக வருகின்ற) பணத்தில் மட்டும் ஆர்வம் காட்டுகிற இந்திய அரசாங்கத்துக்கு எங்க கஷ்டங்களைப் புரிஞ்சிக்கத் தெரியலியே..."

இவ்வளவு சொல்லி விட்டு சாப்பாட்டை மறக்கலாமா?

தெரிந்த தமிழ் நண்பர்கள் ஒரு விருந்து தந்தார்கள். முன் எச்சரிக்கையுடன், 'ஒத்து வராது' என்று சாதுர்யமாய் ஒதுங்கிக் கொண்டாள் மனைவி.

மீன்கொரியன், மலாய் கொப்தா, நூடுல்ஸ் ஹாக்கர் - ரோசார்.

'இதை டேஸ்ட் பாருங்க. அதை டேஸ்ட்



அருள்வாக்கு

துஷ்கார்யத்தை ஸத்கார்யத்தால் ஸரி செய்கிறாற் போல, கெட்ட நினைப்பை நல்ல நினைப்பால்தான் ஸரி செய்ய முடியும். இங்கேதான் அன்பு வருகிறது. நல்ல எண்ணங்களிலெல்லாம் தலைசிறந்தது அன்புதான். அந்த அன்பை ஸமஸ்த ஜீவராசிகளிடமும் செலுத்த வேண்டும். அத்தனை ஜீவராசிக்கும் மூலாதாரமான பரமாத்மாவிடம் செலுத்தி பக்தி செய்ய வேண்டும். மூலத்திடம் அன்பு (பக்தி) செய்யாமல், அதிலிருந்து வந்தவற்றிடம் மட்டும் செய்யப் பார்த்தால் அது ஸரியாய் வராது. அதனால் ஈச்வரபக்தி அத்யாவச்யம். மனஸ் ஜீவனுக்குப் போடுகிற தப்பான எண்ணக் கட்டை எடுத்துப் போடுவதற்கு இதுதான் வழி செய்யும்.

அதாவது மனஸ், தான் பின்னே நின்று கொண்டு, சரீரத்தை முன்னே விட்டுச் செய்விக்கிற கர்ம பந்தம் மட்டுமே ஸத்கர்மாவினால் போகும். மனஸின் நேர் பந்தமான எண்ணத்தின் பந்தம் பக்தியினால்தான் போகும். பக்தியும் எண்ணம்தான். மனஸை வைத்துக் கொண்டு அதனால் பண்ணுவதுதானென்றாலும், எப்படி சாஸ்த்ர கர்மா பழைய கர்மக் கட்டை அவிழ்க்கிற கட்டாயிருந்ததோ, அப்படியே இதுவும் எண்ணத்தின் விஷயத்தில் செய்யும். பக்தி செலுத்திக் கொண்டே போனால் அது முற்றிப் பூர்ணமாகும் போது, 'மனஸ் என்று தனியாக ஒன்றை வைத்துக் கொண்டு இவன் வேறாக பக்தன் என்று இருக்க வேண்டாம்' என்று பகவானே நினைப்பார் – இவனை மனஸிலிருந்தே அவிழ்த்து விடுதலை பண்ணித் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தில் ஒன்றாக்கிக் கொண்டு விடுவார்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

நாம் விரும்புவன எல்லாவற்றையும் தரக் கூடியது, நாம் செய்யும் நல்ல செயல்கள்தாம்! புகழும் நன்மையும் தராத செயல்களை எப்போதும் தவிர்த்து விட வேண்டும். வாழ்க்கையில் உயர வேண்டும் என்று ஒவ்வொருவரும் நினைக்கிறோம். நினைப்பது மட்டும் போதுமா? நம் மதிப்பைக் குறைக்கக்கூடிய செயல்களை முதலில் தவிர்த்தாலல்லவா உயர்வு வரும்? 'இந்தக் காரியத்தை ஏன் செய்தோம்?' என்று பின்னால் நினைத்து வருந்தும்படியான ஒரு செயலைச் செய்யாமலே இருப்பதுதானே விவேகம்?

– திருவள்ளுவர்

('வினைத் தூய்மை' அதிகார சாரம்)

பாருங்க...' என்று அன்புத் தொல்லை கொடுத்தார்கள். மிளகாய்ப் பொடி – இட்லி தின்ற நாக்குக்கு ஒன்னும் சரிப்பட்டு வரவில்லை. ஆனாலும் விடவில்லை. 'பாம்பு திங்குற ஊருக்குப் போயிட்டா நடுத்துண்டை கொண்டான்'னு கேட்கணுமாமே. கேட்டேன்!

வயலட் ஓன் – மார்க்ரெட் ஸான் - இருவரும் அங்கே பிஸியான குக்கரி ரைட்டர் ஸாம்!

மனைவிக்கு ஊர் திரும்ப இஷ்டமே இல்லை.

"இங்கேயே இருந்துடணும்னா என்னாங்க செய்யணும்?"

"முஸ்தபா சென்டர்ல தொலைஞ்சு போன பாஸ்போர்ட், தொலைஞ்சதாகவே இருக்கணும். அப்பக்கூட ஊருக்குள்ளே உலாத்தவுட மாட்டாங்க. உள்ள தள்ளி முட்டிக்கு முட்டி பேத்துருவாங்க."

"சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டா பேசிக்கிட்டே போவீங்களே! சட்டுபுட்டுன்னு 'பேக்' பண்ணிட்டு கிளம்புவீங்களா...?"

உடு ஜூட்!

காலிலும் பையிலும் தென்பிருந்த வரை சுற்றோ, சுற்றோ, சுற்றென்று சுற்றி விட்டு ஒரு வழியாக மறுபடி ஏர்போர்ட் வந்து, மறுபடி ஏர் பஸ் பிடித்து, மறுபடியும் அதே இனிமையோடு உபசரிக்கும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானப் பணிப்பெண்களின் புன் சிரிப்பில் மயங்கி, மறுபடி சென்னை வந்து, மறுபடி ஊருக்குப் போய் சொந்த மனுஷர்களைப் பார்த்த போது அவர்கள் கேட்ட முதல் கேள்வி :

"சிங்கப்பூரில் கிராமங்கள் உண்டா?"

சுமார் 32 கி.மீ. சுற்றளவுள்ள மிக மிகச் சிறிய நாடு என்று சொல்வதை விட, திட்டமிட்டு அமைக்கப்பட்ட மிக மிக நவீன நகரம் என்றுதான் கூற வேண்டும். நம் சென்னை மாநகரத்தை விடச் சிறியது. (பரப்பளவில், மக்கள் தொகையில் மட்டும்!)

உலகச் சந்தை –

சுற்றுலா மையம் –

இந்த இரண்டு துருப்புச் சீட்டுகளையும் சீரிய கவனத்துடனும் படுநுட்பத்துடனும் கையாண்டு ஆடி, பலத்த உலகப் போட்டியில் ஜெயித்திருக்கிறார்கள்!

'வாழ்க்கை மேம்பாட்டில் சுவிட்ஸர்லாந்தைத் தாண்டி விட வேண்டும்' என்ற லட்சியப் பயணத்தில் முனைப்புடன் செயலாற்றி வருவது மக்களின் ஒவ்வொரு அசைவிலும் தெரிகிறது!

உழைப்பு – உழைப்புக்கேற்ற ஊதியம்; உற்சாகம் – அதற்கேற்ற வாழ்க்கை முறை; கட்டுப்பாடு – அதற்கேற்ற சமூக, சட்ட அமைப்பு என்று திட்டமிட்டு வாழ்கிறார்கள்.

—பி.ஜி.பி. இசக்கி



உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் ஒரே விடை : எஸ்டி அசோசியேட் பில்டர்ஸ். சென்னை நகரில் டீலக்ஸ் ஃப்ளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க முன்னணி நிறுவனங்கள் மூலம் கடன் வசதி பெற, சுலபத் தவணைகளில் வீடு வாங்க, மேலும் விவரங்கள் அறிய தொடர்பு கொள்ளுங்கள்.

CREATORS NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LIMITED

2nd Floor, 26,
Ranganathan St.,
T.Nagar,
Madras - 600 017.
INDIA
Ph: Off: 4340224/
4340210.
Res.: 2345244
Fax: (044) 2344333



அன்பான வேண்டுகோள்!

மேலே புகைப்படத்தில் உள்ள இக் குழந்தைகள் சிவானந்த குருகுலத்தில் தங்களுடைய பேருத வியாலும், அரசு உதவியாலும் அடைக்கலம் பெற்று அமைதியான முறையில் வளர்கின்றனர். லாவண்யா என்று நாங்கள் பெயரிட்டு அழைக்கும் குழந்தையும் அஞ்சலி என்ற குழந்தையும் செங்கல்பட்டு மருத்துவமனை மற்றும் தாம்பரம் பூங்காவில் ஆதரவற்ற நிலையில் 60 நாள் சிசுவாக கிடைக்கப் பெற்று உங்களுடைய உதவியால் எல்லாப் பயனும் நல்கி தங்களுடைய எதிர் காலத்தை எதிர்நோக்கிக் கொண்டுள்ளனர்.

தீபாவளித் திருநாள் ஒரு தேசீய பண்டிகை. இத்திருநாளில் இக்குருகுலத்திற்கு உதவி செய்து வரும் அனைத்து நன்கொடையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் எல்லா நன்மைகள் கிடைக்கவும், இத் தீபாவளி திருநாளை கொண்டாடவும் இக்குருகுலக் குழந்தைகளும், முதியோர்களும் பிரார்த் திக்கின்றனர். வசதியுள்ளவர்கள் அவரவர் வசதிக்கேற்ப பண்டிகைகளும், விழாக்களையும் கொண்டாடும் போது ஆதரவற்றோர், கைம்பெண்கள், முதியோர், பார்வையற்றோர், காது கேளாதோர், மனநிலை பாதிக்கப்பட்டோர், ஊனமுற்றோர் மற்றும் பலர் யாரிடம் யாசிப்பது? கலியுகத்தில் இப்படிப்பட்ட வர்களுக்கு உதவி செய்வது ஆண்டவனுக்கு செய்யும் பணி என்று வேதங்களும், பைபிளும், குரானும் மற்ற மதங்களும் பறைசாற்றுகிறது.

சிவானந்த குருகுலத்தில் 250 ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இத் தீபாவளி திருநாளை கொண்டாடவும் அவர்களுக்கு புத்தாடைகள், இனிப்புகள், பட்டாசுகள் வாங்க நிதியுதவி தேவைப் படுகிறது. இச் செய்தியை படிக்கும் ஒவ்வொரு அன்பரும் தலா ரூபாய் ஒன்று நன்கொடை அனுப்பி வைத்தால் கூட இப்புனித காரியம் சிறப்பாக நடந்தேறும். மேலும் துணியாகவோ, பட்டாசுகளாகவோ, இனிப்புகளாகவோ மனமுவந்து நன்கொடை கொடுத்து உதவி செய்யுமாறு வேண்டுகிறோம். காசோலை, டிராப்ட் மற்றும் மணியார்டர் மூலமாக நன்கொடை வழங்குமாறும் இவ்வேண்டுகோளை இக் குழந்தைகள் நலனை முன்னிட்டு கோரப்படுகிறது.

சிவானந்த ஆசிரமக் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரி இலாகா வின் பிரிவு 80G படிவத்தின்படி வருமானவரி விலக்கு சான்றிதழ் உண்டு. நன்கொடையாளர்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ. 20, கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.
தொலைபேசி எண் : 2369078, 402354

இருட்டு அரண்மனைகள்

7

'துண்டிக்கப்பட்ட கரத்தில், பச்சை குத்தப்பட்ட சின்னம் ஒளாவர் வடிவம்' என்று அனுபமா கூறக் கேட்ட வினாடியிலிருந்து இன்பசாகரனின் கம்ப்யூட்டர் மூளை அதன் பல்வேறு பரிமாணங்களையும் அலச ஆரம்பித்து விட்டது.

அது ரொம்பப் பிரபலமான சின்னம். சூரியா சுவாமியின் சாந்தி ஆசிரமத்துக்கு உரியது. உதகையின் சந்தடியை விட்டு விலகி, மலைப் பாதையில் எட்டு, பத்து கிலோ மீட்டர் சென்றால் அந்த ஆசிரமம் இருப்பதாக அவனுக்குத் தெரியும். ஆனால் போனதில்லை. இப்போது போக வேண்டிய தருணம் நெருங்குகிறதா?

மேலதிகாரியிடம் பேசிய போது "இடிக்குதே" என்றார்.

"என்ன சார்?"

"ஒளாவர் சின்னத்தின் தாத்பர்யம் தெரியுமா?"

"மும்மதமும் சம்மதம். – அதாவது இந்துமதம், இஸ்லாம், கிறிஸ்துவ மதம் எல்லாம் ஒரே இறுதி லட்சியத்துக்குத்தான் பாதை வகுக்கின்றன. ஒளாவரின் மூன்று வட்டங்களும் மூன்று மதங்களைக் குறிக்கும். இங்கே இவைதானே பிரதானம்..."

"அது மட்டுமில்லே. மனம், வாக்கு, காயம் என்ற மூன்று அம்சங்களும் தூய்மை என்ற அடிப்படையில் செயல்பட வேண்டும். கீழே ஒரு பீடம் இருக்கு பாரு ஒளாவர்ல, அது தூய்மை; அதுக்கு மேலே மற்றது."

"நீங்க போயிருக்கீங்களா சார்?"

"ஓ! பிரமாதமான இடம். குருஜி எனக்கு தங்குவதற்கு ஒரு காட்டேஜ் தந்தார். ஃபைவ் ஸ்டார் வசதி கெட்டுது!"

"எப்ப போனீங்க சார்?"

"நாலைஞ்சு வருஷம் இருக்கும். உள்ள நுழையற கேட்டுக்கு மேலே வரவேற்பு வளைவிலேயே லைட் ப்ளூ கலர்ல ஒளாவர் சின்னம் எடுப்பா தெரியும். குருஜிக்கு நீலம்தான் பிடிக்கும். ஆகாயம் நீலம், கடல் நீலம், கடவுள் நீலம் அப்படின்னுவாரு."

"ரொம்பப் பெரிய தத்துவமா இருக்கே ஸார்!"

"என்னய்யா கிண்டலா? இங்க இருந்துட்டு இப்படித்தான் பேசுவே. ஒரு தடவை நேரில் பார்த்துட்டா அவர்தான் தெய்வம்னுவே."

"அது சந்தேகம்தான் சார். ஆனா அவர் குடியிருக்கிற இடம் தெய்வீக அழகு வாய்ந்ததுன்னு ஒப்புக்கறதுல சங்கடம் இல்லே."

"ஐயோ! அதை ஏன் கேக்கறே! கேட்டைத் தாண்டி உள்ளே நுழைஞ்சா மலைச் சரிவுகள்ல பேரி, செர்ரி, பிளம், ஆப்பிள் மரங்களின் தோப்புங்க. இடையிடையே சலசலன்னு இறங்கி ஓடும் ஓடைங்க. அங்கங்க குடிசைகள் மாதிரி தங்கறதுக்கு வசதியான காட்டேஜுகள். பிரதான ஆசிரம கட்டட வாசல்ல ரோஜா தோட்டம். அதுக்கு மத்தியில ஒளாவர் வடிவத்துல செயற்கைக் குளம். அதில அளவா ஐந்தாறு நீலோத்பலங்கள்..."

"குருஜி எப்படி ஸார்?"

"எவனாவது செக்ஸ் சாமியாரை நினைச்சுக்கிட்டு ஒப்பிட்டுப் பார்த்து குழப்பிக்காதே! நெருப்பு! கிட்ட நெருங்கினா நம்ம பாபங்களைப் பொசுக்கும்; கெட்ட எண்ணங்களை சாம்பலாக்கும்! காவி உடுத்தறதில்லே. லைட் ப்ளூ பைஜாமா, குர்தாதான். ரொம்ப சிம்பிள். கழுத்துல தொங்கற நீளமான பெரிய ருத்திராட்ச மாலைதான் அவரை மத்தவங்களிடமிருந்து வித்யாசப்படுத்திக் காட்டும். அஃப்கோர்ஸ், முகத்துல இருக்கிற தேஜஸ்..."

கி.ராஜேந்திரன்

"உங்களுக்கு ரொம்ப ஈடுபாடுன்னு தெரியுது."

"எனக்கு மட்டுமென்ன? அவரைக் கடவுளாவே மதிக்கிற எத்தனையோ பேர் இருக்காங்க. அதுனால நான் 'சரண்டர்' ஆயிட்டதா நினைக்காதே. ஏதும் தப்பு நடக்குதுன்னு தெரிஞ்சா பாயத் தயாராயிருக்கேன். ஆனா, பொய்த் தகவல், அல்லது கற்பனைகளை நம்பி ஏதும் நடவடிக்கை எடுத்தே, தொலைஞ்சோம்!"

"ஏன் சார்? சபிச்சுடுவாரா?"

"அவர் ஏன் சபிக்கிறார்? அன்புமயமான வராச்சே! கருணையே கடவுள்னு உருகுவாரே."

"பின்னே?"

"உனக்கு எல்லாம் விண்டு சொல்லணும். பெரிய இடத்து கனெக்ஷன்பா. எத்தனை மந்திரிங்க, தொழிலதிபருங்க, அவர் காலடில விழுந்து கிடக்கிறாங்க தெரியுமா?"

"போலீஸ் அதிகாரிங்க, சி.பி.ஐயைச் சேர்ந்தவங்களை விட்டுட்டீங்களே சார்."

"உனக்கு எல்லாமே இண்டலாத்தான் இருக்கு."

"அதோட டவுட்டாவும் இருக்கு. எதையும் சந்தேகக் கண்ணோட பார்க்கத்தானே நமக்கு பயிற்சி கொடுத்திருக்காங்க."

"டெக்ஸ்ட் புக் சமாசாரமெல்லாம் வாழ்க்கைக்கு சரிப்பட்டு வராது."

"போய் ஒரு நோட்டம் விட்டுட்டு வந்தா என்ன?"

"வரி செலுத்தறவன் தயவுல ஊட்டில ஒரு ஹாலிடேக்கு வழி பண்ணிக்கறே. தம்பதியா போறீங்களா, இல்லே 'தம்'மை விட்டுட்டு பதி மட்டும் போகுதா?"

"பெண்டாட்டியை அழைச்சுப் போனாலும் அவ செலவை நானே ஏத்துக்கறேன் சார்."

"யோசிச்சுப் பாரு; மதங்களிடையே நல்லிணக்கமே உயர்நோக்கமாகக் கொண்ட சூரியா சுவாமி, மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் தூய்மையை வற்புறுத்தும் குருஜி, எதுக்காக மதத் துவேஷத்தை யாரோ வளர்ப்பது போல நாடகம் நடத்தணும்? அகில பாரத ஹிந்து பரிவார் கட்டடத்துக்கு குண்டுவைக்க ஏன் ரகசிய ஏற்பாடு செய்யணும்?"

"பரிவார்காரங்க மதத் தீவிரவாதிகள் சார். இந்து ராஜ்யம்னு பேசறவங்க."

"ஆனா பிற மதங்களை வெறுக்கிறவங்களும் இல்லே."

"அப்படித்தானே சார் சொல்லிக்க முடியும்? இவங்களுக்கு அரசியல் நோக்கம் இருக்கு. சூர்யா சுவாமிக்கு அரசியல் தலைவர்களிடம் செல்வாக்கு இருக்கு..."

"அதனால...?"

"இவங்க பிரபலமடையறது அவருக்குப் பிடிக்காம இருக்கலாம்; இவங்களோட வளர்ச்சி ஆபத்தானதுன்னு அவர் நினைக்கலாம்."

"யாருக்கு ஆபத்து?"

"சமுதாய ஒற்றுமைக்கு; ஏன், சூர்யா சுவாமிக்கே கூட!"


ஸீனியர் பெருமூச்சு விட்டார். "ஊட்டி டிரிப் அடிக்கிறதுக்கு இதெல்லாம் காரணம் இல்லே; எதுவுமே சரியா பொருந்தலேன்றது உனக்கே தெரியும். 'மனசுக்குள்ளே என்னமோ குடையுது; பக்ஷி சொல்லுது'ன்னு டிராவல் பர்மிஷன் கேட்க முடியாது. அதுக்காக என்னென்னமோ அடுக்கறே."

"இந்தத் தடவை நீங்க ஜெயிச்சுட்டீங்க ஸார்" என்றான் இன்பசாகரன்.

'எப்பவுமே நான்தான்யா ஜெயிப்பேன்' என்று மேலதிகாரி கூறவில்லை. அவர் தர்க்கம் புரிவதெல்லாம் பல்வேறு கோணங்களையும் அலசிப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே. 'இன்று தர்க்கத்தில் ஜெயிக்கலாம்; நாளை கிடைக்கக்கூடிய சாட்சியம் நமது வாதத்தைத் தகர்க்கலாம்' என்பதை அறிந்தவர் அவர்.


இந்தத் தொழிலில் தோல்விகளை அடிக்கடி சந்திக்க நேரிடும் என்பதை இன்பசாகரனும் புரிந்து கொண்டிருந்தான். ஒரு துப்பு கிடைக்கும். அதைத் தொடர்ந்து செயல்பட, ஏமாற்றமே மிஞ்சும். சந்தேகத்தின் பேரில் ஒரு நபரைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடையும் போது, அந்தக் கேஸில் நடந்தது என்ன என்பதாக நாம் உருவாக்கி வைத்துள்ள ஒரு 'தியரி'க்கு சாதகமாக ஒரு விஷயம் கூட கிட்டாமல் போகும். ஆனாலும், சோர்வடையாமல் தொடர்ந்து செயல்பட வேண்டும். புதிய கோணங்களில் சிந்தித்து, புதிய பாதை வகுத்துச் செல்லத் தயங்கக் கூடாது.

ரஷ்யாவிடமிருந்து ஃபோன் வந்த போது அவளை சந்தித்து பல



"நீதான் மூக்கும் முழியுமா இருக்கியே... கொத்திண்டு போயிடமாட்டானா."

—கே.ஜி.மூர்த்தி



நாட்கள் ஆகி விட்டன என்ற நினைவு தோன்றியது.

"எனக்கு பயமா இருக்கு ஸார்" என்ற அவள் குரலில் நடுக்கம் இருந்தது. "யாரோ என்னை ஃபாலோ பண்ணிட்டே இருக்காங்க."

"அது நாங்க ஏற்பாடு பண்ணின சி.ஐ.டி. யாத்தான் இருக்கும்."

"இல்லே சார், இந்த ஆளு வேற. விவரமா பேசணும். வீட்டுக்கு வரவா, இல்லே ஆபீஸுக்கா?"

"உன்னை யாரோ ஃபாலோ பண்றாங் கன்னா, நீ என்னை சந்திக்க வரது உனக்கு ஆபத்தா முடியக்கூடும்."

"அப்ப பொது இடத்திலே சந்திப்போம். மியூஸியம் வாசல்ல டைனசார் சிலை இருக் குல்ல, அங்க காத்திருக்கேன்."

"எங்கேயிருந்து பேசறே?"

"நான் என்ன, செல்லுலார் ஃபோனா வைச் சிருக்கேன்? பி.ஸி.ஓ.தான். பாக்கெட் மணில ஒரு ரூபாய் அவுட்."

"இயல்பா நடந்துக்க; வீட்டுக்குப் போக பஸ் ஏறு..."

"இடையில ஆட்டோ நிற்கிற ஸ்டாண்ட் ஒண்ணுல இறங்கி, சரேல்னு ஆட்டோவுக்குத்

தாவி, மியூஸியம் வாசலுக்கு வந்து சேர்றேன்!"

சற்று தொலைவிலேயே யமாஹா நிறுத்தி, யாரும் பின்தொடரவில்லை என்று நோட்டம் பார்த்துக் கொண்டு, பிரும்மாண்ட ஜுராஸிக் பார்க் நாயகனை நெருங்கினான். காத்திருந்தான். கடிகாரம் பார்த்தான்.

சிலையைச் சுற்றி வந்து அவன் கண்ணில் படாமல் ஒளிந்திருந்தவள், 'திடும்'மென்று தோன்றி, புன்னகையில் கன்னங்கள் குவிய வேர்க்கடலைப் பொட்டலம் நீட்டினாள். "ஐஸ் கிரீம் வாங்கித் தர அளவுக்கு துட்டில்லை சார். கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்த பாக்கெட் மணியையும் ஆட்டோக்காரனுக்கு அழுதாச்சு. காந்தி தாத்தா டிபன்தான்."

அந்தக்கணமே அவனுக்குப் புரிந்து போயிற்று : 'ஏமாற்றி விட்டாள்.'

"ரஸியா இது என்ன விளையாட்டு?"

"நீங்களா வரக் காணும்; அதனால ஃபோன் பண்ணி வரவழைச்சேன்."

"எதுக்கு நான் வரணும்?"

"என்ன இப்படி கேட்டுட்டீங்க? ஒரு பெண்ணை ஆபத்துல சிக்க வைத்து விட்டு, அப்புறம் எட்டிப் பார்க்காமலேயே இருப்பதா? உங்க கடமையை நினைவூட்டினேன்."

அவன் நெடுமூச்சு விட்டு தலையசைத்தான். "நாட்டி கேர்ல்!"

"எனக்கு பஜ்ஜின்னா ரொம்பப் பிடிக்கும், சார்!"

அடக்க முடியாமல் சிரித்து, எதிரே இருந்த ஓட்டலுக்கு அழைத்துப் போனான். "ஒரு பிளேட் வெங்காய பஜ்ஜி, போர்ன்விடா, காப்பி."

பஜ்ஜியில் பளபளத்த எண்ணெயைப் பார்த்து விட்டு, "அளவா சாப்பிடு; நாளைக்கு ஏதும் உடம்புக்கு வந்தா என்னைத் திட்டாதே!" என்றான்.

"அப்ப ஷேர் பண்ணிக்குங்க" என்று எச்சில் தட்டை மையத்துக்கு நகர்த்தினாள்.

"ரஸியா கொஞ்சம் சீரியஸா நடந்துக்க. என்னை இங்கே வரவழைச்சதுல என் நேரத்தை வீணடிச்சது மட்டுமில்லே; உன்னையும் என்னையும் ஆபத்துக்கு உள்ளாக்கியிருக்கே."

"அதுலதான் த்ரில்! நெஞ்சை தொட்டுச் சொல்லுங்க; என்னைப் பார்க்கணும்கிற ஆசை உங்களுக்கு எழவே இல்லையா?"

'இல்லை' என்று பொய் சொல்ல அவன் மனம் ஒப்பவில்லை. ஆனால் அவளைப் பற்றிய கவலை உணர்வுதான் அதில் அதிகம் என்பதை விளக்கினான்.

"அப்படி எண்ணி உங்களை நீங்களே ஏமாத்திக்கிறீங்க; உண்மையை சந்திக்க பயப்படுறீங்க!"

"ரஸியா! இது என்ன அபத்தமான பேச்சு? நான் கல்யாணமானவன்."

"அதனால? கல்யாணமானால் காதல் தோன்றாதா?"

"இது நீ படிச்சிருக்கிற மில்ஸ் அண்டு பூன் புத்தகங்களிலே வர டயலாக்."

"அதையெல்லாம் எதுக்கு ஸார் படிக்கணும்? உங்க கண்களைப் படிச்சாலே போதுமே! என்னைப் பார்த்ததுமே அதுல தோன்றிய பிரகாசம்.. சந்தோஷம்..."

"ரஸியா! நீ டூ மச்சா போறே... அடிக்கடி என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கறே... எனக்குக் காலாகாலத்துல குழந்தை பிறந்திருந்தா அதுக்கு உன் வயசிலே பாதி இருக்கும்."

"அப்ப குழந்தை இல்லையா? ஐ ஆம் ஸோ ஸாரி ஸார். உங்க மனசை புண்படுத்திட்டேன்" என்று மேஜை மீது இருந்த அவன் கரத்தை இடது உள்ளங்கையால் பொத்தினாள். குரலில் மகிழ்ச்சிதான் கொப்பளித்தது.

கரத்தை மெல்ல விடுவித்துக் கொண்டு காப்பி உறிஞ்சினான்.

"டைவோர்ஸ் பற்றி எப்பவாவது யோசிச்சிருக்கீங்களா ஸார்?"

"பஜ்ஜி சாப்பிட்டாச்சா? போகலாமா?" என்றான்.

சட்டென்று அவள் கண்கள் குளமாயின. "தப்பா பேசிட்டேனா ஸார்? என் நாக்கை அறுத்து எறியணும். எப்பவுமே எனக்கு வாயாடின்னுதான் பேரு."

"நல்ல பேர் வாங்கினா அதைக் காப்பாத்திக்க முயற்சி செய்யணும். கெட்ட பேர் வாங்கினா அதை மாற்றிக்க முயற்சி எடுக்கணும்."

அவள் கை உதறி விட்டு எழுந்தாள். "வரேன் சார்" என்று கூறி, வாஷ்பேசின் அருகே இரு வினாடிகள் நின்று, வாசலுக்கு விரைந்தாள்.

அவசரமாக பில் பெற முடியாததால் கல்லாவில் இருபது ரூபாய் வைத்து விட்டு படி இறங்கிய போது, அவள் நடைபாதையில் வெகு தூரம் போய் விட்டிருந்தாள். திலையின் மேல் உத்தரத்தைப் பற்றியபடி சரக்கு மாஸ்டர் எட்டிப் பார்த்து விட்டு, கல்லாவில் இருந்தவனை நோக்கிக் கண்ணடிக்க, இன்பா அவளைப் பின்தொடர்ந்து ஓடினான்.

எட்டிப் பிடித்து, நிறுத்திய போது அவள் கலபமாகத் திரும்பி அவன் நெஞ்சில் முகம் புதைத்து விம்மினாள். "நான் தப்பு பண்றேன்னு எனக்கே தெரியுது ஸார். ஆனா தவிர்க்க முடியாம தவிக்கிறேன்" என்று கேவலுக்கிடையே அவள் கூற, நடுத்தெரு என்பதையும் மறந்து, அனுதாபத்துடன் அவள் முதுகைத் தடவினான்.

மியூஸியம் சுற்றுச் சுவரின் உட்பக்கத்தி லிருந்து டெலிலென்ஸ் நீளமாக எட்டிப் பார்த்தது. காமிரா கிளிக்கிற்று. ரஸியாவும் இன்பாவும் நடுத்தெருவில் ஒருவரை ஒருவர் அணைத்தபடி நிற்கும் காட்சி கோடாக் வண்ணத்தில் பதிவாகியது.

(தொடரும்)

காசி பில்டர்ஸ்
காசி ஹவுசிங் &
டெவலப்மெண்ட் லிமிடெட்

மற்றும்

காசி குரூப் ஹவுஸிங் பெனிபிட் ஸ்கீம் வாடிக்கையாளர்களுக்கு

ஓர் இனிய நற்செய்தி.

சென்னை மாநகரில் 25 ஆண்டு காலமாக 3000-க்கும் மேற்கொண்ட வீடுகளை கட்டிக் கொடுத்து சாதனை படைத்து வரும் காசி குரூப் நிறுவனம் பொது மக்களின் வேண்டுகோளிற்கிணங்க தற்போது மதுரை, திருச்சி, பெங்களூர், கோயமுத்தூர், குண்டூர் ஆகிய பெரு நகரங்களிலும் தங்களின் ரசனைகளுக்கேற்றபடி வீடுகள் கட்டித்தர கிளை அலுவலகங்களை திறக்க உள்ளது. வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவையான இடங்களில் வீடு பெற அருகாமையிலுள்ள எங்களது கிளை அலுவலகங்களில் அணுகி தங்களுக்கு ஏற்ற திட்டத்தில் வீடு பதிவு செய்தும் மற்றும் வைப்பு நிதி திட்டத்தில் முதலீடு செய்தும் பயன்பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

எங்களது கிளை அலுவலங்கள் திறப்பு விழாவினை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு கீழ்கண்ட சலுகைகளும், பல்வேறு பரிசுப் பொருள்களும் வழங்குகிறோம்.

★ 31-08-95 முதல் 15-09-95 வரை வைப்பு நிதியில் முதலீடு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும், முன்பே வைப்பு நிதி செய்தவர்கள் புதிதாக முதலீடு செய்யும் வண்ணம் வழக்கமாக வழங்கப்படும் ஊக்கத் தொகையுடன்

24% வட்டி மற்றும் அதிகபட்ச 5% ஊக்கத் தொகையுடன் சிறப்பு ஊக்கத் தொகையாக 2% கூடுதலாகவும் வைப்புநிதி தொகையில் 1% மதிப்புள்ள பரிசுப் பொருளும் வழங்கப்படும்.

முன்பே முதலீடு செய்தவர்கள் 1% சிறப்பு பரிசுப் பொருளை 16-09-95-லிருந்து 30-09-95-க்குள் தங்களுக்கு அருகிலுள்ள எங்களது கிளை அலுவலகங்களில் தங்களிடமுள்ள வைப்புநிதி சான்றிதழை காண்பித்து பரிசுப் பொருளை பெறலாம்.

காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம் :-

இத்திட்டத்தில் ரூ. 1500/- முதல் ரூ. 50,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 300 முதல் 1000 சதுர அடிகள் வரை உள்ள வீட்டினை தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை வாடகைபோல் வீட்டிலிருந்து கொண்டே செலுத்தலாம். இத்திட்டத்தில் பதிவு செய்பவர்களுக்கு முதல் மாதத் தவணைத் தொகையில் 50% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும். இச்சலுகை 15-09-95 வரை மட்டுமே.

சுலபத் தவணை சுபமங்களா திட்டம் :-

இத்திட்டத்தில் ரூ.10000/- மட்டுமே முன்பணமாகச் செலுத்தி சொந்த வீடு பெறலாம். மீதமுள்ள தொகைக்கு நாங்களே கடனுதவி ஏற்பாடு செய்கிறோம்.

மதுரையில் வீடு கிடைக்கும் இடங்கள் :


எல்லீஸ் நகர், அண்ணாநகர், எஸ்.எஸ். காலனி, டி.வி.எஸ். நகர்,
அழகப்பா நகர், வேல்முருகன் நகர் மற்றும் மதுரையில் பிரதான இடங்களில்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

காசி பில்டர்ஸ் மற்றும்
காசி ஹவுசிங் & டெவலப்மெண்ட் லிட்.,
No. 246-A, நாயக்கன் புதுத் தெரு,
(சக்தி, சிவம் தியேட்டர் எதிரில்)
(முதல் மாடியில்) மதுரை - 625 001.

KGC

தலைமை அலுவலகம்:
காசி ஹவுசிங் & டெவலப்மெண்ட் லிட்.,
(காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்)
91, 92, ஜவஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 83
போன்: 4822206, 4821969, 4825506, பேக்ஸ்: 044-4825606





1995 செப்டம்பர் 17
யுவ ஆவணி 32
மலர் : 54
இதழ் : 7

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.




கலாட்டா கல்யாணம்!

குமரி அனந்தன் மிகப் பெரிய தவறு செய்து விட்டார்! முதல்வரின் வளர்ப்பு மகன் திருமணத்தையொட்டி, கடற்கரையில் காந்தி சிலையை மறைத்து அலங்கார அமைப்பு எழ இருந்ததைத் தடுத்து நிறுத்திவிட்டார்.

காந்திஜி கண்டித்து, வெறுத்த அத்தனை ஆடம்பரங்களும் அவர் சிலையின் முன் கடைவிரிக்கப்பட்டன. அந்த அலங்கார அமைப்பை மட்டும் நீக்காமல் இருந்திருந்தால் அவருக்கு நேர்ந்த இந்த அவமானமாவது தவிர்க்கப் பட்டிருக்கும்.

'காந்தியமென்றால் கிலோ என்ன விலை?' என்று கேட்கும் ஜெயலலிதா, சென்னை நகரத்தையே சர்க்கஸ் கூடாரமாக்கி சராசரி மக்களுக்கு வித்தை காட்டினார். போதாக்குறைக்கு டெலிவிஷன் மூலமாக அத்தனை தமாஷாவும் மக்களின் வீடுகளையும் எட்டியிருக்கிறது.

முதல்வரின் குடும்ப நிகழ்ச்சிக்காக ஏராளமான கறுப்புப் பணம் செலவழிக்கப் பட்டிருப்பது தெள்ளத் தெளிவு. இத்தகைய அநீதியும் அதிகார துஷ்பிரயோகமும் வரிப்பண விரயமும் மட்டுமின்றி சென்னை நகரவாசிகளுக்கு ஏற்பட்ட இடையூறும் துன்பமும் சொல்லொணாதவை.



'இதையெல்லாம் தட்டிக் கேட்பாரே இல்லையா?' என்று ஒருவருக்கொருவர் வேதனையுடன் பேசி அங்கலாய்த்த நேரத்தில், நீதிமன்றம் சென்று வழக்குத் தொடர்ந்த வக்கீல்கள் யூனியனையும் இதர பல வழக்கறிஞர்களையும் பாராட்ட வேண்டும்.

தக்க சமயத்தில் இவர்கள் செயல்பட்டதால்தான், 'பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது' என்றும் 'அத்தியாவசியப் பணிகள் தடைபடாமல் நடைபெற வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்ற ஆணையாவது கிடைத்தது.


எது எப்படியிருந்தாலும் புதுமண தம்பதிகளுக்கு நமது வாழ்த்து உரியதே. செப்டம்பர் ஏழாம் தேதியை அவர்கள் மட்டுமல்ல, தமிழகமே மறக்க முடியாதபடி செய்துவிட்டார் ஜெயலலிதா!

பெண்கள் மாநாடு போதித்த பாடம்!

பெய்ஜிங்கில் நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டில், பேனசீர் புட்டோ காஷ்மீர் பிரச்னையைக் கிளறியது, அபஸ்வரமாக ஒலித்திருக்கிறது. அவருக்குப் பதில் சொல்ல இந்திய உறுப்பினர்கள் நிர்ப்பந்திக்கப்பட, மாநாட்டின் போக்கு திசை திரும்பிவிட்டது.

தீவிரவாதம் கோலோச்சும் எந்தவொரு இடத்திலும் பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்காது என்பதுடன், பொது மக்களுக்கும் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணம் இருக்கும்.

காஷ்மீரில் பெண்களுக்கு எதிரான வன்முறை நிகழ்ந்து வருகிறது என பேனசீர் குற்றம் சாட்டிய அதே நாளில்தான், ஸ்ரீநகரில் ஒரு பெண் தீவிரவாதி கொடுத்த



பார்ஸல் குண்டுக்குப் பலியாகியிருக்கிறார் ஓர் அயல்நாட்டு டீ.வி. நிருபர்!

எனவே தீவிரவாதப் பிரச்னைக்குப் பெண்கள் பிரச்னை என்ற பூச்சுக் கொடுத்து, அதை பெய்ஜிங்கில் மேடையேற்ற முயன்றதில் அர்த்தமில்லை.

இதே அரங்கில், சீனாவில் நடக்கும் மனித உரிமை மீறல்களை விளாசித் தள்ளி சர்ச்சை கிளப்பியிருக்கிறார் ஹிலாரி கிளின்டன்.

அரசு சார்பற்ற அமைப்புகள் போட்டி மாநாடு நடத்த, ஐ.நா. சபை ஏற்பாடு செய்த பெய்ஜிங் மாநாட்டுத் தீர்மான வாசகங்கள், அதில் பங்கேற்கும் நாடுகளுக் கிடையேயான கருத்து வேறுபாடுகள் காரணமாக, கடைசி நிமிடம் வரை திருத்தப் பட்டு வருகின்றன.

மொத்தத்தில், பெய்ஜிங் பெண்கள் மாநாடு பெண்களுக்காக எதையாவது சாதித்திருக்குமானால், அதெல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, உலக நாடுகளுக் கிடையேயான அரசியல் சிக்கல்கள்தான் முக்கிய செய்தியாகிவிட்டன.

போதாக் குறைக்கு, சீன மாநாட்டுக்குச் சென்ற மிகப் பெரிய குழுக்களில் இரண்டாவதான நமது இந்தியக் குழுவிலோ, ஆரம்பம் முதலே குழப்பம் - தலைமை பொறுப்பு குறித்த போட்டி, மனக்கசப்பு.

குழு உறுப்பினர்களான ஒரு சில எம்.பி.க்கள், மாநாட்டு அரங்குக்கு வெளியே வெராந்தாவில் உட்கார்ந்து கொண்டு 'நாங்கள் இங்கு வந்ததே நேர விரயம்தான்' என்று முத்து உதிர்த்திருக்கிறார்கள்!

இத்தகைய தலைவர்களை நம்பாமல் பெண்கள் தங்கள் மென்கரங்களைத் தாங்களே பலப்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனம்.

சோம. வள்ளியப்பன்

ஸ்கூட்டர்

கம்பி கேட்டை ஒரு கையால் திறக்க முயன்றான். மறுகையில் மொபெட் வண்டி. இயலாது போக, பின்பு மொபெட்டை ஸ்டாண்டு போட்டு விட்டு, கேட்டைத் திறந்தான். உள்ளே இரண்டாம் நம்பர் பிளாட் அம்மா வாசலில் நிற்பது தெரிந்தது. கஷ்ட காலம், மொபெட்டை உள்ளே நிறுத்தி விட்டு வந்து இந்த கேட்டுச் சனியனை திரும்ப மூடி விட்டுப் போக வேண்டும்.

'ஆளாளுக்கு கேட்டைத் துறந்து போட்டுட்டுப் போனா... எவ மூடிக் கிட்டு இருக்குறதாம்? உனக்கென்ன, மாடிப் பிளாட்டு... ஆடு, மாடு உள்ள நுழைஞ்சா மாடியா ஏறப் போவுது?'

கருப்பாய், குண்டாய்... அப்பப்பா... உருவத்தை விட பேச்சு உக்கிரம்... வாயைத் திறந்தால் வன்மம்தான். ராகவனுக்கு இரண்டாம் நம்பர் அம்மாவைப் பார்த்தாலே கொஞ்சம் அச்சம்தான்.

மொபெட்டையும் சுவற்று ஓரமாக நிறுத்த வேண்டும். பாதையையும் மறைக்கக் கூடாது... முக்கியமாய் இரண்டாம் நம்பர் வீட்டு ஸ்கூட்டர் மீதும் பட்டு விடக்கூடாது... பொரிந்து விடுவாள் பொரிந்து.

தலையைக் கவிழ்த்தபடி மாடி ஏறினான்... 'எல்லாருந்தான் காசு குடுத்து பிளாட்டு வாங்கி இருக்கோம். கீழ் பிளாட்டுல இருந்துக்கிட்டு என்னமோ இவுங்கதான் வீட்டு சொந்தக்காரங்க மாதிரியும், மத்தவங்கல்லாம் குடித்தனக்காரங்க மாதிரியுமில்ல... ராச்சியம் நடத்துறா இவ...'

மாடி வந்ததும் சுதந்தரமாய் உணர்ந்தான். ஜில்லென்று காற்று வீசியது. அவன் பிளாட் கதவு திறந்தே இருந்தது. சோபா மேல் ராஜனுடைய யூனிபார்ம் சட்டையும் டையும்; யாருமில்லாத ஹாலில் ஓடியபடி ஃபேன்; மூலைக் கொன்றாய் ரம்யாவின் ஸாக்ஸுகள்..... கதவுகள் மேலெல்லாம் துவைத்த ஈரத்துணிகள்.

மைதிலி அடுக்களையில் இருந்தாள். தலையில் இடித்த ஒரு ஈர பனியனைக் கோபமாகத் தள்ளியபடி கத்தினான்.

"என்ன கண்றாவி இது.. துவைச்சதை வெளியில கம்பியில காயப் போடாம... வீடெல்லாம்...?"

"ம்... என்னையக் கேளுங்க... கோவமா! சொந்த வீட்ல குடியிருக்குற மாதிரியா இருக்கு? சனியன்... ஸ்கூட்டர்கார ராணி ஆர்டர். இனி யாரும் வெளிக் கம்பியில துணி காயப் போடக் கூடாதாம். அவ வீட்ல... தண்ணி சொட்டுதாம். இந்தப் பிரச்னை வந்து ஒரு வாரமாகுது. உங்களுக்கு இந்த வீட்ல நடக்குறது என்ன தெரியுது?"

"போட்டா என்ன பண்ணிருவாளாம்?" கைலிக்கு மாறியபடி கேட்டான்.

"மேல அஞ்சாம் நம்பர் மாமி நேற்று காயப் போட்டிருக்காங்க. 'ஸ்கூட்டர் ராணி' என்ன பண்ணியிருக்கா தெரியுமா? அவ வீட்டு ஒட்டடைக் கம்புல, இன்னொரு கம்பு ஓசி வாங்கிக் கட்டி, மாமி வீட்டுத் துணியை எல்லாம் மந்தியானமா எடுத்துத் தூக்கி குப்பைத் தொட்டில போட்டுட்டாளாம்..."

அடுக்களையிலேயே ஸ்டூலில் அமர்ந்து காப்பி சாப்பிட்டபடி யோசித்தான். கணவன் - மனைவி இரண்டு பேருமே பொல்லாதவர்கள். மைதிலி கதை கதையாய் சொல்லியிருக்கிறாளே!

பிளாட்டில் உள்ள மற்ற ஐந்து வீடும் ஒரு கட்சி. அவர்கள் மட்டும் ஒரு கட்சி. கந்து வட்டிக்கு கொடுக்கிறார்கள். பணம் வாங்கிச் செல்வதெல்லாம் இல்லாதவர்கள்தான். வராத வட்டிக்கு அந்த அம்மாள் போடும் சத்தம் காது கொடுத்துக் கேட்க முடியாது.

"நம்பளை மாதிரி அவனுக்கு வீட்ல வேலையே இருக்காதாங்க? சதா.. இருபத்து நாலு மணி நேரமும் வாசல்லயே நின்னுக்கிட்டு பிளாட்டுல நடக்குறது மொத்தத்தையும் கடுவன் பூனை கணக்கா நோட்டம் விட்டுக் கிட்டு..."

"பார்த்தா பார்த்துட்டுப் போறா... உங்களுக்கு என்ன?"

"பாத்திட்டு சும்மாவா இருப்பா? சாயங் காலம் புருஷன் பொண்டாட்டியா வெளிய கிளம்பிட்டா வயிறெரிஞ்சிடுவா! சிங்காரிச்சிக்கினு கிளம்பிட்டா... அப்படிம்பா. அப்பப்பா. இந்தத் தெருவுக்கே இவ தான் மாமியாரு மாதிரி..."

மைதிலி, மாமி, பேங்க்கார வீடு... பெங்காலி மேடம் எல்லோருக்குமே 'ஸ்கூட்டர் ராணி'யைக் கண்டால் பிடிக்காது என்பதை விட பயம் என்பதுதான் சரி.

"இந்தக் கண்றாவியெல்லாம் தொலைச் சிட்டு.. அக்கடான்னு ஒரு வாரம் எங்கயாவது



ராணி

சத்தியமா தெலுங்கு டப்பிங் இல்லீங்க!

போய் இருக்க முடியுதா? உங்களால ஆபீசுக்கு லீவு போட முடியுமா? தினம் இதுங்களுக்குள்ள கிடந்து மாய வேண்டியிருக்கு..."

மைதிலியின் நெடுநாள் ஆதங்கம் இன்றும் ஒருமுறை வாசிக்கப்பட்டது.


"அது சரி.. புள்ளைங்க எங்கே?"

"ராஜனும் ரம்யாவுமா? மொட்டை கிரவுண்டுக்கு விளையாடப் போயிருக்காங்க. இவ சினாம்பர ஸ்கூட்டர் நிக்குதுன்னு... புள்ளைங்க கீழ விளையாடக் கூடாதே! சீ.. இப்படியுமா ஒரு பொம்பளை இருப்பா.. அன்னைக்கு எதிர் பிளாட்டுக்காரப் பையன் 'பந்தத் தாங்க ஆன்ட்டி'ன்னு கேட்டிருக்கான். கூட நம்ம ராஜனும் நின்னிருக்கான். 'செருப்பால அடி நாயே, போங்கடா'ன்னு இருக்கா. எனக்கு வயித்தைப் பத்திக்கினு எரியுது... புள்ளைகளை வையுறா... அதான் ஆண்டவன் இவளுக்கு ஒரு குழந்தை தராம வச்சிருக்கான்..."

குழந்தைகள் கிரௌண்டிலிருந்து விளையாடி விட்டு வர, படிப்பும் முடிந்து சாப்பிட்டுப் படுத்தார்கள். ராகவனுக்கு மைதிலியைப் பார்க்க, பாவமாக இருந்தது. சரி, இந்த டெண்டர் வேலை முடித்து விட்டால் நாலு நாள் லீவு கேட்கலாம். குழந்தைகளையும் மைதிலியையும் எங்காவது கூட்டிச் செல்லலாம் என திட்டமிட்டான்.

லீவுக்கு பர்மிஷனும் கிடைத்தது. உடன் மேனேஜர், அவர் உபயோகப்படுத்தாத ஹாலிடே ரெசார்ட் டைம் ஷேரையும் நாலு நாளைக்குக் கொடுக்க, ராகவனுக்கு ஏக சந்தோஷம்.

விஷயத்தை மைதிலிக்கு திடீரென்று சொல்லி சந்தோஷப்பட வைக்க வேண்டுமென்று யோசித்து, வேலைகள் செய்தான். ஆயிற்று. இரண்டு நாளில் கிளம்ப வேண்டும், கொடைக்கானலுக்கு. அனைத்தும் தயார். மைதிலிக்கு மாலை சொல்லி, அவள் படும் சந்தோஷத்தைப் பார்க்க வேண்டும் என ஆவலாய் இருந்தான்.



"எதிர்க்கட்சியில இருந்த நீங்க ஏன் ஆளுங் கட்சில சேர்ந்தீங்க?"

"போராட்டம், கிளர்ச்சி, உண்ணாவிரதம்... இந்த மாதிரி பிரச்னைகளெல்லாம் என்னோட உடல் நலத்தை பாதிச்சிடும்னு குடும்ப டாக்டர் சொல்லிட்டார்... ஹி... ஹி...!"

— சீர்காழி வி. ரேவதி

மொபெட் நிறுத்துகையில் இரண்டாம் நம்பர் வீட்டு வாசலில் 'ஸ்கூட்டர் ராணி' இல்லாததும் சந்தோஷத்தை அதிகப்படுத்தியது. லேசாய் சீட்டி அடித்தபடி மாடியேறினான். டிக்கெட்டுகள், கொடைக்கானலில் தங்கும் அறை காகிதங்களை மேஜை மேல் பரப்பினான். மைதிலியை தற்செயலாகப் பார்க்க வைத்து, மெலிதாகத் துவங்கி ஆச்சரியத்தில் அவள் முகம் விரிய விரிய பெருமைப்பட்டான்.

"எஸ்.. நாம இன்னும் ஜஸ்ட் இரண்டே நாளில் - அதாவது நாளன்னிக்கு மறுநாள்..." வீடே குதூகலித்தது.

"அது சரி.. என்ன ஸ்கூட்டர் ராணி வீட்ல யாரையும் காணோம்?"

"தெரியலைங்க.. இரண்டு நாளாச்சு. வீடு பூட்டிக் கிடக்கு. அடச்சே! அவுங்க இல்லாததை இங்க இருந்து அனுபவிக்க முடியாம போயிடும் போலிருக்கே! இப்பப் பார்த்து டூர் போறோமே!"

மைதிலி சந்தோஷமும் கேலியுமாய்ச் சொல்ல.. குழந்தைகள் கூடச் சிரித்தன.

ஊருக்குக் கிளம்ப வேண்டிய அன்றைக்கு முதல் நாள் மதியம் சில பொருட்கள் வாங்கிக் கொண்டு ராகவன் இரும்பு கேட்டைத் திறக்கையில் கவனித்தான், இரண்டாம் நம்பர் வீட்டில் பிளாட்டுப் பெண்கள் நின்றிருந்தனர். மைதிலியும் நின்றிருந்தாள்.

ராகவனைப் பார்த்ததும், உடன் மாடிக்கு வந்தாள். படியேறுகையிலேயே விஷயத்தைப் போட்டு உடைத்தாள்.

"ஸ்கூட்டர்காரர் இரண்டாங்கல்யாணம் பண்ணிக்கிட்டாராம்... இவளைத் தள்ளி வைச்சிடப் போறாராம்..."

"ஏன்...?"

"கல்யாணமாகி பத்து, பன்னெண்டு வருஷமாகுதுங்க... பிள்ளையே பொறக்கலையே..."

மிகவும் சரிதான் என்பது போல அவள் குரல் இருந்ததோ...

அந்த விஷயம் எங்கள் எல்லோருக்கும் படு ஆச்சர்யம். ஆனால் ஸ்கூட்டர் ராணி கலங்கவே இல்லை என்பது போல இருந்தது. மற்ற பெண்களும் மைதிலியும் கூடிக் கூடிப் பேசினார்கள்.

ராகவன் ஒருவனாகவே ஊருக்குப் போகும் மூட்டைகள் கட்ட வேண்டியிருந்தது. மைதிலி அதிகம் கலந்து கொள்ளவில்லை. இரவு சாப்பிட்டு விட்டுப் படுத்தார்கள். காலை சீக்கிரம் எழ வேண்டும்.

மைதிலி சரியாகவே பேசவில்லை. முகமும் 'உம்' என்று இருந்தது. என்ன கோபமோ! ராகவன் நெருங்கி அமர்ந்தான்.

"என்ன உடம்பு கிடம்பு சரியில்லையா...?"

"..........."

"ஹலோ... மேடம்... உங்களைத்தானே! என்ன டல்லா இருக்கீங்க?"

"சீ... என்ன ஆம்பளைங்களோ! பிள்ளை பிறக்கலைங்கறதுக்காக கட்ன பொண்டாட்டியே வேணான்னுட்டு..." - கண்கள் கலங்கி... முகம் சிவந்து, அழுது விடுவது போல அரற்றினாள்.

"பாவம்... இனி அவ போயிர வேண்டியதுதானா? எவ்வளவு வடிச்சுக் கொட்டியிருப்பா... எவ்வளவு நல்லது கெட்டது பார்த்திருப்பா! இவ்வளவு நாள் குடித்தனம் பண்ணிட்டு, கூசாம டைவர்சாம்.. இன்னொரு கல்யாணமாம்.. தூ.. கொடுமைக்கார ஆம்பிளைங்க.. இன்னொரு பொம்பளை கட்டிக்கிட்டு அவன் நல்லாயிருந்துருவானா?"

குப்புறப்படுத்துக் கொண்டே மைதிலியை வியப்பாகப் பார்த்தான் ராகவன்.

"சரி... சரி... விடு. இதுக்கெல்லாம் போய் 'அப்செட்' ஆயிகிட்டு... நாளைக்கு ஆரம்பிக்குது நம்ம ஜாலி டூர்..."

தொட்டுத் திருப்பியவனை திரும்பிப் பார்த்து, "நான் வர்லைங்க..." என்று 'வெடுக்' கென்று சொல்லி விட்டு நகர்ந்து படுத்துக் கொண்டாள்.

'எத்தனை வருடமாய் எதிர்பார்த்த டூர்... வசதி வாய்ப்புகளோடு அமைந்திருக்கும் டூர்... மைதிலிக்கு திடீரென்று சாதாரணமாகி விட்டதா?' ராகவனுக்கு எரிச்சலாக இருந்தது.

குழந்தைகள் தூங்கியபடி இருக்க, கடிகாரத்தின் 'டிக், டிக்' மட்டும் சத்தமாக கேட்டது. நாலு மணிக்கு அலாரம் வைத்திருந்தான்.

பத்து நிமிட யோசனைக்குப் பிறகு ராகவனும் படுத்து விட்டான்.

காலை ஆறரை மணிக்கு விழிப்பு வந்த மைதிலி திடுக்கிட்டு, "என்னங்க அலாரம் அடிக்கலையா? டிரெயின் போயிருக்குமே!"

"போகட்டுமே. நான்தானே அமர்த்தினேன். டூர் இன்னொரு முறை பார்த்துக்கலாம்... இரண்டாம் நம்பர் வீட்டுக்கு ஏதும் தேவையான்னு பாரு... ஐயாவுக்கு நாலு நாள் லீவிருக்கு!"

மைதிலி, ராகவன் கையை அழுந்தப் பற்றினாள் சந்தோஷமாக.

• பியாந்த்சிங்



பஞ்சாபுக்கு விழுந்த அடி!

"மதச்சார்பின்மையும் அமைதியும்தான் ஒரு நாகரிக சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படைத் தேவைகள்!" என்று பொதுக் கூட்டங்களில் எல்லாம் முழங்கி வந்தவர் பியாந்த் சிங். தமது பேச்சுக்களில் எல்லாம் இதை எவ்வளவு வலியுறுத்தினாரோ, அதே அளவுக்கு முழுமையாக அதில் நம்பிக்கையும் வைத்திருந்தார்.

லட்சியம் என்று பெரிதாக எதையும் பியாந்த்சிங் வைத்துக் கொள்ளவில்லை. பஞ்சாபில் பழையபடி மக்கள் சகஜ வாழ்க்கை வாழ வேண்டும். இந்த ஒரு குறிக்கோள்தான் அவருக்கு. முழுக் கவனமும் இதில்தான் இருந்தது. மற்ற பிரச்னைகள் எல்லாம் இரண்டாம் பட்சம்தான்.

அதனாலேயே பொருளாதாரத்தில், தொழில்துறையில் எல்லாம் கணிசமான முன்னேற்றம் கண்டது பஞ்சாப். தம் தொழிற்சாலைகளையும், சொந்த நிலபுலன்களையும் எப்படியாவது விற்று விட்டு, உத்தரபிரதேசம் அல்லது தில்லியில் குடியேறி விட நினைத்திருந்த ஆயிரக்கணக்கான பஞ்சாபிகள், அந்த எண்ணத்தை உதறி விட்டு, தமது தொழிலிலும், இயல்பான வாழ்க்கையிலும் ஈடுபாடு கொள்ள முடிந்தது என்றால், பியாந்த் சிங்கின் ஆட்சி தான் காரணம்.

பஞ்சாயத்து, நகராட்சித் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார் பியாந்த் சிங். 92-ல் நடந்த தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ள மறுத்த அகாலிகளும் மிதவாதிகளும் கூட, பிறகு இடைத் தேர்தல்களில் போட்டியிடத் தீர்மானித்தது பியாந்த் சிங்குக்குக் கிடைத்த இன்னொரு வெற்றி. பழையபடி பொதுக் கூட்டங்களும் பேரணிகளும் எந்தவித அசம்பாவிதமும் இன்றி நடக்கத் தொடங்கின. நகரங்களுக்கு இடையே இரவிலும் கூடப் போக்குவரத்து வாகனங்கள் பயமின்றிப் போய் வரும் அளவுக்குப் பஞ்சாப் நிலைமை சீரடைந்தது; பழைய சகஜ நிலை திரும்பியது!

போலீஸ் தலைமை அதிகாரி கே.பி.எஸ். கில்லுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்து, அரசியல் தலையீடுகள் எதுவும் இன்றி ஒதுங்கிக் கொண்டார். தீவிரவாதிகள் விஷயத்தில் போலீசின் மனித உரிமை மீறல்கள் சில சமயங்களில் சுட்டிக் காட்டப்பட்டன. ஆனால் தேசிய மனித உரிமை கமிஷன் கூட, பியாந்த் சிங் அரசை இந்த விஷயத்தில் மிகுந்த கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டதாகவே குறிப்பிட்டிருக்கிறது!

86-க்கு முன்னால் பியாந்த் சிங்கைப் பலரும் தேசிய அளவில் அறிந்திருக்கவில்லை. 1992 தேர்தலில் வெற்றி பெற்ற பியாந்த் சிங், முதல்வர் பொறுப்பு ஏற்ற போது, அவரை அறிந்தவர்களுக்கு எல்லாம் வியப்பும் கவலையும் எழுந்தன – இப்படி ரிஸ்க் எடுக்க வேண்டுமா என்று. அவருடைய எதிரிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள்; ஆனால், தம் குறிக்கோளில் முழு நம்பிக்கை வைத்திருந்த பியாந்த் சிங் அவர்களை ஏமாறச் செய்தார். அதனாலேயே அவர் மறைவுக்கு பஞ்சாப் முழுதும், 'ஒரு மனிதனாய்', எழுந்து நின்று இன்று கண்டனம் தெரிவித்தது.

பஞ்சாபில் அமைதியை உருவாக்கியதை ஒரு பெரிய சாதனையாக காங்கிரஸ் கட்சி சொல்லி வந்தது. இப்போது அதற்கும் விழுந்திருக்கிறது ஒரு பலத்த அடி!

- சாருகேசி



உறவுகள் தொடரட்டும் மகிழ்ச்சிகள் பெருகட்டும்

- ★ காலம் காலமாய் நிலைத்திருக்கும் உறவுகள் இனிமையானவை.
- ★ ஸ்ரீராம் சிட்ஸ்க்கும் அதன் 10 லட்சம் சந்தாதாரர்களுக்குமிடையே நிலைத்து நீடிக்கும் உறவைப்போல.
- ★ உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள சுலபமான வாய்ப்பை ஸ்ரீராம் அளித்து வருகிறது. இன்று நேற்றல்ல; கடந்த 22 வருடங்களாக.
- ★ கௌரவமான முறையில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் வாய்ப்பு. தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப விரைவாக உங்கள் பணத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள உதவும் வாய்ப்பு.
- ★ குடும்பத்தின் ஒரு தலைமுறையோடு நின்று விடுவதில்லை. அடுத்த, அதற்கடுத்த தலைமுறைக்கும் தொடர்கிறது.

திருமதி. எஸ். சீதாலட்சுமி சான்று கூறுகிறார்:

"என் மாமனார் ரெயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். அதைத் தொடர்ந்து கிடைத்த தொகையைக் கொண்டு என் மூத்த நாத்தனாரின் திருமணத்தை நடத்தி முடித்தார். அதன் பின்னரும் ஒரு தொகை மீதமிருந்தது. அதைக் கொண்டு, எப்போதோ வாங்கிப் போட்டிருந்த மனையில் வீடு கட்டத் தொடங்கி விட்டார். எல்லா வேலையும் முடிந்து, மின்சார வசதிக்கான பணிகள் பாக்கியிருந்தபோது கையிருப்பு தீர்ந்து விட்டது. அப்போது அவருக்கு உதவியது ஸ்ரீராம் தான்.



நான் கணிதத்தில் பட்டம் பெற்றவள். ஒரு பிரபல நிறுவனம் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி விளம்பரப் படுத்தியிருந்தது. நானும் எழுதிப் போட்டேன். நேர்முகத் தேர்வில் எனக்கு வெற்றி கிடைத்தது. அடுத்தது வேலையில் சேர வேண்டியது தான். ஆனால் ஒரு நிபந்தனை. ரூ.5000 டெபாசிட் கட்ட வேண்டும்! இந்தச் சந்தர்ப்பத்திலும் உதவிக்கு வந்தது ஸ்ரீ ராம்தான்.

- எஸ். சீதாலட்சுமி,
சென்னை - 600 011

தொடரும் இனிய உறவுகள்!

★ நிலைத்து நீடிக்கும் இத்தகைய உறவுகள் ஒரு குடும்பத்தோடு நின்றுவிடுவதில்லை. சமூக நடவடிக்கையாக, சமுதாயப் பண்பாடாகப் பல்வேறு வடிவங்களில் இடம் பெற்று வருகின்றன. அந்த இனிய பண்பாட்டுக்கு ஸ்ரீராம் தலை வணங்குகிறது.

கடல் கடந்த இனிய உறவு

அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திலும் தமிழ்சங்கங்கள் உள்ளன. விழாக் காலங்களில் அனைவரும் ஒன்று கூடி மகிழ்கிறார்கள். அந்தந்த மாநிலத் தமிழ் சங்கத்தலைவரிடம் அந்தந்த மாநிலத்தில் உள்ள தமிழர்கள் பற்றிய விவரங்கள் உள்ளன.

டெக்சாஸ் மாநிலத்தில் ஆஸ்டின் தமிழ் சங்கத்தின் கூட்டங்கள் நடைபெற டெக்சாஸ் பல்கலைக் கழகம் தன் மிகப் பெரிய பட்ஸ் ஹாலைக் கொடுத்து உதவுகிறது. இங்கு ஒவ்வொரு ஆண்டும் தியாகராஜ உற்சவமும் நடைபெறுகிறது. எல்லாரும் கூடி பஞ்சரத்ன கீர்த்தனைகள் பாடுவது மிகவும் இனிமை.

பொதுவாக, நடத்தப்படும் ஒவ்வொரு விழாவிலும் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் மகிழ்ச்சியோடு பங்கு கொள்கின்றனர். விழா முடிவில் விருந்தும் நடைபெறும்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சிகாகோ தமிழ் சங்கம் பாரதியார் தினம் கொண்டாடியது. சிகாகோவில் சுமார் 2000 தமிழர்கள் வசிக்கிறார்கள். ரிச்சர்ட் பர்ட்டன் ஹாலில் நடை பெற்ற இவ்விழாவில் இவர்கள் அனைவருமே கலந்து கொண்டார்கள்.

இதுபோலவே, ஒவ்வொரு மாநிலத்திலும் தமிழ்சங்கங்கள் திறம்பட இயங்கி வருகின்றன. இவை நடத்தும் விழா வைபவங்களில் இந்தியர் மட்டுமின்றி வெளிநாட்டவரும் கலந்து கொள்வது வியப்பூட்டும் உண்மை.

உறவுகள் வலுப்படும்போது, நாடு-இன வேறுபாடுகள் மறைந்து விடுகின்றன.

- எஸ். சந்திரா,
சென்னை - 600 028.

காமராஜர்: கனிவின் சிகரம்; கண்டிப்பின் உருவம்!

ஒரு மனிதர் - அதுவும் முழுநேர அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருப்பவர், இப்படியெல்லாம் கூட இருக்க முடியுமா என்று நான் நினைத்து, நினைத்து வியப்படைந்தது, காமராஜ் அவர் களுடன் பழகிய போதுதான்.

எப்பேர்ப்பட்ட வாய்ப்பு அது! அவரோடு நெருங்கிப் பழகக் கிடைத்த சந்தர்ப்பங்களை, எனக்குக் கிடைத்த மிகப் பெரிய அதிர்ஷ்டம் என்றே சொல்வேன். எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய வாய்ப்பா அது!

1954.

காமராஜர், தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று ஒரு மாதம் ஆகியிருந்தது. அந்த மே மாதக் கடைசியில்தான் நான் சேலத்திலிருந்து மாற்றலாகி, ராமநாதபுரம் மாவட்ட எஸ்.பி. ஆகப் பொறுப்பேற்றிருந்தேன். மிகவும் இளைஞன். இருபத்தொன்பது வயதுதான், அப்போது எனக்கு.

இன்றைக்கு மூன்று மாவட்டங்களாகப் பிரிந்து விட்டது. அன்று ஒரே - மிகப் பெரிய மாவட்டமாக இருந்தது. திருப்பத்தூர், காரைக்குடி, தேவக்கோட்டை ஏரியாவெல்லாம் பெரிய வியாபாரத் தலங்கள். ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி - தொழில் சாம்ராஜ்ஜியம். கிழக்கு ராமநாதபுரம் முழுக்க, வளர்ச்சி அடையாத பின்தங்கிய பகுதி. வெறும் இருபத்தொன்பது வயது இளைஞனான நான், அத்தனை பெரிய ஏரியாவின் சட்ட-ஒழுங்குப் பிரச்னைகளைக் கண்காணிக்க வேண்டியவனாக இருந்தேன்.

மிகப் பெரிய பொறுப்பு. கடினமானதும் கூட. நான் பணியில் சேர்ந்து, தீவிரமாக ஈடுபட ஆரம்பித்த இரண்டாவது வாரம், முதல்வர் காமராஜ், ராமநாதபுரத்திற்கு சுற்றுப் பயணம் வருவதாக அறிவித்தார்.

அது அவரது சொந்த மாவட்டம். முதல்வரானபின் முதல் முறையாக வரும் சுற்றுப் பயணம் வேறு. மக்கள் உற்சாகத்துக்குக் கேட்பானேன்?

கடல் மாதிரி கூட்டம். அலை அலையாக உற்சாகக் கூக்குரல். தங்கள் மண்ணின் மைந்தனே இம் மாநிலத் தலைவராக வலம் வருவது பார்க்க, ஒவ்வொருவர் முகத்திலும் பரவச மத்தாப்பு.

பொழுது விடிந்ததிலிருந்து, நிலவு ஊர்வலம் கிளம்பும் வரை காமராஜ் கிராமம் கிராமமாகச் சுற்றினார். மக்களை நேரில் சந்தித்துப் பேசினார். குறைகளைக் கேட்டுக் குறித்துக் கொண்டார். தெரிந்தவர்களை நலம் விசாரித்தார். தெரியாதவர்களையும் அன்போடு அணுகினார்.

ஒரு அலுப்பு? ஒரு களைப்பு? ஒரு முகச் சோர்வு?

மாறாத கனிவே அவரது கம்பீரம்! ஆடம்பரம் துளியும் இல்லாத எளிமையே அவரது ஆபரணம்.

அவர் மாதிரி சுற்றுப்பயணம் செய்பவர்கள் இன்று யாருமே கிடையாது! வெறுமனே நகர்ப் புறச் சாலைகளில் காரில் பவனி வருவதல்ல; பாதைகளில்லாத கிராமங்களுக்கும், இண்டு இடுக்குகளுக்கும், யாரும் எட்டிப் பார்க்கக் கூடத் தயங்கும் பகுதிகளுக்கும் வலிந்து, விரும்பிப் போவார். பாமர மக்களைச் சந்திப்பதில் அவருக்கு இருந்த ஆர்வத்தை வெறும் வார்த்தைகளில் கோக்க முடியாது!

அன்று விருதுநகர் - சுற்று வட்டார கிராமங்கள் முழுதும் சுற்றி விட்டு இரவு ஓய்வு எடுக்கத் திரும்பி இருந்தார். மாவட்ட போலீஸ் சூப்பரின்டென்டெண்ட் என்ற முறையில் நானும், கலெக்டரும் உடன் போயிருந்தோம். அவரை டிராவலர்ஸ் பங்களாவில் விட்டு விட்டு, நான் பக்கத்து விடுதியில் இருந்த என் அறைக்குத் திரும்பினேன்.

ஐந்து நிமிடங்கள் ஆகி இருக்கும். என் அறைக் கதவு தட்டப்பட, போய்ப் பார்த்தேன். காமராஜ் அவர்களின் ப்யூன் நின்றிருந்தான்.

"உங்களை உடனே ஐயா வரச் சொன்னார். யூனிஃபார்ம் எதுவும் அணியத் தேவையில்லை. எப்படி இருக்கீங்களோ, அப்படியே வரச் சொன்னார்."

நான் வெறும் வேட்டி - சட்டையில் இருந்தேன்.

அத்தனை அவசரமாகக் கூப்பிடுகிறாரென்றால்...?

சி.வி.நரசிம்மன்

நான் சட்டென்று கதவைப் பூட்டிக் கொண்டு, அப்படியே கிளம்பி விட்டேன்.

காமராஜ், தன் அறையில் எனக்காகக் காத்து இருந்தார். என்னைப் பார்த்ததும், "வாங்க தம்பி" என்று வரவேற்றார். உட்கார வைத்து, அன்றைய அனுபவங்கள் பற்றிக் கொஞ்ச நேரம் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு, பின் விஷயத்துக்கு வந்தார்.

"அதுல பாருங்க, இது நமக்கு சொந்த ஊர் இல்லீங்களா? அடிக்கடி வந்து, போயிட்டு இருப்பேன். நீங்க ரொம்ப இளைஞரா தெரியறீங்க. புதுசா ஜாயின் பண்ணி இருக்கறதாகவும் கேள்விப்பட்டேன். இங்க நான் வரும்போதெல்லாம் நெறைய பேர் கூடவே வந்து, நெருங்கிப் பழகறதைப் பார்ப்பீங்க.



கடல் மாதிரி கூட்டம்.
அலை அலையாக
உற்சாகக் கூக்குரல்.
தங்கள் மண்ணின் மைந்தனே இம் மாநிலத்
தலைவராக வலம் வருவது பார்க்க,
ஒவ்வொருவர் முகத்திலும்
பரவச மத்தாப்பு.

அப்புறம் நான் போன பிறகு, 'காமராஜ் இதை செய்யச் சொன்னாரு; அதை மாத்த சொன்னாரு'ன்னு உங்களண்ட வந்தாங்கன்னா, அதையெல்லாம் பொருட்படுத்த வேணாம் நீங்க. யாருக்காகவும் எதுவும்செய்ய வேணாம், கேட்டுக்கங்க. உங்களுக்கு எது சரி, எது நியாயம்னு படுதோ அதை மட்டும் செய்யுங்க. என் பேரை சொல்லிக்கிட்டு வர்றவங்களைப் பொருட்படுத்த வேண்டாம்னு சொல்ல வர்றேன். விளங்குதுங்களா? நீங்க என்ன செய்தாலும், அடுத்த முறை நான் வர்றப்ப தகவல் சொல்லிடுங்க. அது போதும். எனக்கு ஏதாவது முக்கியமான தகவல் கிடைச்சி, அது உங்களுக்கும் தெரியணும்னு நான் விரும்பினா, நானே அதை உங்களண்ட சொல்லி, அது தொடர்பா நீங்க எடுக்க வேண்டிய நடவடிக்கையை சொல்லி விடுவேன். மூணாவது மனுசங்க யாரையும் அனுப்ப மாட்டேன், பாத்துக்கிடுங்க. இதைச் சொல்லத்தான் கூப்பிட்டு அனுப்பினேன்."

சிலிர்த்து விட்டது எனக்கு! வெறும் இருபத்தொன்பது வயது இளைஞன் நான். இத்தனை மரியாதையாகக் கூப்பிட்டு, பேசி... அதுவும் தர்மசங்கடமான ஒரு விஷயத்தை இத்தனை பட்டவர்த்தனமாகப் போட்டு உடைத்து...

என் கடமைக்கு இடையூறு வரலாம் என்பதை அறிந்து, எதையும் ஆரம்பத்திலேயே பேசித் தீர்த்து விட விரும்பிய அவரது வேகம், விவேகம் என்னை மலைக்கச் செய்தது! அந்த சந்தோஷத்திலேயே எனக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லை!

பின்னாளில் என் பணியில் நான் கடைபிடித்த சில நல்ல நெறிமுறைகளுக்கும் கொள்கைகளுக்கும் அன்றைய - காமராஜ் அவர்களுடனான அந்த முதல் சந்திப்பு தான் காரணமாக இருந்தது என்பதை இங்கே குறிப்பிடத் தோன்றுகிறது.

குடும்பம், கட்சி, ஆட்சி, பதவி இவை எல்லாவற்றையும் விட மக்கள் நலனை அவர் மிகப் பெரிதாகக் கருதினார். சமூகத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழை எளியவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் அவர் சூழலை மறந்து நெகிழ்ந்து உருகுவதை நான் பார்த்திருக்கிறேன்.

அருப்புக்கோட்டையில் ஒரு தரம் பொதுக் கூட்டத்தில் பேச வந்திருந்தார். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் வெறும் தலைகளாகவே தெரியும் அளவுக்குக் கூட்டம்!

பேசி முடித்து, மேடையை விட்டுக் கீழே இறங்கும் போது கூட்டம் அவரை நெருக்கியது. மக்களைக் கட்டுப்படுத்த இயலாமல் போலீஸ் திணறியது.

அப்போது, அங்கே ஒரு சிறுவன் - ஆடு மேய்ப்பவன் - கால் ஊனம் உற்றவன் - நெரிசலில் சிக்கி, கீழே விழப் போன சமயம் - சட்டென்று அருகே இருந்த நான், கவனித்து, அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டேன்.

காரில் ஏறுவதற்காக வந்துகொண்டிருந்த காமராஜ், இக்காட்சியைக் கண்டவுடன்,

அப்படியே சிலையாக நின்று விட்டார். சிறுவனை நோக்கியபடியே இருந்த அவர் கண்களில் 'கரகரவென்று நீர் பெருகுவதைக் கண்டேன். நெகிழ்ந்து போனேன்.

"ஏழைப் பையன். கால் வேற சரியில்லாத வன். ஆடு மேய்க்கறதுதான் அவனோட உலகம். உடுத்த ஒழுங்கா ஒரு சட்டை கூடக் கிடையாது. இவனுக்கெல்லாம் எப்ப இந்த நாட்டுல விடிவு வரப் போகுதோ?"

அவர் வாய் பேசவில்லை. விழிகள் பேசின!

ஆனால் அவரது இளகிய மனசை யாராவது தவறாக உபயோகித்துக் கொள்ள முயன்றால் அது மட்டும் சாத்தியமில்லை!

ஒரு உதாரணம் பாருங்கள்.

விருதுநகரில் மிகவும் செல்வாக்கான ஒரு மனிதர். காமராஜுக்கு ரொம்பவும் நெருக்கமானவர். சுதந்தரப் போராட்ட காலத்திலிருந்தே அவரது நண்பர்.

காமராஜ் முதல்வரானதும் நிச்சயம் அவரை அமைச்சராக்கி விடுவார் என்று தொகுதியில் பலமான வதந்தி உலவி வந்தது. ஆனால் அது நடக்கவே இல்லை.

ஏன்?

ரொம்ப நாட்களாகவே நிரடிக் கொண்டிருந்த இவ்விஷயத்தை நான் வேறொரு எம்.எல்.ஏ.விடம் ஒரு தரம் கேட்டேன். அவரும் காமராஜுக்கு நெருக்கமானவர்தான்.

"நான் சொல்றேன், தலைவர் குடுக்க மாட்டாரு பாருங்க! சுதந்திரப் போர் கால கட்டத்துல, ஏதோ ஒரு விஷயத்துக்காக நிதி திரட்டற பொறுப்பை தலைவர் (காமராஜ்) அவருகிட்ட விட்டிருந்தாருங்க. அதுல ஏதோ தப்பு நடந்திருச்சி போல! அப்பயிலருந்து தலைவருக்கு அவர் மேல நம்பிக்கை போயிடுச்சி! பழகுவாரு. பேசுவாரு. ஆனா பொறுப்பு எதும் தர மாட்டாரு பாருங்க."

கடைசியில் நடந்ததும் அதுதான்!

மனிதர்களை எடைபோடுவதில் அவருக்கு ஈடு இணை கிடையாது!

குறிப்பிட வேண்டிய இன்னொரு விஷயம், அவரது கண்ணியம். அந்தக் காலத்தில் திராவிட இயக்கங்கள் தீவிரமாகப் பரவ ஆரம்பித்திருந்தன. ராமநாதபுரம் மாவட்டத்தில் எதிர்க்கட்சியும் பலமானதாகவே இருந்தது. அப்போது. மிகப் பெரிய எதிரணி சக்தியாக முத்துராமலிங்கத் தேவர் இருந்த சமயம் அது!

போலீஸ்காரனுக்கு ஆளும்கட்சியாவது? எதிர்க்கட்சியாவது? சட்டம்-ஒழுங்கு விஷயங்களில், எல்லாக் கட்சிகளையும் ஒரே நிலையில் வைக்க வேண்டியது அவர்கள் கடமை. அவ்வப்போது என் பணி தொடர்பாக எல்லா எதிர்தரப்பு நபர்களிடமும் நான் பேசி, பழக வேண்டி இருந்தது. கிட்டத்தட்ட நாலரை - ஐந்து வருடங்கள் நான் ராமநாதபுரம் மாவட்ட எஸ்.பி. ஆக இருந்தேன். காமராஜ் காலத்தில், ஒரு தரம் கூட அவர் என்னை இதுபற்றிக் கேட்டது இல்லை. என் பணியில் எனக்கு முழுச் சுதந்திரம் இருந்தது! வேறெந்தத் தலைவரிடம் இந்தப் பண்பைப் பார்க்க முடியும்?

நவம்பர் 30, 1955.

ராமநாதபுரம் மாவட்டக்காரர்களால் அந்த தினத்தை அத்தனை சுலபத்தில் மறக்க முடியாது!

மழையா அது!

ஊழிக்காலம் வந்து விட்டதோ என்று எண்ணும்படியாக அப்படி ஒரு பேய் மழை!

மாவட்டமே ஸ்தம்பித்துப் போக, உடனடியாக அங்கே வந்து விட்ட முதல்வர் காமராஜ், நான்கு நாட்களுக்கு தமிழக அரசையே பரமக்குடியிலிருந்து இயங்கச் செய்த அந்தத் தருணம் வாழ்க்கையில் மறக்கவே முடியாத ஒரு விஷயம்.

(அடுத்த வாரம்)

சரியான கும்பல். காலை ஆறே முக்காலுக்கே தி. நகர் திருமலைப் பிள்ளை ரோடிலுள்ள ஆர்.எம்.வீ வீட்டு முன்னால் தொண்டர்கள் குவிய ஆரம்பித்து விட்டார்கள். அ.தி.மு.க. கரை வேட்டிகளுக்குப் போட்டியாக ரஜினி ரசிகர்கள் வேறு. சற்று நேரத்தில் அந்தப் பகுதியில் போக்குவரத்தே ஸ்தம்பித்து விடும்படியான கூட்டம்! வேன்களிலும் ஆட்டோக்களிலும் கொடி, குரல் பறக்க, படுபயங்கர உற்சாகம்.

ஏழாம் தேதி வளர்ப்பு மகன் திருமண கலாட்டா முடிந்த கையோடு ஒன்பதாம் தேதி ஆர்.எம்.வீயின் பிறந்த நாள் கோலாகலம்!

ரஜினி ஊரில் இல்லாத வருத்தம் எல்லோர் முகத்திலும் பளிச்சென்று தெரிந்தாலும் உற்சாகத்துக்குக் குறைவில்லை.

"ஏதாவது பாடுங்கய்யா" என்று வீட்டு

வீரப்பன் பிறந்த

வாசலில் குழுமியிருந்த கூட்டத்திலிருந்து ஒருவர் குரல் கொடுக்க, "நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற" என்று வாழ்த்த ஆரம்பித்தார்கள் பேண்ட் வாத்தியக்காரர்கள்.

அண்ணா, எம்.ஜி.ஆர். சமாதிகளுக்குச் சென்று அஞ்சலி செலுத்தி விட்டு வெயில் ஏற ஆரம்பிக்கிற நேரத்தில் ஆர்.எம்.வீ. அவசரமாகத் திரும்ப, தொண்டர்களின் உற்சாகம் எல்லை மீறியது! "ஆர்.எம்.வீ. வாழ்க! ரஜினி வாழ்க!" என்று கிளம்பிய கோஷம் போயஸ் தோட்டத்திலும் கேட்டிருக்கும்!

கோயமுத்தூரிலிருந்து வந்திருந்த எம்.ஜி.ஆர். ரசிகர் கருணாகரன், "நீங்க வேணா பாருங்க! அண்ணனை யாராலும் அசைக்க முடியாதுங்க!" என்று உரக்க உணர்ச்சிவசப்பட, "ஆர்.எம்.வீ. வாழ்க" என்று பெரிசாக மார்பில் பச்சை குத்திக் கொண்டிருந்ததை உடனே திறந்து காட்டிய கழகப் பேச்சாளர் நெல்லை மூர்த்தி, "இது இன்னிக்கு இல்லீங்க; பதிமூணு வருஷம் முன்னாலேயே குத்திக்கிட்டது தான்" என்று பெருமிதம் பொங்கக் காட்டிக் கொண்டிருந்தார்.

நடிகர் சங்கத்தில் பிறந்த நாள் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால்



• "அத்தனை பெரிய ஆளல்ல!"

நாளில் ரஜினி ரசிகர்கள்!

அங்கு கிளம்புவதற்கு முன்பே தொண்டர்கள் ஆர்.எம்.வீ. கழுத்தை மாலைகளால் நிரப்ப முட்டி மோத, கொஞ்சம் டென்ஷனாகி விட்டார் வீரப்பன். கோபத்தை வெளிப்படையாகவே காட்ட, "தலைவர் முன்கோபத்தை மட்டும் கொஞ்சம் விட்டுட்டா ரொம்ப நல்லா இருக்குங்க" என்று ஆதங்கப்பட்டார் ஒரு அன்பர்.

முன்னேற்பாடுகள் ஒழுங்காக செய்யப்படாததால் நடிகர் சங்கத்தில் நெரிசலோ நெரிசல். வியர்வை கசகசப்பும் முணுமுணுப்புமாகத் தொண்டர்களும் ரஜினி ரசிகர்களும் நெளிய, ஆர்.எம்.வீ. சட்டென்று மாடி ஏறிப் போய் இடையே கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொண்டு வந்து விட்டார்!

திடீரென்று வெளியே ஒரு பெரும் சப்தம். வந்தவர் சத்யநாராயணா! ரஜினியின் வலதுகை. "வருங்கால முதல்வரின் போர்ப் படை தளபதி வாழ்க!" என்று குரல் கொடுத்தபடி அவர் உள்ளே நுழைய, கொஞ்சம் உற்சாகமானது கூட்டம்.

பத்திரிகையாளர்கள் தமக்குக் கொடுக்கும் ஆதரவுக்கு ரொம்பவே நெகிழ்ந்து நன்றி சொன்னார் ஆர்.எம்.வீ. கூடவே ஒரு வேண்டுகோள் :

"தயவுசெய்து சில தகவல்களைப் பிரசுரிக்கும் முன் என்னை ஒரு வார்த்தை கேட்டுக் கொள்ளுங்கள். அப்படிச் செய்யாவிட்டால், 'எது நடக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ, அதற்கு முரணான காரியங்கள் நடந்து விட வாய்ப்பு உண்டு" என்று பொடி வைத்தார்.

"ஆனால் உங்களைச் சுலபமாக அணுக முடிவதில்லையே?" என்று ஒரு நிருபர் கேட்டதற்கு,

"பத்திரிகையாளர்கள் அணுக முடியாத அளவுக்கு நான் ஒன்றும் அத்தனை பெரிய ஆளல்ல" என்று சட்டென்று பதில் சொல்லவும் கூட்டத்தில் செமை கலகலா!

தமது 70-வது பிறந்தநாளில் ஆர்.எம்.வீ. தம் பலத்தை வெளிப்படையாகக் காட்ட முடிந்தது பற்றி சந்தோஷப்பட்டிருக்கலாம். ஆனால் பரபரப்பான முடிவுகளை, அறிவிப்புகளை எதிர்பார்த்து வந்த அணுக்கத் தொண்டர்களுக்குத் தான் சப்!

- ப்ரியன்




சீனத்
தலைநகர்
பீஜிங் அருகே,
நான்காம்
உலகப் பெண்கள்
மாநாடு நடக்கிறது.
(செப்.4-15)
பெண்களுக்கெதிரான
வன்முறைகளைக்
கண்டித்துத் தீர்மானங்கள்
நிறைவேற்றப்படுகின்றன.
இந்த சமயத்தில்,
பெண்களுக்கே
உரிய
உணர்வுகளைப்
புரிந்து
கொண்டு
அவற்றை
நமதாக்கிக்
கொள்ள
முயற்சி
செய்ய
லாமே

பானை போல் மேடிட்ட வயிறு; முகத்தில் எந்நேரமும் இலேசான களைப்பின் பூச்சு; கண்களில் கொஞ்சம் கனவு; அடிக்கடி எழும் பெருமூச்சு – என்று கர்ப்பிணிப் பெண்ணின் தோற்றத்தை ஆண்கள் அளவெடுத்து வர்ணிக்கலாம். ஆனால் அந்தப் பெண்கள் அச் சமயத்தில் உணரும் அசௌகரியங்களை ஆண்களால் புரிந்து கொள்ள முடியுமா...?

அமெரிக்காவில் முடியும்! Empathy belly என்ற செயற்கைத் தொப்பையை இதற்கென்றே உருவாக்கியிருக்கிறார்கள்.

இதை அணிந்து கொண்ட பத்தே நிமிடங்களில் முதுகுவலி, மூச்சுத் திணறல், அதிக ரத்த அழுத்தம் போன்ற கர்ப்பிணிக்கு உண்டாகக்கூடிய அத்தனை அவஸ்தைகளையும் படுகிறார்கள். காரணம் இந்த 'வயிற்றில்' நாலு லிட்டர் வெந்நீர், சில இரும்பு குண்டுகள் ஆகியவை உள்ளன. கருவின் தலை இருக்கக்கூடிய இடத்தில் இரும்பு குண்டுகள் அடங்கிய பை ஒன்றும் உண்டு. அப்போதுதான் 'உண்மையான' அழுத்தத்தை அனுபவிக்க முடியுமாம்!



• சௌரிராஜன்



• சாரதா - ரவி

'இதை அணிந்து பார்த்த கணவர்கள் தங்களை இப்போது அதிக அனுசரணையாக நடத்துகிறார்கள்' என்கின்றனராம் அங்குள்ள கர்ப்பிணிப் பெண்கள்!

"கர்ப்பிணி மனைவி படும் அவஸ்தையைக் கணவன் புரிந்து கொண்டால் நிச்சயம் அவளை அலட்சியப்படுத்த மாட்டான்" என்கிறார் சாரதா ரவி. விரைவில் தாயாகப் போகிறவர். தம் கணவரிடம் இப்போது இவர் எதிர்பார்ப்பது என்ன?

"ரொம்ப சிம்ப்பிள்! எனக்கு ஆதரவாக நடந்து கொள்ள வேண்டும். என்னை டென்ஷனாக்காமல் இருக்க வேண்டும். அவ்வளவுதான்!"

ரவியை அணுகிய போது (அவர் தன் மனைவியை டென்ஷனாக்குவது இருக்கட்டும்) அவரே டென்ஷனாக இருப்பது புரிந்தது!



• டாக்டர் தாரா



• டாக்டர் மீனாட்சி

"திடீரென்று பொறுப்பு அதிகமாகி விட்டது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டிருக்கிறது. வேளா வேளைக்கு இவள் மருந்து சாப்பிடுகிறாளா என்பதை உறுதிசெய்து கொள்கிறேன். மறந்து விட்டால் கோபம் வருகிறது. அவளது இப்போதைய அவஸ்தைகளைப் பற்றிய உணர்தல் இல்லாத காரணத்தால் அவளுக்குக் குறிப்பிட்ட எந்த உதவியும் செய்ய முடிவதில்லை. இந்த நிலையில், ஏதோ நார்மலாக இருப்பதைப் போல இவள் இஷ்டத்துக்கு உட்காருவதையும் வேகமாக நடப்பதையும் பார்க்கும் போது எரிச்சலாக வருகிறது" என்றார்.

இத்தகைய எரிச்சல் நிச்சயமாக மனைவிமார்களுக்கு உதவாது! எனினும் தாய்மைக்கென்று சில உணர்வுகளும் மனச் சிக்கல்களும் இருப்பது போல் 'தந்தைமை'க்கும் உண்டு என்பதை ரவியின் உணர்வுகள் வெளிப்படுத்துகின்றன.

தாய்மைக்குத் தயாராவது போல் தந்தைமைக்கும் தயாராவது அவசியம் போலும். இதுகுறித்து ஒரு சிலரிடம் பேசிப் பார்த்தோம் :

அப்பா ஆகப் போறீங்களா?

எழும்பூர் மருத்துவ மனையில் பணிபுரியும் மகப்பேறு மருத்துவர் டாக்டர் மீனாட்சி தியாகராஜன் சொன்னார் :

"ரவி போன்ற கணவர்கள் இதுபோன்று டென்ஷனாவது சகஜம்தான். ஆனால் அது தேவையில்

லாதது. கர்ப்பம் என்பது ஒரு பெண்மணியின் வாழ்க்கையில் நடைபெறும் ஒரு சகஜமான விஷயம். அதை ஒரு வியாதி போல எண்ணுவதோ, அந்தக் கட்டத்தில் மருந்து அவசியம் என்று கருதுவதோ அவசியமில்லாதது. எனவே இந்தக் கோணத்தில் தந்தையாகப் போகிறவர்கள் அலட்டிக் கொள்ள வேண்டாம். ஆனால் இந்தக் காலகட்டத்தில் கணவன் செய்ய வேண்டிய கடமைகள் சில உண்டு. அவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

"மனைவி கர்ப்பமாக இருக்கிறாளா என்பதை உறுதி செய்து கொள்ளும் கட்டத்திலேயே (அல்லது குறைந்தபட்சம் உறுதி செய்து கொண்ட உடனேயாவது) மகப்பேறு மருத்துவரிடம் அவளை அழைத்துச் செல்ல வேண்டும். சாதாரண டாக்டர் கூட இதை உறுதி செய்ய முடியுமென்றாலும், கர்ப்பத்தில் ஏதாவது குறைபாடு என்றால் அதை மகப்பேறு மருத்துவர்தான் நுட்பமாக அறிந்து கொண்டு ஆலோசனை மற்றும் சிகிச்சை அளிக்க முடியும். பிரசவத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவமனையில், பிரசவத்தின் போது சிக்கலேற்பட்டால் அறுவை சிகிச்சை போன்றவற்றிற்கான ஏற்பாடுகள் இருக்கிறதா என்பதையும் கணவன் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

"கர்ப்ப காலத்தில் வயிறு வலிக்கிறது, வாந்தி வருகிறது, 'தலை சுற்றுகிறது' என்பது போல் மனைவி அடுக்கிக் கொண்டு போனால், 'இதெல்லாம் இந்தக் காலகட்டத்தில் சகஜம் தான். அலட்டிக்காதே' என்று கூறிவிட்டுக் கணவன் நகர்ந்து விடக் கூடாது. சகஜமாகவே இருந்தாலும், அவற்றைக் காதுகொடுத்துக் கேட்க வேண்டும். இந்த அக்கறை மனைவிக்கு மகிழ்வைக் கொடுக்கும். சுகமான பிரசவத்தில் மகிழ்ச்சியான மனத்திற்கும் பங்கு உண்டு.

"கருவுற்றது உறுதிசெய்யப்பட்டவுடன் சில மாதங்கள் அம்மா வீட்டுக்குச் சென்று தங்குவதும், பிரசவத்தைத் தாய் வீட்டில் வைத்துக் கொள்வதும் (இப்போது ஓரளவு மாறி வருகிறது என்றாலும்) நெடுங்காலமாகவே நடைமுறையில் இருந்து வருவதுதான். இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. பொதுவாகத் தாங்கள் செய்த சமையலைத் தாங்களே சாப்பிடுவது என்பது பெண்களுக்கு இரண்டாம்பட்சமாகவே இருக்கும். எனவே அம்மாவின் கைச் சமையலை சாப்பிடுவது வழக்கமான ஒன்று. தவிர மாமியார் வீட்டில் மருமகன் தங்குவதென்பது அரிதாகையால் கணவன் மனைவிக்கிடையே உடலுறவு என்பது மறைமுகமாகத் தடுக்கப்படுகிறது."

மனைவியின் கர்ப்ப காலத்தில் கணவனுக்கு எழும் சங்கடமான சந்தேகம் இது.

"இந்தச் சமயத்தில் உடலுறவு கொண்டால் அது தாயையோ, குழந்தையையோ பாதிக்கக் கூடுமோ?"

"கர்ப்ப காலத்தில் உடலுறவு கொள்வதற்கு எந்தவிதத் தடையும் இல்லை..." என்றார் டாக்டர் மீனாட்சி.

"ஏற்கெனவே கருச்சிதைவு ஏற்பட்டிருந்தால் மட்டும் இந்த விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கும்படி கூறுவோம்..."

வங்கி ஊழியரான சௌரிராஜன் சில நடைமுறை உண்மைகளைக் குறிப்பிட்டார்.

"இந்தக் காலகட்டத்தில் மனைவியை வேலை செய்யவே விடாமல் கணவன் கவனித்துக் கொள்வதும் தவறான அணுகுமுறை என்று டாக்டர்கள் குறிப்பிடுவதுண்டு. என்னைக் கேட்டால் இதுபோன்ற சமயங்களில் மாலையிலோ, முன்னிரவிலோ மனைவியுடன் குறிப்பிட்ட தூரத்துக்கு தினமும் நடந்து சென்று விட்டு வரலாம். இதனால் அவள் உடலுக்கு உடற்பயிற்சியும் கிடைக்கும். கணவனின் அண்மை, மனத் தெம்பையும் கொடுக்கும். தன்னுடைய உணர்வுகளைக் கணவனுடன் பகிர்ந்து கொள்வதற்கு அது நல்லதொரு சந்தர்ப்பமாகவும் அமையும்.

"என் மனைவி வேலைக்குச் செல்பவள் அல்ல. இதுபோன்ற நிலையில் இருப்பவர்கள் குழந்தைப் பேறு மற்றும் குழந்தை வளர்ப்பு சமயத்தில் பொருளாதாரக் கோணத்திலும் தாக்குப்பிடிக்க முடியும் என்பதை மனைவியிடம் உணர்த்துவது நல்லது. இது அவளது மனத்தின் பய உணர்ச்சியைக் குறைக்க உதவும்" என்ற சௌரிராஜன், "குழந்தை பெற திட்டமிடும்போதே பொருளாதாரக் கோணத்தைப் பற்றி நிச்சயம் சிந்திக்க வேண்டும்..." என்றும் எச்சரிக்கிறார்.

உண்மைதான்! குழந்தை பிறந்த முதல் ஆறேழு மாதங்களில் உணவு, நாப்கின்கள், தடுப்பூசிகள் இவற்றுக்கெல்லாம் ஆகும் செலவு ஒருபுறமிருக்க, பிரசவத்தின் போது மருத்துவமனை செலவு இருக்கும். அதுவும் பிரசவம் நார்மலாக இல்லையென்றால், சிசேரியன் செய்ய வேண்டி வந்தால்... சில ஆயிரங்கள் பழுத்து விடும்.

வேலைக்குப் போகும் மனைவியாயின், குறிப்பிட்ட கால விடுப்பை மீறினால் அவளது சம்பளத்தில் வெட்டு விழும். அதுவரை கணவன், மனைவி இருவர் மட்டுமே இருந்த குடும்பத்தில் இப்போது எண்ணிக்கை நான்காக மாறலாம். இரட்டைக் குழந்தைகள் பிறப்பதைப் பற்றிச் சொல்லவில்லை! குழந்தை பிறந்தால் அதை கவனித்துக் கொள்ள வீட்டோடு ஆயா தேவைப்படுவார்! இதனால் மாதாந்தரச் செலவு அதிகரிக்க வாய்ப்பு உண்டு. இவை

Kalki Shopping Page

கனிவான வரவேற்பு ; பணிவான சேவை ; வலுவான தொழில் முதலீடுகள்.

நடராஜ் பைனான்ஸ்

விழாக்கால டெபாஸிட் சேகரிப்பு

ஆகஸ்ட் 25 முதல் அக்டோபர் 25 வரை

இலவசம் 1 கிராம் தங்கக்காசு

வட்டி 24% P.A. ஊக்கத்தொகை 4% பென்ஷனர் 1%

❑ மினிமம் டெபாஸிட் ரூ.10,000 ❑ காலம் 12 மாதங்கள் ❑

Phone : 4342098, 4840150

NATARAJ FINANCE & INVESTMENTS
NATARAJ CHITS (TAMILNADU) PVT. LTD.,
NATARAJ ESTATES-FARM HOUSE PROMOTERS,
"Shanthi Complex" 3rd Floor, 26, Ranganathan Street, T. Nagar, Madras - 600 017.

BRANCHES : 2 - B, Selvam Nagar, M.C. Road, Thanjavur - 613 007.
1-B, Kamarajar Road, (upstair) Kancheepuram - 631 501.

பெங்களூர் கிளை : விரைவில் எதிர்பாருங்கள்

CHIT & FINANCE	OIL MILLS	EXPORTS	FARM HOUSE	PUBLICATIONS



ESTD : 1955 ஸ்ரீ : Ph : 24823



தீபாவளி கங்கா ஸ்நானமும் தங்க அன்னபூர்ணா தேவி தரிசனமும் கூடிய 19 நாட்கள் கொண்ட காசி யாத்திரை

சென்னையிலிருந்து 14.10.95 & 15.10.95-ம் தேதிகளில் புறப்பட்டு கல்கத்தா கயா காசி – அயோத்யா – அலகாபாத் – அரித்வார் – ரிஷிகேஷ் – லக்ஷ்மணஜுலா – டில்லி, ஆக்ரா – மதுரா – சென்னை வந்து சேர்கிறது. இந்த யாத்திரைக்கு இரு தனி 3 டயர் கேரேஜ் ரிசர்வ் செய்துள்ளோம். கட்டணம் நபருக்கு ரூ. 4875/-, ரூ. 1000 வீதம் அட்வான்ஸ் அனுப்பி ரிசர்வ் செய்து கொள்ள வேண்டும்.

பல அன்பர்களின் வேண்டுகோளின்படி, இந்த தீபாவளி கங்கா ஸ்நான காசி யாத்திரைக்காக ஏற்பாடு செய்துள்ள 2 கேரேஜில் - ஒரு 3 டயர் கேரேஜ் சென்னையிலிருந்து புறப்பட்டு கல்கத்தா, கயா, காசி, நேபாள் – காட்மாண்ட், அயோத்தியா, அலகாபாத், அரித்வார், லக்ஷ்மணஜுலா – டில்லி, ஆக்ரா – மதுரா சென்னை வந்து சேரும்படியான

22 நாட்கள் கொண்ட காசி, நேப்பாள் யாத்திரை


15.10.95- ம் தேதி சென்னையிலிருந்து ஒரு தனி 3 டயர் கேரேஜ் புறப்படுகிறது. ரயில் கட்டணம், காலை காப்பி 2 வேளை போஜனம், நகர் சுற்றி பார்க்கும், பஸ் சார்ஜ், நேபாள் போய் வரும் பஸ் கட்டணம் தங்கும் மகாராஜா பேலஸ் லாட்ஜ் - வாடகை உள்பட நபருக்கு கட்டணம் ரூ. 6375/- ரூ. 1500 வீதம் அட்வான்ஸ் செலுத்தி உங்கள் வயதிற்கு ஏற்றபடி பர்த்துகளை ரிசர்வ் செய்து கொள்ள நேரில் வருவது நலம். இவ்வருடம், வரும் சூரிய கிரஹணத்தன்று, காசி கங்கா ஸ்நானம் செய்யும் ஓர் வாய்ப்பு!

விவரத்திற்கு ரூ. 2 ஸ்டாம்ப் அனுப்பி, முழு விவரங்கள் பெறலாம்.

ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ்,

34-A/2 அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி - 2.

N. SRIDHAR, N.K. SEKAR, K.E. நம்பிள்ளை





"எங்க பாட்டி என்னை அநாதை ஆக்கிட்டுப் போயிட்டா சார்...!"
"உன்னோட பாட்டி எங்கே ஐயா இருந்தா...?"
"அநாதை ஆசிரமத்திலே!"

– பெ. கலாசாமி

எல்லாவற்றையுமே சிந்திக்க வேண்டியது அவசியம்.

"கூட்டுக் குடும்பமாக இருந்தால் வேறுவித பிரச்னைகள் எழலாம். குழந்தைக்கு ஏதாவது நோய் என்றால் கை வைத்தியமா? டாக்டரின் ஆலோசனையா? என்ற சின்னப் பட்டிமன்றம் வரும். வீட்டுப் பெரியவர்களை மனம் கோணாமல் சம்மதிக்க வைப்பது எப்படி என்பது பற்றியும் கொஞ்சம் யோசித்து வைத்துக் கொள்வது நல்லது.

"இரவில் குழந்தை பசியிலோ, படுக்கையை நனைத்துக் கொண்டோ அழும். இந்தச் சமயத்தில் அதற்கு உடை மாற்றி விடுவது, பால் கரைத்துத் தருவது போன்ற சின்னச் சின்ன வேலைகளைக் கணவன் செய்தால், மனைவிக்கு உடலளவில் மட்டுமல்ல, மனத்தளவில் கூடப் பெரிய தெம்பாக இருக்கும்..." என்கிறார் சௌரிராஜன்.

மனவியல் மருத்துவரான டாக்டர் தாராவும் இந்த உண்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

"மன இறுக்கம் என்பது பிரசவப் பாதை இயல்பாகச் சுருங்கி விரிவதை பாதிக்கக்கூடும். குழந்தை குறிப்பிட்ட காலகட்டத்தில் தேவையா என்பதைப் பற்றித் திருமணமானவுடனேயே தம்பதிகள் பேசி ஒரு ஒற்றுமையான முடிவுக்கு வர வேண்டும். அதே போல மனைவி கருவுற்றதும் 'என் பங்கு முடிந்து விட்டது' என்பது போல் கணவன் ஒதுங்கிக் கொள்ளக் கூடாது. இளம் வயதிலேயே திருமணமான பெண்கள் பிரசவம் குறித்து பயப்படலாம். அவளது சகோதரி அல்லது தோழிக்கு பிரசவத்தின் போது சிக்கலோ, அசம்பாவிதமோ நிகழ்ந்திருந்தால் இந்த பயம் அதிக அளவில் கூட இருக்கும்! இப்படிப்பட்ட பெண்களுக்கு கணவனின் அன்பும் அரவணைப்பும் அதிகம் தேவைப்படும்.

"குழந்தை பிறப்பைத் தொடர்ந்த காலகட்டத்தில் சில பெண்கள் தொடர்ந்து அழுவார்கள். இதற்குக் காரணம் குடும்பத்தினரின் போதிய ஆதரவு இல்லாததாகவும் இருக்கலாம்; பிரசவத்தின் போது அவள் உடலில் நிகழும் (bio-chemical) மாற்றங்களாகவும் இருக்கலாம். இதுபோன்ற நிலையை post-partem depression psychosis என்போம். வேண்டாத குழந்தை, திட்டமிடாத குழந்தை, பொருளாதாரச் சிக்கல் ஆகியவற்றின் காரணமாகவும் தாய் மனச்சோர்வு அடையலாம். இதைக் கணவன் கண்டறிந்து அதற்கு மாற்று மருந்தாக நடந்து கொள்ள வேண்டும்."

மற்றொரு விஷயமும் பல வீடுகளில் உரசலை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. திருமணமானவுடன் பெரும்பாலும் கணவனே மனைவியின் முழு கவனத்தையும் ஈர்த்துக் கொள்கிறான். தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறாள். ஆனால் பிரசவத்துக்குப் பிறகு இந்த நிலை மாறுகிறது. அதுவும் முதல் ஆறு மாதங்களுக்குக் குழந்தையைக் கவனித்துக் கொள்ளவே அவளுக்கு நேரம் சரியாக இருக்கும். இதைக் கணவன் மனத்தளவில் முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்னொரு உண்மையையும் கணவன் உணர வேண்டும். 'தாய்ப்பால் கொடுக்கும் வரை கர்ப்பம் தரிக்காது' என்பது அனுமானமே தவிர, உறுதிசெய்யப்பட்ட மருத்துவ உண்மை அல்ல. "பிரசவத்திற்கு முன்பே எந்த வகை கருத்தடை சாதனத்தைப் பயன்படுத்தலாம் என்பதை யோசித்து வைத்துக் கொள்ளுவது அவசியம். கருக்கலைப்பு என்பது மிகச் சுலபமான விஷயம் என்று நினைப்பவர்கள் அதிகரித்து வருகிறார்கள். இதற்கு ஆகும் சுமார் 1500 ரூபாய் செலவு ஒருபுறமிருக்க, இந்தச் சிகிச்சையில் உள்ள ரிஸ்க்குகளைப் பட்டியலிட்டால் அவை தீவிரமானவை என்பது விளங்கும்" என்கிறார் டாக்டர் மீனாட்சி.

எல்லாவற்றிலும் முக்கியமான விஷயம் என்னவென்றால், கருவுற்ற காலத்தில் ஏற்படும் மனோநிலையும் உடல்நிலையும் பெண்ணுக்குப் பெண் வேறுபடும். அதே போல் கைக் குழந்தையின் இயல்புகளும் ஒரு நாளைப் போல் மறுநாள் இருக்காது. புதிது புதிதான சிக்கல்களும் பிரச்னைகளும் எழுந்தவண்ணம் இருக்கும்.

முதன் முறையாக மனைவி கருவுற்று இருக்கிறாள் என்று அறியும் போது பீறிட்டு எழும் மகிழ்ச்சியானது, இந்தச் சின்னச் சின்ன பிரச்னைகளால் மறைந்து போய் விடக்கூடும். அப்படி நடப்பதை அனுமதிக்காமல், செலவுகளுடன் சிக்கல்களுக்கும் மனத்தளவில் தயாராயிருந்தால் 'தந்தைமை'யைத் தேன் போல் சுவைத்து அனுபவிக்கலாம்!

– ஜி.எஸ்.எஸ்.

அட்டை வண்ணப்படம் : யோகா

மாடல் : தி. ராகவன்

Kalki Shopping Page

RANI SAREES

NOW SEPECIAL QUALITY AVAILABLE

BENGAL COTTON SAREES

BEST QUALITY ATTRACTIVE DESIGNS AND COLOURS
10% DISCOUNT ON BENGAL COTTON ONLY.

AVAILABLE ON WHOLE SALE ALSO

MADURAI TEXTILES

2, SIVAPRAKASAM ROAD,
PONDY BAZZAR,
MADRAS - 17.

(Nearer to Vegetable Market)

நீங்கள் எண்ணுவதை நாங்கள் நிறைவேற்றுகிறோம்!

உங்கள் விடுமுறை நாளான சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் திருமலை திருப்பதி சென்று ஸ்ரீ பாலாஜி தரிசனம் பெற நாங்கள் அழைத்துச் செல்கிறோம். உங்கள் குடும்பத்துடன் சொகுசான வீடியோ கோச்சில் அழைத்துச் செல்கிறது தக்ஷிண் டூர்ஸ். காலை மதிய உணவு (A/C Room) தேநீருடன் சிற்றுண்டி மற்றும் சிறப்பு தரிசன டிக்கெட் உட்பட ரூ. 215 மட்டுமே!

பஸ் புறப்படும் நேரம் : காலை 6 மணி
திருப்பும் நேரம் : இரவு 10 மணிக்குள்.
கட்டண விவரம்
பெரியவர் : ரூ. 215
சிறுவர் : ரூ. 185 (5-10 வயதுக்குள்)

மற்றும் இதர சுற்றுலாக்களுக்கும் அணுகுங்கள்

தக்ஷிண் டூர்ஸ்

(டூர்ஸ் ஆர்கனைசர் ட்ராவல் ஏஜென்ஸி)
எண் : 14/4, அரங்கப்பா தெரு,
(ஸ்ரீநிவாசா தியேட்டர் அருகில்)
மேற்கு மாம்பலம், சென்னை – 600 033.
தொ. பே. எண்:
4823132/4823426 (P.P.)

குறிப்பு : இந்த விளம்பரத்தை வெட்டி 4 நாட்களுக்குள் (10-14 தேதிக்குள்) கொண்டு வருபவர்களுக்கு அவர்களின் பயண கட்டணத்தில் சிறப்பு தள்ளுபடி உண்டு.



SREE KRISHNA

CUT PIECE COLLECTION PVT. LTD.

THE SHOP FOR WHOLE FAMILY
39 GODOWN STREET, MADRAS - 1 PH: 589596

EXCLUSIVE FOR READY MADE
EXCLUSIVE MATCHING BLOUSES
EXCLUSIVE FOR UNIFORM

specialists in suitings, shirtings, cut-pieces, summer cotton sarees, madurai chungudi cotton, belgaum pattu silks, benaras silks, venkatagiri bengal cotton and churidar

Avail 10% Discount till Deepavali.
Shop open on all Sundays till Deepavali. Even at midnight

ஏழு ஊர்க்காரர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கல்யாணம் நடத்தி வைத்தார்கள் என்றால் ஆச்சர்யப்பட வேண்டாமா? கல்யாண மாப்பிள்ளைக்கு வேண்டிய நகைகள் எல்லாம் திருக்கண்டியூரில் இருந்து வந்தது! திருப்பழனம் என்ற ஊரில் இருந்து பந்திக்கு வேண்டிய பழ வகைகள் வந்து சேர்ந்தன! பூக்கள் வேண்டுமே? திருப்பூந்துருத்தி அதற்குப் பொறுப்பு! உணவு வகைக்குத் திருச்சோற்றுத்துறை பொறுப்பேற்றது! திருநெய்த்தானத்தில் இருந்து நெய் வந்து சேர்ந்தது! திருமணச் சடங்குகள் நடத்த வேதியர் வேண்டுமே! திருவேதிக்குடியில் இருந்து வேதியர் அனுப்பப்பட்டார்கள். இவ்வளவு ஜாம் ஜாம் என்ற கல்யாணத்துக்கு மாப்பிள்ளை திருவையாறில் இருந்து புறப்பட்டார். திருமழபாடியில் திருமணம்.

யாருக்குத் திருமணம்? நந்தி தேவருக்குத் தான்! சிலாத முனிவரின் திருமகனாய்ப் பிறந்து, சுயசா தேவி என்பவளை மணந்த, நந்தி தேவர் பூசித்த தலைவர் ஐயாறப்பர். சிவபெருமான் சீடர்களில் முதன்மையான திருநந்தி தேவர் திருமணத்தைத் திருவையாற்று இறைவர் நடத்தி வைக்கும் அழகே தனி! காவிரி ஆற்றின் இருகரையிலும் உள்ள சப்தஸ்தானங்கள் என்ற இந்த ஏழு ஊர்கட்கும் அப்படி ஒரு இணைப்பு. நந்திதேவர் திருமணம் நிகழ்த்திய பதி என்பதால் "நந்தி அருள் பெற்ற நன்னகர்" என்று சேக்கிழார் பாடிய பதி, திருவையாறு. திருமணம் முடிந்த பின்னர் அம்மையப்பரும் திருநந்தி தேவரும் திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம், ஆகிய தலங்கட்குச் சென்று நன்றி தெரிவிப்பது வழக்கம். அவ்வூர் இறைவர் வெட்டிவேர்ப் பல்லக்கில் எழுந்தருளி வரவேற்பர். சித்திரைத் திருவிழாவின் போது எல்லா இறையவரும் திருவையாறு எழுந்தருளுவது கண் கொள்ளாக் காட்சி.

வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி ஆகிய ஐந்து ஆறுகளும் பாய்வதால் ஐயாறு என்னும் பெயர் உண்டானது என்பது பூகோளம். சூரிய புட்கரணி, சந்திர புட்கரணி, கங்கை, பாலாறு, நந்தி தீர்த்தம் என்னும் ஐந்து தெய்வீக நதிகள் கலப்பதால் ஐயாறு என்றாயிற்று என்பது புராணம். இங்குள்ள இறைவர் திருநாமம் ஐயாறப்பன் என்கிறது அழகு தமிழ். பஞ்சநதீஸ்வரர் என்கிறது வடமொழி.

கிழக்குக் கோபுர வாசல் வழி நுழைந்தால் இடப்பக்கம் உள்ளது தட்சிண கைலாசம். வலப்பக்கம் உள்ளது உத்தர கைலாசம். தட்சிண கைலாசம் முதலாம் இராசராசனது மனைவி பஞ்சவன் மாதேவியாலே கட்டப்பெற்ற உண்மையை "வடகரை இராசேந்திர சிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்று நம்பிராட்டியார் பஞ்சவன் மாதேவியார் திருவையாற்று எடுப்பித்தருள்கின்ற திருக்கற்றளி தென்கயிலாயமுடையார் கோயில்" என்கிற சாசனத் தொடர் விளக்கும். இக்கோயில் இறைவரைப் பஞ்சநதிவாணர் என்றும் அம்மனை அஞ்சலை என்றும் குறித்தனர்.



நந்தி தேவர் வழிபட்ட தலம் என்பதோடு, "எண்ணிய தேவர் இந்திரன் வழிபட" என்ற சம்பந்தர் தேவாரமும், "வாலியார் வணங்கி ஏத்தும் திருவையாறு அமர்ந்த தேன்" என்ற அப்பர் தேவாரமும், இந்திரனும் வாலியும் வழிபட்ட செய்திகளை நமக்கு விளக்கும். இலக்குமி வழிபட்ட தலம் என்பதற்கு அடையாளமாக இரண்டாம் பிராகாரத்தில் இலக்குமி சந்நிதி உண்டு. வெள்ளிக்கிழமைகளில் இலக்குமியை எழுந்தருளப் பண்ணுவது வழக்கம். அறம் வளர்த்த நாயகி என்பது இங்குள்ள அம்மையின் பெயர். தர்மசம்வர்த்தினி என்றும், உலகுடைய நாச்சியார் என்றும் வேறு பெயர்கள் அவர்க்குண்டு.

அன்புக்கு எதற்கு அளவு?

ஆடி அமாவாசை திருவையாற்றில் ஒரு முக்கியமான நாள்! ஏன் தெரியுமா? சைவ சமயக் குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசு பெருமானுக்கு, கயிலைக் காட்சியை திருவையாற்றில் அன்றுதான் சிவ பெருமான் காட்டினார். இது தவிரவும் பங்குனி மாதத்தில் திரு நந்தி தேவர் திருமண விழாவும், சித்திரை மாதத்தில் பிரம்மோற்சவம் என்னும் பெருந்திரு விழாவும் இக்கோயில் பெருவிழாக்கள். சித்திரைத் திருவிழாவில் ஐந்தாம் நாள் உற்சவம் நுட்பமானது. இறைவர் தன்னைத்தானே பூசிக்கும் பாவனையில் நடைபெறும் விழா அது. 'தன்னில் இறைவனை உணர்க' என்று ஐயாறப்பர் அறிவிக்கும் அறிவுத் திருவிழா அது. இதையே திருவாசகத்தில் மணிவாசகர் "ஐயாறதனிற் சைவனாகியும்" என்று போற்றுகிறார்.

தேவார முதலிகள் மூவராலும் பாடப் பெற்ற திருத்தலம் இது. திருமுறைகளிலே திருவையாறு பற்றிய பதிகங்கள் பதினெட்டு உள்ளன. க்ஷேத்திரத் திருவெண்பாவில் ஐயடிகள் காடவர் கோனும், திருவாசகத்தில் மணிவாசகரும் திருவையாறு பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அருளாளர் பலரது வாழ்வுடன் தொடர்புடையது திருவையாறு.

சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இங்கு தரிசிக்க வந்தது சுவையான விஷயம். பயணம் போகிற போது ஒத்த பண்பும், ரசிகத் தன்மையும் உள்ள நண்பர்களோடு போவது ரொம்ப சுவையாக இருக்கும். சுந்தரருக்குச் சேரமான் அப்படிப்பட்ட நண்பர். திருவஞ்சைக்களம் என்ற கொடுங்களூரில் அரசாண்ட சேர அரசர் அவர். பக்தியால் மிக எளியவர். இருவரும் தலயாத்திரை செய்தபடி திருக்கண்டியூர் வந்தனர். மறுகரையில் இருந்த திருவையாற்றை தரிசனம் செய்ய விரும்பினர். இப் போது மாதிரி, ஆற்றைக் கடக்க பாலம் கிடை யாது! கரையில் தோணியோ படகோ தென் படவும் இல்லை!

சுந்தரருக்கோ நீந்திப் போக மனம் இல்லை. எதிர் நீச்சல் போட அவருக்கு விருப்பம் இல்லையாம். பாட்டால் அறிவித்தார். "எதிர்த்து நீந்த மாட்டேன் நான்" என்றார். அத்தோடு விட்டாரா?

"விதிர்த்து மேகம் மழைபொழிய
வெள்ளம் பரந்து நுரைசிதறி
அதிர்க்கும் திரைக்கா விரிக்கோட்டத் (து)
ஐயா றுடைய அடிகளோ"


என்று 'அடிகளோ! அடிகளோ!' என்று ஓலமிட்டார். சிவ பெருமான், சுந்தரர் விஷயத்தில் விளையாடிப் பார்ப்பதில் விருப்புடையவர். பதிலுக்குத் தாம் குரல் கொடாது, பிள்ளையாரைத் தட்டி விட்டார். எதிர் ஓலம் கொடுத்தார் விநாயகர். இங்கிருக்கும் பிள்ளையார் திருப்பெயர் ஓலமிட்ட விநாயகர் என்றானது.

சுழித்து ஓடும் காவிரி ஒருபுறம் சுவர் போல் கெட்டித்து நின்றது! மறுபுறம் மணல்தரை தெரிந்தது. 'தங்கள் பெருமை என்னே' என்று சேரமான் சுந்தரரை வியக்க, 'என் பொருட்டு இது நிகழவில்லை! உம்மோடு வந்ததால் இறைவர் உமக்களித்த வழியில் யானும் வருகிறேன்' என்று சேரமானுக்கு இறைவர் காட்டிய கருணை என்று கூறினார் சுந்தரர். ஆணவமற்ற பக்தி என்பது இதுவல்லவா!

இளமையில் சமணராய் இருந்து, முதுமையில் தாய் மதம் தழுவிய தலைமகன் திருநாவுக்கரசர். நெஞ்சுரம் மிக்க முதியவர். கயிலை சென்று சிவ பெருமானைத் தரிசிக்க தீர்மானம் செய்தார். வயது தடுத்தாலும் மனது தடுக்கவில்லை. காசிவரை கால் நடையாகச் சென்றவர், காசி சென்றதும் விசுவநாதனை வணங்கினார். உடன் வந்த விசுவாசிகளை அங்கேயே இருக்கச் சொல்லி, தன்னந் தனியாகக் கயிலையைக் காண நடந்தார்.

கால்கள் தேய்ந்தன. கைகளால் தத்தித் தவழ்ந்தார். சதையும் எலும்பும் உறவை

சுகி சிவம்



"என் பையனை இன்ஜினியரிங் படிக்க வைக்கணும்னு எனக்கு ஆசை. என் மனைவிக்கு டாக்டருக்கு படிக்க வைக்கணும்னு ஆசை..."

"கடைசியா எதில்தான் சேர்த்தீங்க?"

"டுடோரியல் காலேஜ்ல!"

- பிரசன்னா குமார்

ஒழித்தன. நடக்கவும் முடியவில்லை. தவழவும் முடியவில்லை. உடம்பு தளர்ந்தாலும் உள்ளம் தளரவில்லை. உருண்டும் புரண்டும் கயிலை செல்வேன் என்று உறுதியுடன் தொடர்ந்தார். 'இப்படி எப்படி கயிலை செல்வது? என்று செல்வது?' என்று பலர் பழிக்கினும் தன் முயற்சி தளரவில்லை நாவுக்கரசர்.

இறைவரே முனிவராகி, "இந்த எண்ணம் தவிர்க்க. இது நடக்கிற காரியம் இல்லை! இறந்து படுவீர்! உம் ஊர் திரும்புக" என்று எச்சரித்தார். ஊர் திரும்பும் முயற்சியை விட, கயிலை ஏகும் முயற்சியே சிறந்தது என்று தீர்மானித்தார் திருநாவுக்கரசர்! ஏன்? கயிலை செல்லும் முயற்சியில் மாண்டாலும் நல்ல நோக்கத்தில் ஈடுபடும் போது அடையும் மரணம் உயர்வானது அல்லவா! எப்படியும் மரணம் நிச்சயம்! அது நல்ல முயற்சியின் போது நடக்கட்டுமே என்ற எண்ணத்தில் "மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்று உறுதி கூறினார். கருணை பாலித்தார் கண்ணுதற் கடவுள். அருகுள்ள பொய்கையைக் காட்டி "அதில் மூழ்கி எழுக.. திருவையாற்றில் நம் கயிலைக்காட்சி கிடைக்கும்" என்று கூறி மறைந்தார்.

நம்பிக்கைதானே வாழ்க்கை! பொய்கையில் மூழ்கிய திருநாவுக்கரசர் திருவையாற்றில் எழுந்தார். கால்பதித்து, வழியெங்கும் சுவடு பதித்து நடந்து வராது, திருவையாறு வந்த அதிசயத்தை "யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது" என்று பாடினார் நாவுக்கரசர்.

நமது ஆணவம் உயிரில் பதிக்கும் சுவடுகள் தான் நம் மறுபிறவிக்குக் காரணம். இந்தப் பதிவுகளை அழிக்கவே மறுபிறவி வருகிறது. பழைய பதிவுகள் மறுபிறவியில் நம்மைப் பாடாய்ப் படுத்துகின்றன! இந்தச் சுவடுகள் பதியாத வாழ்வே, ஞானப் பாதையே கயிலைக்குக் கூட்டிச் செல்லும். இப்படிச் சுவடு படாமல் நின்ற நிலையில், தாம் கயிலைக் காட்சி கண்ட அநுபவத்தைத் திருநவுக்கரசர் பாடினார். அந்தப் பாடல்களில் 'கண்டறியாதன கண்டேன்' என்று ஒவ்வொரு முறையும் வியந்தார்.

அதில் நிறைவான பாடல் -

வளர்மதிக் கண்ணி னாளை வார்குழலா
ளொடும் பாடிக்
களவு படாத தொர் காலம் காண்பான்
கடைக்கண் நிற்கின்றேன்.
அளவு படாத தொர் அன்போடு ஐயாறு
அடைகின்ற போது
இளமனம் நாகு தழுவி ஏறு வருவன
கண்டேன்.
கண்டேன் அவர் திருப்பாதம்;
கண்டறியாதன கண்டேன்.

"வளருகின்ற பிறை நிலாவைச் சூடியிருப்பவனை, சிறந்த குழலோடு கூடிய உமையம்மையோடும் பாடி, காலம் களவுபட்டுப் போகாத வகையில் காணும் பொருட்டு அவன் திருக்கோவில் கடை வாசலில் நிற்கின்றேன். எல்லை கட்டப்படாத அன்பு மிகுதியோடு ஐயாறு அடைகின்ற போது, இளமையான பெண்மையுடன் ஆண்மையாகிய இறைவர் வருவது கண்டேன். கண்டறியாத அநுபவங்களைக் கண்டேன்" என்று பாடினார் அப்பர் சுவாமி.

காலம் களவு போகிறது என்று எச்சரிக்கை விட்டார் அப்பர்.... யாராவது கவலைப் பட்டோமா! ஐந்தும் பத்தும் களவு போனால் போலீஸ் ஸ்டேஷன் வரை போய் புகார் கொடுத்து அமர்க்களம் செய்கிறோம். கடவுள் கொடுத்த வாழ்க்கையைத் தூக்கத்தில், காமத்தில், பசியில், பொருள் தேடுதலில் காலத்தைத் தொலைத்தோம். காலம் களவு படுகிறது!

அதைத் தடுக்கும் இறைவர் ஆலயத்துக்கு அன்போடு செல்வோம் என்ற அப்பர், அன்புக்கு அளவு கூடாது என்ற பொருளில் 'அளவுபடாத அன்போடு' என்றார். இத்தனை முறை ஜபம் செய்திருக்கிறேன், இவ்வளவு காலம் பூஜை பண்ணியிருக்கிறேன், இத்தனை ஆயிரம் நாம உச்சாடனம் செய்திருக்கிறேன், இத்தனை கற்று கற்பியிருக்கிறேன் என்ற எண்ணிக்கைகளைக் கேலி செய்கிறார் அப்பர்! அன்புக்கு எதற்கு அளவு?



"எதுக்கு அவரை கட்சியிலிருந்து நீக்கிட்டாங்க?"

"தலைவருகிட்ட போய் நான் தலைவராவதற்கு இன்னும் எத்தனை வருஷம் ஆகும்னு கேட்டாராம்..."

- எஸ்.எஸ்.பூங்கதிர்

வாழ்வுக்கு ஒரு வழிகாட்டும் தலம்

கொல்லம் ஸ்ரீ உமா மஹேஸ்வரர் கோவில் - கேரளத்து திருமணஞ்சேரி

லட்சார்ச்சனையும் சந்தன அபிஷேகமும் சென்ற 29.8.95, மற்றும் 30.8.95 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மனித வாழ்க்கையில் திருமணம் என்பது மிக முக்கியமானதாக வளர்கின்றது. திருமணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளுடன் வாழ்வதையே சிறந்த தர்மமாக பெரியோர் கூறுகின்றனர். அதனால்தான் ஔவைப் பாட்டியும் இல்லறமல்லது நல்லறமன்று என்று இல்லறத்தைப் போற்றிப் பாடினாள்.

அகஸ்திய மகரிஷிக்கு சிவபெருமான் கயிலாய மலையில் தனக்கும் உமைக்கும் நடந்த திருமணத்தை நிகழ்ச்சிகள் ஒன்று விடாமல் காட்டிய இத்தலங்களே உமாமகேசத் தலங்கள் என்று போற்றப்படுகின்றன. இத் தலங்களில் உமாபரமேஸ்வரர் சிவலிங்கமாக அமையாமல் திருமண மேடையில் திவ்ய தம்பதிகளாகவே எழுந்தருளியுள்ளனர். இத்திருக் கோலத்தைக் கண்டு தரிசிப்பவர்க்கு திருமணத்தடை, புத்திரபாக்கியமின்மை ஆகியவற்றை நீக்கி சகல சௌபாக்யமளிப்பதாக அகஸ்தியருக்கு பரமேச்வரன் வாக்களித்துள்ளார். ஆதலால் இவற்றைக் கண்ணாரக் கண்டு வணங்குதல் புண்ணியமும் நல்வாழ்க்கையும் தருவதாகும்.



இத்தகைய தலங்களில் ஒன்றே கொல்லம் உமாமகேஸ்வரர் ஆலயமாகும். பரசுராம க்ஷேத்திரமாகிய கேரளத்தில் கொல்லம் நகரில் இக்கோவில் அமைந்துள்ளது. அகஸ்தியர் இங்கு தவம் செய்து வந்ததால் இதற்கு அகஸ்திய கூடம் என்பது பெயர். இங்கு அவருக்குப் பெருமான் திருமணக் கோலக்காட்சியை அளித்தார் என்று புராணம் கூறும்.

இக்கோவிலில் திருமணத் தடையால் வருந்துவோர்களும், குழந்தைப் பேறு அற்றவர்களும் வந்து வழிபட்டு பல நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். இங்கு செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் நூற்றுக் கணக்கான பெண்கள் கூடி இராகு கால பூஜை செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இப்பூஜையில் கலந்து கொள்கின்ற அனைவருக்கும் கோவில் சார்பிலேயே எலுமிச்சம்பழ மூடியிலான விளக்குகள், அதற்கான எண்ணெய், பூக்கள் முதலியன தரப்படுகின்றன.

நெடுந்தொலைவில் இருந்து கோவிலுக்கு வரமுடியாதவர்கள் கோவில் முகவரிக்கு தங்கள் பெயர் கோத்திரம் வயது நட்சத்திரம் முதலியவற்றை கடிதம் மூலம் எழுதி அனுப்பினால் அவர்களுக்காக முறையாகப் பிரார்த்தனை செய்து பிரசாதம், சுவாமி அம்மன் படத்துடன் இலவசமாகவே அனுப்பப்பட்டு வருகின்றது. (ஆலய முகவரி : ஸ்ரீ உமாமகேசுவரர் ஆலயம், மெயின்ரோடு, கொல்லம், கேரளா - 690 001)

சிவபெருமான் திருமணக் கோலத்துடன் விளங்கும் இப்படியை நினைப்பது கூட ஒரு புண்ணியமாகும். நமக்காக மட்டுமின்றி அக்கம் பக்கம் உள்ளவர்களுக்குக் கூட பிரார்த்திக்கலாமே.

பூசை. ச. அருணவசந்தன்

RPS வழங்கும் மற்றுமொரு புதுமைத் திட்டம்

RPS CLASSIC BOND

RPS கிளாசிக் பாண்ட் திட்டத்தில் 24 மாத டெபாசிட் தொகையாக ரூ. 10,000/- செலுத்தி **21 % வட்டி** பெற்று மனநிறைவு அடையுங்கள்.

மாதாந்திர வட்டித் தொகை பின் தேதியிட்ட வட்டி வாரண்டுகளாக முன்னதாகவே அளிக்கப்பட்டுவிடுகிறது.

கூட்டு வட்டித் திட்டத்தின் கீழ் நாற்பதே மாதங்களில் உங்கள் பணத்தை நீங்கள் **இரட்டிப்பாக்கிக்கொள்ளலாம்.**

பண்டிகைக் கால டெபாசிட் பெருக்க விழா
விநாயக சதுர்த்தி முதல் விஜயதசமி வரை



3 அக்டோபர் '95க்கு முன்னர் RPS கிளாசிக் பாண்டில் டெபாசிட் செய்யுங்கள். ***வெள்ளிச் சுடர் விசும் சுபிட்சம் பெறுங்கள்.***

இணையற்ற வாய்ப்பு !
இப்போதே பயன்படுத்திக் கொள்ளுங்கள் !

RPS BENEFIT FUND LTD

(Declared as "NIDHI" by the Central Government)

தலைமை அலுவலகம்: 16, இராமநாதன் தெரு, தி. நகர், சென்னை - 600 017. போன்:4341554, 4341346.

கிளைகள்: இராயபுரம் - சென்னை, போன் : 5956164. கோயம்புத்தூர், போன் : 443576. வேலூர், போன் : 21902. மதுரை, போன் : 33752. பாண்டிச்சேரி, போன் : 31859. மல்லேஸ்வரம் - பெங்களூர், போன் : 366433. இந்திரா நகர் - பெங்களூர், போன் : 5569397. செகந்திராபாத், போன் : 819488.

(உறுப்பினர்களுக்கு மட்டும்)

AKSHAR

குப்பையைக் கிளறி, கொள்ளை லாபம் அடைகிறார்!



• குப்பையிலிருந்து உரம்....

"நம் நாட்டில், ஒரு காலகட்டத்தில் குப்பைகளே இல்லாமல் போய் விட்டால் என்ன செய்வது என்று எனக்கு பயமாக இருக்கிறது!"

– பெங்களூரைச் சேர்ந்த கெமிக்கல் இஞ்சினியர் ஆர். கணேசாவின் சமீபத்திய ஸ்டேட்மென்ட் இது!

'ஏதடா, கிறுக்குத்தனமாக இருக்கிறதே; இந்தியாவிலாவது; குப்பை இல்லாமல் போவதாவது? அதுவும் தவிர, அப்படி ஒரு நிலை ஒருவேளை வந்தால் சந்தோஷத்தில் துள்ளிக் குதிப்பதை விடுத்து, இதென்ன அபத்தம்?' என்று கேட்கத் தோன்றுகிறதா?

விஷயம் சற்று நுட்பமானது. 'சிறு துரும்பும் பல் குத்த உதவும் போது பெரும் குப்பையும் எதற்காவது உதவாதா?' என்று சிண்டைப் பிய்த்துக் கொண்ட கணேசா, இறுதியில் கண்டுபிடித்தார். 'கழிவுக் குப்பைகளிலிருந்து தொழு உரங்களைத் தயாரிக்கலாம்!'

கணேசா அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவில் ஏழு முக்கிய நகரங்களில் சென்ற ஆண்டு 80,000 டன் தொழு உரங்களைத் தயாரிக்க முடிந்திருக்கிறது!

"அடுத்த இரண்டு ஆண்டுகளில், ஆறு லட்சம் டன் குப்பையிலிருந்து ஒன்றரை லட்சம் டன் உரம் தயாரிக்கப்படப் போகிறது" என்று கூலாகச் சொல்லும் கணேசாவுக்கு வயது முப்பத்தி ஆறு!

விவசாய உலகமே உற்றுநோக்கும் இந்தத் தொழில்நுட்பம் என்ன?

சிம்பிள்!

குப்பைக் கழிவுகளை ஒரு பெரும் பள்ளத்தில் போட்டு, அதில் சிலவகை பாக்டீரியாக்களைக் கலந்து விட வேண்டும். இந்தக் (ஆபத்தில்லாத) கிருமிகள், குப்பையை மக்கச் செய்து விடும். சர்க்கரை மற்றும் தேங்காய் நார் ஆலைகளிலிருந்து கிடைக்கும் சில கழிவுப் பொருள்கள் மக்கிய குப்பையுடன் சேர்க்கப்படுகின்றன. பின்னர் இந்தக் குப்பையில் மண் புழுக்களைச் செலுத்துகிறார்கள். அவை குப்பையை நுணுக்கி, பொடியாக்கி விடுகின்றன. புழுக்களை நீக்கி விட்டு, மீண்டும் சில பாக்டீரியாக்களைச் செலுத்தினால், அவை குப்பைக்கு நைட்ரஜன் சத்து சேர்க்கின்றன. Zinc, Manganese இன்ன பிற உர தயாரிப்புக்குத் தேவையான வஸ்துக்களைச் சேர்த்துப் பதப்படுத்தி, சலித்தெடுத்து 'பேக்' செய்து விடுகிறார்கள்!

கணேசன் தம் புதிய உர தயாரிப்புக்கு 'Black Gold' என்று பெயரிட்டிருக்கிறார்.

இதர ரசாயன உரங்களின் விலையில் சரி பாதிதான் இந்த குப்பை உரத்தின் விலை!

ரசாயன உரங்களினால் ஆரோக்கியக் குறைவு ஏற்படுவதால் உலகெங்கும் இயற்கை உரத்தையே நாட ஆரம்பித்துள்ளனர் மக்கள். எனவே Black Goldக்கு சிறந்த எதிர்காலம் இருக்கிறது.



• கணேசா

இந்தியாவின் இதர மாநிலங்களிலும் இந்த முறை இன்று பின்பற்றப்படத் தொடங்கி இருக்கிறது.

டெல்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நான்கு பெரிய நகரங்கள் ஒரு நாளைக்கு 16,000 டன் குப்பைகளை உற்பத்தி செய்கின்றன. தினசரி 2000 டன் குப்பைகளை அகற்ற பெங்களூர் கார்ப்பரேஷன், ஆண்டுக்கு ஐந்து கோடி ரூபாய் செலவழிக்கிறது!

இந்நிலையில் கணேசாவின் இப்புதிய முறை, நகரைச் சுத்தமாக்குவதற்கு மட்டுமின்றி வருமானத்துக்கு வழியும் சொல்வதால் மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாகிறது.

"குப்பைகளை உரமாக்குவதற்கு மிகப் பெரிய தொழில்நுட்பமெல்லாம் ஒன்றும் தேவையில்லை என்பதால் இந்திய அரசு, இதை எல்லா தாலுகாக்களிலும் அறிமுகப்படுத்தலாம்!" என்கிறார் கணேசா.

பெங்களூரில் இவரது ஒரு யூனிட்டின் வெளியே வைக்கப்பட்டிருக்கும் வாசகம் வெகு தமாஷாக இருக்கிறது!

"அமைதியாக இருக்கவும்! இங்கே ஆயிரக்கணக்கான மண்புழுக்கள் வேலை செய்கின்றன!"

- கிச்சா

நன்றி : **சண்டே**

● எல். எம். அபிதாட்சயா, மதுரை - 16.


? மனிதனுக்கு அரசியல் ஞானம் அவசியமா?

! அவசியம்தான். அரசியல்வாதிகளுக்குத்தான் அது அவசியமில்லாது போய் விட்டது!

● எல். கோபாலகிருஷ்ணன், அரக்கோணம்.

? ஓரிரு பத்திரிகைகள் பரபரப்பாக விற்பனையாகின்றனவே...?

! ஆதாரமற்ற அதிரடி செய்திகள் வெளியிட்டு விற்பனை வளர்ப்பது ஒருபுறம்; குலுக்கல் முறையில் (லாட்டரி) மெகா பரிசுகள் அறிவித்து வாசகர்களை ஈர்ப்பது மறுபுறம்... இரண்டுமே ஆரோக்கியமானவையல்ல.



• திருப்பதிக்கு டாட்டா!

● எம். பிரபு, குமராட்சி.

? தேசியவாதி என்றால் என்ன?

! இன்றைய நிலையில், நாடு தழுவிய ஊழலரசர் என்று பொருள் கொள்ள வேண்டும்!

● ஈ.டி. விஜயகுமார், ஈரோடு.

? கோவை, லட்சுமி மில் அதிபர் கரிவரதன் மரணம் குறித்து...?

! சிறந்த விளையாட்டு வீரர்; எத்தனையோ இளைஞர்களுக்கு முன்னோடியாக விளங்கியவர். விமான விபத்தில் இறந்தது மாபெரும் சோகம். தினந்தோறும் அவருக்கு அஞ்சலி செய்திகள் நாளிதழ்களில் வந்தவண்ணம் இருப்பதைப் பார்க்கும் போது, எவ்வளவு மனிதர்களின் அன்பைப் பெற்றவர் அவர் என்பது புரிகிறது. அவர்களுக்கு மட்டுமின்றி, தமிழக தொழில் துறைக்கே ஈடுசெய்ய முடியாத இழப்பு.

● எஸ். ரோஜா, நாட்டரசன்கோட்டை.

? இன்றைய தேதியில் சிறந்த இலக்கியவாதியாக யாரைக் குறிப்பிடலாம்?

! கலைமாமணியை மறுத்தவரை...!

● ஜி. இந்திரா, திருச்சி - 14.

? "மத்திய அரசு கவர்னரைத் திரும்ப அழைக்காவிட்டால், நாங்களே அவருக்குக் கரும்புள்ளி - செம்புள்ளி குத்தி, சாட்டையால் அடித்து விரட்டுவோம்" என்று காளிமுத்து பேசியிருக்கிறாரே?

! சினிமாவைப் போலவே அரசியல் கூட்டங்களிலும் வில்லன் டிராக், காமெடி டிராக், ஆபாச டிராக் என்றெல்லாம் உண்டு. காளிமுத்து, இவற்றுள் காமெடி டிராக்கில் கோமாளி வேஷம் கட்டுபவராகத் தெரிகிறார்!

● வீ. முத்தையா, திருநெல்வேலி. ❑

? நம் அரசியல் தலைவர்கள் பல வெளிநாடுகளுக்குப் போய் வருகிறார்களே... அங்குள்ள சுத்தமான சாலைகளையும் இதர வாய்ப்பு - வசதிகளையும் பார்க்கும் போது, நம் நாட்டை எண்ணி வெட்கப்பட மாட்டார்களா...?

! அங்குள்ள வங்கிகளைத்தான் அவர்கள் முதலில் பார்க்கிறார்கள் என்பதால், அவற்றுக்கே முன்னுரிமை கொடுத்து விடுகிறார்கள்.

● சு. கந்தையா, தக்கலை.

? 'ராமராவை மீண்டும் அரியணையில் ஏற்றுவேன்' என்று லட்சுமி சிவபார்வதி சபதம் செய்துள்ளது குறித்து...?

சிவபார்வதி சபதம் குறித்து..?



"மீண்டும் ஏற்றுவேன்"

! என்.டி.ஆர். பதவிக்குத் திரும்ப முடியும். ஆனால், அது நடக்க வேண்டுமானால் அம்மையார் திருவாயைத் திறவாமல் மௌன விரதம் மேற்கொள்ள வேண்டும்!

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.

? தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ஊழல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மு.க. கூறியுள்ளாரே?

! அரசியல்வாதிகளை விட்டு விட்டது ஏனாம்...?

● என். ஜெயராமச்சந்திரன், கோவில்பட்டி.

? மனித உரிமை மீறலில் தமிழகம் இரண்

டாம் இடத்தில் உள்ளதாமே?

! சே சே! கேவலம்! புரட்சித் தலைவியின் ஆட்சியில் எல்லாவற்றிலுமே முதலிடத்தில் அல்லவா இருக்க வேண்டும்?

● **ஆர். அஜிதா, கம்பம்.**

? திருப்பதி தேவஸ்தான உறுப்பினர் பதவியை ரஜினி ராஜினாமா செய்து விட்டாரே?

! அவராக ராஜினாமா செய்திராவிட்டால் பதவி பறிக்கப்பட்டிருக்குமே!

● **எல். எம். மங்கை, மதுரை - 16.**




• கட்டுக் கதை!



• "மாற்றிக் காட்டுவேன்"



• ஹூம்...ம்ம்!



• கோமாளி வேஷம்



• மறுத்தவர்



• ஈடுசெய்ய முடியாது

? கர்நாடகா, காவிரித் தண்ணீர், தமிழகம் – உங்கள் அபிப்பிராயம்?

! வேடிக்கை என்னவென்றால், தமிழக காங்கிரஸ் காவிரிநீர் கேட்கிறது; கர்நாடக காங்கிரஸ் தரக் கூடாது என்கிறது. அவ்வாறே பி.ஜே.பியும் ஜனதாதளமும் கருத்து மாறுபடுகின்றன. இந்த விஷயத்தில் நீதிமன்ற, நடுவர் மன்றத் தீர்ப்புகள் அலட்சியம் செய்யப் படுகின்றன. அப்புறம் நல்லாட்சியாவது ஒண்ணாவது! எல்லாம் 'தலைக்குத் தலை நாட்டாண்மை' கதைதான்!

● **செய்யது மைதீன், மேலப்பாளையம்.**

? அன்று நீதி கேட்ட ஜெயலலிதா, இன்று நீதி கேட்கும் சிவபார்வதி... ஒப்பிடுங்களேன்?

! இரண்டுமே டிராமா!

● **ஏ. செந்தில், போத்தனூர்.**

? வளர்ப்பு மகன் திருமணத்தின் பட்ஜெட் எவ்வளவு?

! எந்த பட்ஜெட்டைச் சொல்கிறீர்கள்? கல்யாண பட்ஜெட்டா? கறுப்புப் பணம் கரைப்பு பட்ஜெட்டா? அல்லது மக்களின் வரிப்பண விரய பட்ஜெட்டா...?

● **தி.சு. பாலசுப்ரமணியன், திருவண்ணாதபுரம்.**

? 'சர்க்கஸ் யானை'யாக இருக்கும் காங்கிரஸை 'கோயில் யானை'யாக மாற்றுவோம் என மூப்பனார் கூறியுள்ளாரே?

! அதற்கு வடகலை நாமமா, தென்கலை நாமமா என்று குடுமிபிடி சண்டை வராமலிருந்தால் சரி!

● **டி. திருமலை, சென்னை - 28.**

? எழுத்தாளர் ம.வே. சிவகுமார் எடுத்த திரைப்படம் எந்த நிலையில் உள்ளது?

! அவர் அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டு, மேடை நாடகத் தயாரிப்பில் இறங்கியுள்ளதாகக் கேள்வி. நல்ல எழுத்தாளர், ஹூம்!

● **கா. கு. இலக்கியன், சென்னை - 52.**

? தமிழக மக்கள் ரஜினியின் அரசியல் பிரவேசத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கையில், அவர் ஆந்திராவுக்கு ஓடிப் போய் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறாரே...?

! அவசர அவசரமாகப் போய் என்னத்தை சாதித்தார்? பெண்கள் பற்றி பொதுப்படையாக விமர்சித்து, ஆந்திரப் பெண்களின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டதுதான் மிச்சம்!

● **ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.**

? விநாயக சதுர்த்தி ஊர்வலம் வன்முறையில் முடிந்துள்ளதே?

! ஊர்வலத்தையே ரத்து செய்திருக்கலாம்; சிறுபான்மையினர் வாழும் பகுதி வழியே செல்ல வேண்டாம் என்ற வேண்டுகோளுக்காவது இணங்கியிருக்கலாம். இரண்டையுமே செய்யாததுடன் தொழுகை நேரத்தின் போது ஊர்வலத்தை நிறுத்த மறுத்து, காவல் துறையினர் தடியடி நடத்த நிர்பந்தித்துள்ளனர். இவ்வளவும் நடந்த பிறகு, வன்முறைச் சம்பவங்களுக்கு நாங்கள் காரணமல்ல; ஊர்வலம் அமைதியாக நடந்து முடிவதை விரும்பாத ஒரு சிலரே அதற்குப் பொறுப்பு என்று ஹிந்து முன்னணித் தலைவர் ராம கோபாலன் கதை கட்டுவது இன்னும் கேவலம்!

❑ **ரூ 25 பரிசு பெறுபவர் :**
வீ. முத்தையா,
35, பாரதியார் தெரு,
திருநெல்வேலி டவுன்,
627 006.

ஓர் 'உதை'யின் கதை!

வளர்ப்பு மகன் கல்யாணப் பரபரப்பைத் தூக்கிச் சாப்பிட்டு விட்டது, சன் டீ.வி.யின் அதிரடி ஒளிபரப்புப் பரபரப்பு. (எத்தனை 'ர'!)

ஆறாம் தேதி நடந்த மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலத்துக்கு, சன் டீவி. தன் கேமராமேன் கண்ணனை ஓர் உதவியாளருடன் படமெடுக்க அனுப்பிவிட்டு, நகம் கடித்துக் கொண்டு காத்திருந்தது.

அங்கே நடந்த பரபரப்பு தெரியும். போலீஸ், கண்ணனை அடையாளம் கண்டு கொண்டு தாக்கத் தொடங்கவும், கண்ணன் தம் கேமராவை 'ஆன்' செய்த நிலையிலேயே தன் உதவியாளரிடம் எறிந்து விட, அவருக்கு விழுந்த தர்ம அடிகள் பதிவாகி, உடனே உடனே சன் டீவி அலுவலகத்துக்கு அந்த கேஸட் அனுப்பப்பட்டு, இரண்டே மணி நேரத்தில் (சம்பவம் நடந்தது இரவு ஏழு மணி. ஒளிபரப்பானது 9 மணிக்கு!) அப்போது தான் ஆரம்பித்திருந்த 'ரகுவம்சம்' தொடரை நிறுத்தி விட்டு, இடையே இதை ஒளிபரப்பி விட்டார்கள்!

போலீசாருக்குத் தேவை, அந்த காஸெட் தான்! கண்ணனை மட்டும் பிடித்துக் கொண்டு, காஸெட்டை எப்படிக் கோட்டை விட்டார்கள்?

விசாரித்ததில் தெரிந்த விவரம் :

உதவியாளரிடமிருந்த காமெராவிலிருந்து காஸெட்டை உருவப் பலவாறாக முயற்சித்தும் முடியவில்லை. காரணம் - அது ஹைடெக் காமெரா. சாதாரண வீடியோ காமெராவிலிருந்து காஸெட் எடுப்பது போல் இதில் சாத்தியமில்லை.

உதவியாளரை அவர்கள் மிரட்ட, 'தனக்கு வித்தையெல்லாம் தெரியாது, வெறுமனே 'லைட்' பிடிக்கத்தான் தெரியும்' என்று அவர் கூறியிருக்கிறார்.

சரியான மேலிட உத்தரவுகள் இன்றி, என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்கக் கூட அவகாசம் இல்லாத நிலையில், "ஓடிப் போ" என்று துரத்தி விட்டிருக்கிறார்கள். அந்த உதவியாளர் சன் டீவி அலுவலகத்துக்குச் சென்று சேர்ந்து விட்டார்!

சிறப்புக் காவலர்களின் 'ஸ்பெஷல் கவனிப்பில்' சிக்கிக் கொண்ட கண்ணனுக்கு, ஒரு மேல் காயம் கூட ஏற்படவில்லை! அதிகாலை மூன்று மணிக்கு ஒருவழியாக விடுவிக்கப்பட்ட கண்ணன், நேரே சன் டீவி அலுவலகம் வந்து சேர்ந்து, கதையைச் சொல்லியிருக்கிறார். காவல் துறையினர், கண்ணனைத் தாங்கள் தாக்கியதாக வந்துள்ள செய்திகளை மறுத்துள்ளது.

எப்படியோ திருமண ஒளிபரப்பில் ஜேஜேவை சன் முந்திக் கொண்டது ஒருபுறம் இருக்கட்டும். ஒளிபரப்புக் கேந்திரம் மணிலாவில் இருக்க, 'சன்'னால் எப்படி சென்னையிலிருந்து நேரடியாக ஒளிபரப்ப முடிந்தது? அதுவும் ஓரிரு மணி நேர இடைவெளியிலேயே?

சன் டீவியின் நிர்வாக இயக்குநர் கலாநிதி மாறனைக் கேட்டோம் :


"அந்தத் தொழில்நுட்பம் மிக ரகசியம்! சொல்ல முடியாது. காரணம், போட்டியாளர்கள் தெரிந்து கொண்டு விடுவார்களே! ஒன்று மட்டும் உறுதி. இதில், சட்டத்துக்குப் புறம்பாக ஏதும் நாங்கள் செய்யவில்லை!"

"தினசரி இதே ரீதியில் செய்திகள் ஒளிபரப்பலாமே?"

"சரிதான்! சாதாரண விஷயமா அது! மிகவும் காஸ்ட்லி சமாசாரம் சார்! மிக பரபரப்பான ரிப்போர்ட்களுக்கு மட்டுமே செலவு பார்க்காமல்



• கலாநிதி மாறன்



• கண்ணன்

இந்த டெக்னிக்கை உபயோகிக்கலாம்! அதுவும் தவிர, இந்த முறையில் படம் அத்தனை துல்லியமாக இருக்காது!"

"எல்லாம் சரி. அழைப்பு இல்லாத திருமணத்துக்குப் போய் படம் எடுத்தால் - அதுவும் முதல்வர் வீட்டுத் திருமணத்திற்கு - அடிக்காமல் என்ன செய்வார்கள்?"

"அது சரி. திருமணம் வீட்டில் நடந்தால் நீங்கள் கேட்பதில் நியாயம் இருக்கிறது. சாலையை மறித்து, ஒரு பெரிய கலாட்டாவே செய்திருக்கிறார்கள். பெரிய பப்ளிக் நியூஸென்ஸ் ஆகியிருக்கிறது. ஊரைக் கூட்டி களேபரம் பண்ணியிருக்கிறார்கள். இதை எப்படி தனிப்பட்ட மனிதரின் வீட்டுத் திருமணம் எனலாம்? ரோடில் ஒரு விபத்து நடந்தால், 'தனிப்பட்ட ஒருவர் மாண்டால் நமக்கென்ன' என்று விட்டு விடுவதா? அது போலத்தான் இதுவும். மக்களை பாதிக்கும் ஒரு விஷயம் நடப்பதைப் பார்த்துக் கொண்டு, 'அழைப்பு வரவில்லை' என்று சும்மா இருப்பது ஜர்னலிஸ தர்மம் ஆகுமா?"

- கௌதம்

♦ விபத்து ஏற்பட்டவுடன் சம்பந்தப்பட்ட பேருந்து ஓட்டுநர் கூட சஸ்பெண்ட் செய்யப் படும் போது, பல நூறு உயிர்களைப் பலிவாங் கிய ரயில் விபத்து நடந்தும் அமைச்சரை மாற்றவில்லை என்பது கோபத்தை ஏற்படுத்து கின்றது. அரியலூர் விபத்துக்கு தார்மிகப் பொறுப்பு ஏற்று ரயில்வே அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி பதவியை ராஜினாமா செய் ததை இன்றைய காங்கிரசார் மறந்து விட் டனர் போலும். அல்லது தார்மிகம் என்பதன் பொருளை அறியாமல் இருக்கலாம்!
தஞ்சாவூர் – 7, வளர்மதி ஆசைத்தம்பி.

♦ இந்திய மனிதவளத்தில் நம்பிக்கையின்றி, ரயில்வே அமைச்சர் மருத்துவ சிகிச்சைக்கு

வாழ்க ஜனநாயகம்!

வெளிநாடு போகிறார் என்று தலையங்கத்தின் கடைசி வரிகள் சம்பந்தப்பட்டவருக்கு மட்டு மின்றி சகலருக்குமே சரியான சாட்டையடி. அமைச்சர்களின் வெளிநாட்டு வைத்திய மோகம் நம் நாட்டு மருத்துவர்களின் திற மைக்கு இழிவை தேடித் தரும் ஒன்று என் பதை அவர்கள் எப்போது உணரப் போகிறார் களோ?
நாகப்பட்டினம், நாகை சந்திரா.

♦ டிராக்டர் ஓட்டும் வசந்தாதேவியின் செய லைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை! இப்படிப்பட்டவர்கள் ஊருக்கு ஒருவர் இருந்து விட்டால் நாட்டில் செழிப்புக்குப் பஞ்சமில்லை. இவர்கள் மனம் நொந்து விடாதபடி அரசாங்கம் பயிர்கள் நல்ல விலைக்கு விற்கவும், மற்ற அனைத்து உதவி களையும் செய்ய, தகுந்த நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும்.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

♦ "வயல்வெளியில் ஒரு வசந்தப் புயல்!" கவர் ஸ்டோரி மூலம் பெண்கள் நினைத்தால் எதையும் சாதித்துக் காட்டலாம் என்பதை உல கிற்கு வெட்டவெளிச்சமாக்கி விட்டீர்கள்! சபாஷ்!
மதுரை – 16, பி. ராஜசேகரன்.

♦ எம்.ஜி.ஆர். செத்தும் கொடுத்ததைப் படித் ததும் எழுந்த உணர்வுகளை வர்ணிக்க வார்த் தைகள் இல்லை! அந்த வள்ளலை நினைவு படுத்தும் முறையில் அதை எழுதிய லால்குடிக் காரர் (பெயரை வைத்து ஊகிக்கிறேன்!) அந்த நிகழ்ச்சியை ஓர் அஞ்சலட்டைக்குள் அடக்கி விட்டது கில்லாடித்தனம்! அதைப் படித்து, வெளியிட்ட 'கல்கி'யோ உஸ்தாத் ஜீ உஸ்தாத்! வாரே வாஹ்!
அரக்கோணம், எல். கோபாலகிருஷ்ணன்.

♦ இரண்டு வி.ஐ.பிக்களின் வாரிசுகளுக்காக, ஏற்கெனவே தங்கியிருந்த பதினைந்து மாணவி களை வெளியேற்றி, வேறிடம் அனுப்பப்பட்ட செய்தி, அதிர்ச்சியையே அளித்தது. வாழ்க ஜனநாயகம்!
கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

ரூ. 20 பரிசுக் கடிதம்

♦ 'தொடுகின்ற தூரத்தில் டினோசார்கள்' கட்டுரை பிரமிப்பில் ஆழ்த்தியது. ஒரு விஷ யம்... நம் நாட்டில் அரசியல்வாதிகள் உருவத் தில் 'பலதுகள்' உலவிக் கொண்டிருக்க, இவை யெல்லாம் தேவைதானா?
திண்டுக்கல், ஜனனி பார்கவி.

♦ அடுத்த ஆண்டு கோட்டையில் கொடி யேற்றப் போவது எங்கள் சூப்பர் ஸ்டார்தான்! இதைச் சொல்லும் துணிச்சல் இல்லாமல் 'முதலமைச்சர்தான்' என்று தராசு நழுவியது ஏன்?
அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

♦ கதையை கவிதையாய் சொல்லும் இயக்கு னர் கே. விஸ்வநாத்தின் மனந்திறந்த பேட்டி சிறப்பாக இருந்தது.
திருச்சி – 8, மா. நளினி.

♦ 'டிங்... டிங்...' சிறுகதை படித்தேன். பள்ளி மாணவனின் மணி அடிக்கும் ஆசையை மையமாகக் கொண்டு அவனது தவிப்பையும் ஏமாற்றத்தையும் அழகாக விளக்கியுள்ளார். இந்த ஏக்கம் எல்லோருக்குமே பொதுவானது என்பதால் இக்கதை ஒவ்வொரு வாசகரோடும் சம்பந்தமுள்ளதாகி விட்டது!
ஸ்ரீரங்கம், சௌரிராஜன் ராஜேஷ்.

♦ சி. வி. நரசிம்மனின் "மூன்றாவது கண்" கடந்த கால அரசியலின் உள்நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்து வரு கிறது. மொரார்ஜியைப் பற்றிப் படிக்கும் போது 'எப்பேர்ப்பட்ட பிரதமரைப் பெற்றிருந் தோம்!' என்ற பெருமிதமும், இழந்து விட்ட ஏக்கமும் எழத்தான் செய்கிறது!
திருவண்ணாதபுரம்,
தி. சு. பாலசுப்பிரமணியன்.

பதினைந்து ரூபாய்

வாசலில் வந்து நின்றது லாரி. கல்யாணராமனின் அரைத் தூக்கம் கெட்டது. பகல் தூக்கம் போல் அழகான விஷயம் வேறெதுவுமில்லை. அதுவும் லாட்ஜ் அறையில் தூங்கி ரசித்தவை நிறைய. சனிக்கும் ஞாயிறுக்கும் காத்திருந்த நாட்கள் அவை.

"கக்கூஸ் லாரிக்காரன் வந்துட்டான். பாக்கலியா?"

உமாவின் உசுப்பும் குரல். எந்நேரமும் அதிகார த்வனியோடே. அவளை நினைக்கும் போதெல்லாம், கண்ணெதிரே பிரம்போடு நிற்கும் ஒரு குண்டு டீச்சர்தான் ஞாபகம் வருவாள்.

குழைவு தெரியாது. கனிவு தெரியாது. வார்த்தைகள், பளபளக்கும் கத்தி. கல்யாணராமனின் லாட்ஜ் கனவுகள் வேறு. பெரும்பாலும் தமிழ் சினிமா தந்த நெளிவு சுளிவுகள்.

உமா கொஞ்சம் ஏமாற்றம்தான். ஆனால் வாழ்க்கைக்கு ஏற்றவள். வெள்ளித் திரைக்கும் வாழ்க்கைக்குமான இடைவெளியைப் புரிந்து கொண்ட போது, உமா உத்தமமானாள்.

கடன் வாங்காதே. இருப்பதில் வாழப் பழகு. சேர்க்கப் பழகு. பேங்க் பேலன்ஸ் அடுக்கு. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள். பின்னர் கொஞ்சமாய் சௌகரியம். வீடு. அப்புறம் சோபாசெட். பிரிட்ஜ். அதற்காக உழை.

''அப்போ குழந்தை, குட்டி, சந்தோஷம்?''

"இப்ப எதுக்கு அதெல்லாம்? மெதுவா பெத்துக்கலாம். மொதல்ல முன்னுக்கு வர வழியப் பாருங்க."

லாட்ஜின் மற்றொரு கனவும் தட்டிக் கழிந்தது. உழைப்பு. உழைப்பு. உழைப்பு. வீடு வந்தால், போர்வைக்குள் முடங்குதல்.

கைக்கெட்டா சந்தோஷம்.

கல்யாணராமன் வெளியே வந்தான். தாட்டியான ஆள் சலாம் வைத்தான். இரண்டு நாளைக்கு முன், உமாவின் நச்சரிப்பு தாங்காமல், முனிசிபாலிட்டியில் போய் சொன்ன போது, அறிமுகமானவன்.

"ஏமி சார், இம்மாந்தொலவா இருக்குது வூடு! கண்டுபுடிக்கறதுக்குள்ளார பேஜாரா ஆயிடுச்சி."

அருகே நின்ற மூவரும் சட்டையைக் கழற்றத் தொடங்கினார்கள். கல்யாணராமன் புன்னகைத்தான். எல்லாரும் சொல்லும் குறைதான் நாயுடுவுடையதும். சென்னைக்கு மிக அருகே, பத்தடியில் சுவையான குடிநீரும் ஐந்து நிமிட நடையில் ரயில்வே ஸ்டேஷனும் மார்க்கெட்டும் வங்கியின் கடன் வசதியும் உள்ள இடமாய்த்தான் இது சொல்லப்பட்டது.

நகைகளை அடகு வைத்து, லோன் போட்டு, வீட்டைக் கட்டி, அப்பாடா என்று உட்கார்ந்த போது, அட்டையும் தேரையும் கூடவே வாழ வந்தது. சுற்றியிருந்த புதரிலிருந்து கொசுக்கள் மலேரியா கொணர்ந்தன. மழைக் காலத்தில் செப்டிக் டேங்க் நிரம்பி, வயிற்றைப் புரட்டும் நாற்றமும் கிளம்பியது.

"நாங்க பாத்துக்கறோம் சார். நீங்க உள்ள போங்க. ஒரே நாத்தம்."

கருப்பாய் இருந்தவன் சொன்னான். கல்யாணராமன் பக்கெட்டுகளும் துடைப்பமும் கொடுத்து விட்டு நின்றிருந்தான். ஒருவன் பைப்பைப் பிடித்துக் கொள்ள, ஒருவன் மோட்டரை இயக்கினான்.

அப்போதுதான் கல்யாணராமன் கவனித்தான். லாரிக்குள் ஒருவன் உட்கார்ந்து புகைத்துக் கொண்டிருந்தான். தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பது போல் தோற்றம்.

நாற்றம் குமட்டியது. தொடர்ந்து நின்றால் வாந்தி வரலாம். திரும்பிப் பார்க்க, உமா உள்ளே போய் விட்டிருந்தாள்.

வாசல் பக்கம் வந்து உட்கார்ந்து கொண்டான். மோட்டர் இறைச்சல் நரம்பு வரை நீண்டது. பொறுத்துக் கொண்டான்.

"எவ்வளவு கேட்டாங்க?"

பின்னால் உமா. கேள்விப் பார்வை.

"ஆளுக்கு அம்பது கேட்டாங்க. முப்பதுக்கு ஒத்துண்டாங்க."

"நூத்து இருபதாச்சு. பணம் வெச்சிருக்கீங்களா?"

"இருக்கு."

'நூறு ரூபாய்க்கு ஒத்துப்பாங்களான்னு கேளுங்க. ஏற்கெனவே முனிசிபாலிட்டியில வேற பணம் கட்டியிருக்கு. இந்த மாசம் எக்கச் சக்க செலவு."

பேசிக் கொண்டே உமா உள்ளே போனாள். கல்யாணராமனுக்கு எரிச்சலாக இருந்தது.

முக்கால் மணி நேரத்தில், இறைச்சல் அடங்கியது. மண்டை வலிப்பது தொடர்ந்தது கல்யாணராமனுக்கு.

"பினிஷ்டு சார். சுத்தமாயிடுச்சி."

வாசல்படியில் கருப்பாயிருந்தவன் கை, கால்களைத் துடைத்துக் கொண்டிருந்தான். வெளியே வந்தான் கல்யாணராமன்.

"மழை வந்தாத்தான் சார் ப்ராப்ளம்."

வெறுமனே தலையாட்டினான் கல்யாண ராமன்.

"அவரு எங்கே? தாட்டியா இருப்பாரே?"

"கை கால் கழுவிக்கிட்டிருக்காரு சார். வரு வாரு."

"நாலு பேரு வேலை செஞ்சிருக்கீங்க."

"அஞ்சு பேரு சார். நானு, குமாரு, மாரி, டில்லி, சாமிக்கண்ணு, அஞ்சு பேரு வந்து கிறோம் சார்."

ஆர். வெங்கடேஷ்

"வண்டியில ஒக்காந்துகிட்டிருந்தாரே, அவரையும் சேர்த்து சொல்றீங்களா?"

"டில்லி சார். நம்ம வண்டி இளீனரு. நம் மாளுதான் சார் அவரு."

"அவரு ஒண்ணுமே பண்ணலியேய்யா?"

"என்னா சார், அப்படி சொல்லிட்டீங்க. அவன் இல்லன்னா வண்டி போவாது சார்."

இன்னும் இருவர் கூட வந்து நின்று கொண்டனர். பார்வையில் கேள்வி. முண்டாக கட்டியவன் முன்னால் வந்தான்.

வேலை செய்யாதவனுக்குக் கூலி கேட்பது என்ன நியாயம்? இவ்வளவு நேரம் வெறுமனே வண்டியுள் உட்கார்ந்து கொண்டிருந்திருக் கிறான். அவனுக்கு ஏன் கூலி தர வேண்டும்? கூடாது. கூடவே கூடாது. நியாயமே இல் லையே?

டில்லி நெருங்கி வந்தான்.

"நான்தான் சார் வண்டியோட்டறவ்ன்."

"சரி. ஆனா, இங்க நீ ஒண்ணுமே வேலை செய்யலியே."

"என்னா செய்யலன்ற. வண்டி ஓட்டறது வேலையா தெரியலியா?"



"அதிகம் பேசாதே. நீ வேலை செய்யலை. நான் பாக்கலை. அதனால நான் துட்டு தர மாட்டேன்."

"புத்திய காம்ச்சிட்ட பாத்தியா? இவ்னோ தொலவு வரவே மாட்டோம். உன் பேச்ச நம்பி வந்தோம் பாரு. எங்கள ஜோட்டால அடிக்க ணும். நீ இன்னொரு தரம் வராம போ மாட்டே. அடுத்த வருஷம் திருப்பியும் மழ வரும். வந்து கூப்பிட மாட்ட? அப்ப கவனிச் சுக்கறோம்."

டில்லி குரல் உயர்ந்து கொண்டே போனது. கல்யாணராமன் மௌனம் காத்தான். நிச்சயம் தரப் போவதில்லை. தாட்டியான ஆள் அவசர மாய் ஓடி வந்தான்.

"சார், அவரு நம்மாளுதான் சார்."

"இருக்கட்டும். எனக்கு ஒண்ணும் வேலை செய்யலை. நான் தர மாட்டேன்."

கோபமும் இயலாமையும் கைகோத்துக் கொண்டன. ஐந்து பேர் கொண்ட கூட்டம். எதிரே தனியே கல்யாணராமன். வளர விடக் கூடாது.

"நாலு பேருக்குத்தான் துட்டு தருவேன். இஷ்டமானா வாங்கிக்கங்க. இல்ல நடையை கட்டுங்க."

சட்டென பின்வாங்கி ரேழி தாண்டி அறைக் குள் போனான் கல்யாணராமன். டில்லி கத்து வது கேட்டது. மற்றவர்களின் பேச்சு சத்தமும் கூடவே.

பணம் எடுத்துக் கொண்டு வெளியே வர, ரேழி படியருகே அவர்களின் தலைவன். தாட்டியான மீசைக்காரன்.

"கோச்சுக்காதீங்க சார். நம்ம பையன்தான். இரண்டு மூணு நாளா ஜொரம் சார். நல்லா வேலை செய்யற பையன்தான். ஒடம்பு முடி யலை. மழ வேற. வேலயும் இல்ல. இன்னைக்கு கொஞ்சம் பரவால்லன்னு சொன்னான். கூட் டிட்டு வந்தேன். பாத்து போட்டு குடுங்க சார். முப்பது ரூபா, வேணாம் சார். பதினஞ்சு ரூபா குடுங்க. கூட வந்துட்டான், பாவம். ரெண்டு மாசத்துக்கு முன்னாடிதான் கல்யாணம் கட்டி னான். துட்டு எடுத்துக்கிட்டு போலன்னா, வூட்டுவுள்ளேயே சேக்காது சார், அவன் சம் சாரம். நைட்டு படுக்கக் கூட வுடாது சார்!"

கல்யாணராமன் சட்டென்று அடங்கி னான். உள்ளே திரும்பிப் பார்த்தான். சமைய லறை வாசலில் உமா நின்றிருந்தாள். இவனை முறைப்பது போலிருந்தது அவள் பார்வை.

பொருட்படுத்தாமல் உள்ளே போய், பதி னைந்து ரூபாய் எண்ணிக் கொண்டு வந்தான்.

டில்லி வாசல்படியருகே நின்றிருந்தான். கண்களில் ஏக்கம்.

லாரி கிளம்பிய போது, டில்லி கண்களில் நிம்மதி தெரிந்தது கல்யாணராமனுக்கு. மன சுக்கு சந்தோஷமாக இருந்தது.


பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி விதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *



குபேரன் வைப்பு திட்டம்

வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்.
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்

அமுத சுரபி டிபாசிட் திட்டம்



டிபாசிட் தொகை	காலம்	கிடைக்கும் தொகை
ரூ. 5,600	15 வருடம்	ரூ. 1,00,000
ரூ. 7,000		ரூ. 1,25,000

கல்பதரு மணிபேக் திட்டம்




அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டிவீதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	20%
ரூ. 10,000 கீழ்		19%

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்



கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்


தளிர் நடை பயிலும்
அழகுச் செல்வங்களுக்கு
தரமான ஆடைகள்
Just For Kids
ஆண், பெண், சிறுவர்களுக்கான பனியன்கள்,
ஜட்டிகள், டீ-ஷர்ட்டுகள்
இன்ட்டிமேட்
எவரெடி நிட்டிங் & வீவிங் கம்பெனி, திருப்பூர் - 1.
விவரங்களுக்கு : டெக்ஸ்நிட் டிரேடர், 13/2, கிரஸண்ட் பார்க் தெரு, சென்னை - 17. போன் : 4340188
LAYAM

என்னுயிரும் நீயல்லவோ

வெளிப் பார்வைக்கு ஆணாதிக்க அலட்டல் போல் தோன்றினாலும், ஆழ்ந்து யோசிக்க, இந்த அன்பு சீராட்டல் போலிருந்தது. மனசு பெண் பின்னால் அலையாது பெண்ணை விதவிதமான போகப் பொருளாய் கற்பனை செய்யாது, போகத்தை அனுபவித்து, வேறு உயர்வுக்கு தாவி விட்டது. இந்த போகம் நிலைத்து நிற்க வேண்டுமெனில் அந்த உயர்வுகளும் நிலைத்து நிற்க வேண்டும்.

'காப்பி எஸ்டேட் தப்பு, அது வெறும் குப்பை' என்கிறார்கள். இல்லை என்று மனம் சொல்கிறது. வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. சொர்ணலட்சுமியை மலையிலேயே விட்டுவிட்டு மதுரைக்குப் போக வேண்டும். மீதிக் காசை நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ புரட்டி எடுத்து வர வேண்டும். காப்பி என்று சொல்லாமல் வேறு ஏதேனும் சொல்ல வேண்டும். 'கடனாய்க் கொடு' என்று சொல்ல வேண்டும். வட்டிக்குக் காசு தரும் உறவுகள் அதிகம் உண்டு. எதையும் அடகு வைக்காமல், 'வெறும் நம்பிக்கையின் பெயரில் காசு கொடுங்கள்' என்று கேட்க வேண்டும்.

சொர்ணலட்சுமியைத் தொட்டு விட்டது தெரிந்தால் உறவுகள் முறைக்குமா... 'காசு கிடையாது போ' என்று சொல்லுமா.. 'அவளை விட்டுறு. உனக்கு எவ்வளவு வேணா 'தரேன்' என்று பேரம் பேசுமா... அம்மா என்ன சீறப் போகிறாள் என்று தெரியவில்லை. அம்மா, பகவதி சின்னம்மா மீது பாயலாம். பகவதி சின்னம்மா, சொர்ணலட்சுமியைத் துரத்தி விடலாம்.

ஆனால், எத்தனை விதமாக யோசித்தாலும், காப்பி எஸ்டேட் வாங்கியது சரி என்றே படுகிறது. உள் மனம் அதை இடைவிடாது ஆமோதிக்கிறது.

ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதும் மனசு மிரண்டு போனதை, முகம் காட்டிக் கொடுத்து விட்டது.

கிருஷ்ணமூர்த்தி அய்யர் ஹிண்டு பேப்பரின் வணிகப் பகுதியில் சிறிய கட்டத்துக்குள்ளிருந்த செய்தியைத் தொட்டுக் காண்பித்தார்.

பிரேசில் காப்பியில் பூச்சி தாக்குதல். மிகக் கடுமையாய் பிரேசிலின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று எழுதப்பட்டிருந்தது. என்னவென்று ஹூர்த்து ஆபத் சகாயம் கேட்ட போது ஒன்றும் இல்லை என்று சொல்லி விட்டார்.

"எதுக்கு பயப்படறே? இது சுபசகுனம்! நீ காப்பி எஸ்டேட் வாங்குற போது பிரேசில் டவுனாகிறது. பிரேசில் காப்பி கிடைக்க லேன்னா, உலகம் பூரா காப்பிக் கொட்டை விலை, காப்பி எஸ் டேட் விலை ஏறும்."

"எவ்வளவு ஏறும்?"

"குறைந்தபட்சம் இரண்டு மடங்கு ஏறும்!"

"அய்யர், ஏறிச்சுன்னா குடும்பத்தோட எங்கிட்ட வாங்க. ரெண்டு நாள் எஸ்டேட்ல தங்குங்க. ஏறின விலையில ஒரு பர்செண்ட் தரேன்!"

"கடவுளே! அது உன்னோட லாபம் அப்பா!"

"உண்மைதான். ஆனா அதை ஹூர்த்துகிட்ட சொல்லலியே? அந்த நன்றிக்காக இந்த காசு தரேன்."

எப்போது விலை ஏறும் என்பதுதான் தெரியவில்லை.

24

பாலகுமாரன்

சொர்ணலட்சுமியோடு காரில் ஏறி, எஸ்டேட்டுக்குத் திரும்பினான். பகவதி, கார் சத்தம் கேட்டு விட்டு, விரைந்து வந்து பார்த்தாள். சொர்ணலட்சுமியும் கதிரேசனும் கீழே இறங்கியதும் சரக்கென்று வீட்டுக்குள்ளே போனாள். அந்த வேகத்தில் கோபம் தெரிந்தது.

"எங்கடி போயிருந்தே?"

"காப்பி எஸ்டேட் வாங்கறதுக்கு."

"நேரம் காலத்துக்கு வீடு திரும்பியிருக்கக் கூடாது?"

"நான் சொன்னேன்!"

"நீ இங்க இருந்தாத்தானே பிரச்னையெல்லாம்? நீ கிளம்பி நாகர்கோவிலுக்குப் போ" பகவதியின் கோபத்துக்கு சொர்ணலட்சுமி பதில் பேசாதிருந்தாள்.

"இன்னாடி பேசாத நிக்கறே? எடு பொட்டியை! போ!"

விரட்டினாள்.


கதிரேசன் அறையை விட்டு மெல்ல வெளியே வந்தான்.

"சொர்ணலட்சுமி இங்கயே இருக்கட்டும்."

"அவ இன்னாத்துக்கு? உனக்குத்தான் சொந்த தங்கச்சி மதுரைல இருக்கே?" பகவதி கொக்கி போட்டாள்.

"சொர்ணலட்சுமி தங்கச்சி இல்லை. பொண்டாட்டி!" கதிரேசன் நிதானமாகச் சொல்ல, பகவதி நெருப்பு கொட்டியது போல் பின்னடைந்தாள். 'ஐய்யோ, ஐய்யோ...' என்று உரத்த குரலில் வீடு முழுவதும் அலைந்தாள்.

எஸ்டேட்டில் வேலை செய்கிற நாராயணனும் அவன் மனைவி புனிதவதியும் தபதபவென்று வீட்டுக்குள் ஓடி வந்தனர். நாலைந்து கூலிப் பெண்கள் வாசலில் கூடி



நின்றனர். புனித வதி ஓடிப் போய் பகவதியைப் பிடித்துக் கொண்டாள். என்ன நடந்தது [illegible] விசாரித்தாள்.

[illegible]நான் இன்னாடி பதில் சொல்[illegible]ன்? செட்டியார் பொண்[illegible]டிக்கு நான் இன்னாடி பதில் சொல்லுவேன்? என்னை மரியா[illegible]ா நடத்தின பொம்பளை தலை[illegible] நான் மண்ணைப் போட்டுட்[illegible]டி! நான் திட்டம் போட்டு [illegible]க குடியைக் கெடுத்ததா அவங்க சொல்லு[illegible]ளேடி! தடுக்குனு சொர்ணலட்சுமி எம்[illegible]ண்டாட்டின்னு சொல்றானே! அடே, [illegible] தப்புடா! வெந்த புண்ணில் வேலை [illegible]ய்ச்சாதடா! செட்டியார் செத்துப் போன துக்கமே ஆறியிருக்காது. இடி மாதிரி இன்னொரு விஷயம் சொல்லாதடா. என்னை அப்படிப் பார்க்காதே. 'நீ இன்னாடி யோக்கியதை'ன்னு என்னை கேட்டுறாத. என் யோக்கியதை ரொம்பப் பெரிசு. நான் யார் வயித்தெரிச்சலையும் கொட்டிக்கலை. இந்த எஸ்டேட்டிலிருந்து ஒரு இலை கூட நான் எடுத்துனு போகலை. அதுனாலதான் ஆச்சி என்னை அத்தனை மரியாதையா நடத்தினாங்க. அதுனாலதான் ஏலக்காய் சொல்லிக்குடுன்னு உன்னை இங்கு அனுப்பினாங்க. ஆச்சிக்கு நெஞ்சு நோவுன்னா ஹார்ட் அட்டாக்கோன்னு சந்தேகப்பட்டேன். ஆச்சிக்கு உடம்பு சரியாகணும்னு நான் விரதம் இருக்கேன்டா. என்னடி நடந்தது. ஏன் கதிரேசன் உன்னைப் பொண்டாட்டின்றான்?"

பகவதி ஆத்திரத்துடன் சொர்ணலட்சுமியை நெருங்கி,

அவள் தலைமுடியைப் பிடித்து இழுத்து அடித்தான்.

கதிரேசன் அவனிடமிருந்து விலக்கி சொர்ணலட்சுமியைத் தன் அறைக்குள் தள்ளினான்.

"நான் சொல்றேன், நான்தான்னு எங்கம்மா கிட்ட நான் சொல்லுறேன். உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு நான் சொல்றேன். ரொம்ப பண்ணாதீங்க!"

"என்ன எஸ்டேட் வாங்கின... எங்க இருக்கு அது?"

பகவதி அவனை நோக்கித் திரும்பினான் அவன் அதட்டலுக்கு கதிரேசன் பதில் சொன்னான்.

"அது வெறும் குப்பையான இடம்! பாலை யூக்கலிப்டஸ் கூட வராது. மொத்த காசையும் கொண்டு போய் காப்பியில போட்டுவே அப்பா வாங்கணும்ன எஸ்டேட்தானே உன்னை வாங்கச் சொன்னேன். நமக்கு ஏலக்காய் தெரியும்! காப்பி பத்தி என்ன தெரியும்?"

"தெரிஞ்சுக்க வேண்டியது தான்."

"இன்னும் எவ்வளவு தரணும்?"

கதிரேசன் பாக்கி தரவேண்டிய தொகையைச் சொன்னான். மதுரைக்குப் போய் புரட்டிக் கொண்டு வரப் போவதாகத் தெரிவித்தான்.

"பத்து பைசா பேறாது. ரெண்டாவதா என்னைத் தொட்டதுக்கு உங்க ஜாதி, செட்டியாரைப் பல விஷயங்கள்ல தவிக்க விட்டது. இருபத்தி நாலு வயசில இவதான் பொண்டாட்டின்னு சொல்றியே, உன்னை கிட்ட சேர்க்குமா? மதுரையிலிருந்து உன்னால பத்து பைசா கொண்டார முடியாது."

"அப்ப மலையிலயே காக பாப்பேன்! இந்த எஸ்டேட்டை பேங்க்ல அடமானம் வைப்பேன காப்பி எஸ்டேட் மீதியைக் கட்டுவேன். காப்பி எஸ்டேட் விலை உயரும். அதை வைச்சு கடனை அடைப்பேன்!"

அதுவரை மவுனமாக இருந்த நாராயணன் திரும்பி, தன் மனைவியைப் பார்த்தான்.

"நம்ம எஸ்டேட்டை எதுக்கு பேங்க்ல அடமானம் வைக்கணும்? எனக்கு பத்து ஏக்கர் என் நிலம் பக்கமா பிரிச்சுக் கொடுத்துடுங்க. இன்னிக்கு என்ன விலையோ அதை நான் தரேன்!"

"இந்த எஸ்டேட்டை நான் விக்கிற மாதிரி யில்லை."

"இத்தினி நான் இந்த எஸ்டேட்ல கஷ்டப் பட்டேன். நீங்க புது முதலாளி. எங்களைப் பத்தி அக்கறையோட நடந்துக்கணும். உங்கய்யா எனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சாரு. அந்த நன்றிக்கு அவருக்கு அடிமையா



உழைச்சேன். உங்களுக்கு உழைக்கணும்னு என்ன அவசியம்? நாங்க ஒரு நாள் அலட்சியமா இருந்தாக்கூட ஏலக்காய் போயிடும். நான் என்ன சும்மாவா கேட்டேன்? உங்களுக்குக்காக வேணும். நான் தரேன். எனக்கு நிலம் வேணும்!"

"தர்றா மாதிரியில்லை."

"பட்டுனு அப்படிப் பேசாதீங்க தம்பி."

"நீங்க பேசறது சரியா? எப்படா இவன் சங்கடத்துல மாட்டுவான்னு காத்துக்கிட்டு இருந்தில்லை கேட்கறீங்க? கூட சம்பளம் தரேன்னா வேற ஆள் வருவான். நீங்க தேவையில்லை."

"பகவதி அம்மே! நான் போய் வருகிறேன்" என்று மலையாளத்தில் சொல்லி விட்டு நாராயணன் வெளியேறினான். புனிதவதி பின் தொடர்ந்தாள்.

"நீ ஆழம் தெரியாம காலை விடுறே! அதிகம் ஆடறே! ஏலக்காய் பத்தி எதுவும் தெரியாதவன், நாப்பத்தி ரெண்டு ஏக்கர் காப்பி வாங்கினு வந்து நிக்கிறே. இங்க நடக்கிற விஷயம் எல்லாத்தையும் நான் ஆச்சிகிட்ட போய் சொல்லப் போறேன். என் மனசும் கையும் சுத்தம்னு நேரா நின்னு பேசப் போறேன். நான் இல்லாத போது நீ இங்க இருக்கக் கூடாது. கிளம்புடி."

"அவ இங்கதான் இருப்பா. நீங்க போகலாம்!"

பகவதி அவன் குரலில் திடம் பார்த்து திகைத்தாள். தரையில் உட்கார்ந்தாள்.

வினாயகத்தின் எதிரே லட்சுமணச் செட்டியார் மிகுந்த யோசனையோடு உட்கார்ந்திருந்தார்.

"பிரேசில்காரன் மாட்டிக்கினான்! முன்ன ஒரு தடவை பூச்சி அடிச்ச மாதிரி, இந்தத் தடவையும் பூவுல பூச்சி விழுந்திடுச்சு. பூ கருகிப் போச்சின்னா காய் எங்க, பழம் எங்க? வந்த பழமும் கையில புடிச்சா நொறுங்கிப் போயிடுதாம்!"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"ஹிண்டுல வணிகப் பகுதியில சின்னதா போட்டிருக்கான்."

"அப்ப நிறைய பேர் காப்பி வாங்குவாங்க."

"ஆமா! ஏலக்காய் மழையைப் பார்த்த பயிரு. குழந்தையைப் பார்க்கிற மாதிரி பார்க்கணும். காப்பிக்கு இத்தினி கஷ்டப்பட வேணாம்."

"அது கிடக்கு. காப்பி விலை ஏறுமா?"

"ஏறும். ஏறலாம்!"

"அப்ப ஏலக்காய் தோட்டம் என்னாவும்?"

"காப்பிய வாங்குறதுக்கு ஏலக்காயை விப்பான். அதுவும் ஏலக்காய்ல ஆள் கிடைக்காம அல்லது ஆளுங்க தப்பா நடந்து லாபம் சரியா கிடைக்காத தோட்டக்காரங்க வித்துடுவாங்க!"

"தோட்டம் கைமாறினா லேபர்க்கு நல்லதா, கெட்டதா?"

"ஒரு வகையில நல்லது, ஒருவகையில கெட்டது. ஆயிரத்தைந்நூறு ரூபாய் சம்பளக்காரன் ரெண்டாயிரத்துக்கும் போவான். ரெண்டாயிரம் ரூபாய் சம்பளக்காரன் மூவாயிரத்துக்கும் போவான். ஆனா புது முதலாளி, 'இது என்னா அது என்னா'ன்னு கேப்பான். வேலையாளை சந்தேகமா பாப்பான். நம்ம இஷ்டத்துக்கு ஆட முடியாது. பையில் ஏலக்காய் போட்டுனு போக முடியாது. புதுக்கூலி ஆளுங்ககிட்ட வேலை வாங்கறது வேற கஷ்டம். நாளையிலேர்ந்து யூனியன் கறுகறுப்பாயிடும் பாரேன்! பன்னிரெண்டு ரூபா கூலியை பதினெட்டா மாத்துன்னு சொல்லப் போறான், பாரேன். ஒவ்வொரு எஸ்டேட்டிலேயும் கேட் மீட்டிங் போடுவான். நம்மை மாதிரி முதலாளிக்கு வேண்டப்பட்டவன் போகும் போது 'கங்காணி ஒழிக' அப்படின்னு திட்டு வான்."

"அப்புறம் வேற இன்னாவும்?"

"மதுரையில இருக்கிற பெரிய ஆளுங்க கேட்டு முதலாளிங்க, கேரளாவுல துபாய் காசு எடுத்தாந்தவங்க எல்லாம் வருவானுங்க. மலை அல்லோலகல்லோலப்படும்!

"எவனோ புரளி கிளப்பி வுட்ருக்கானுங்க! காப்பிக்குப் போகட்டும்டா! போய் காயடி பட்டுத் திரும்பட்டும். அந்தப் பொண்ணு சொல்லித்தான் கதிரேசன் காப்பித் தோட்டம் வாங்கியிருப்பான். நாப்பத்திரெண்டு ஏக்கர் காசுக்கு என்ன பண்ணியிருப்பாங்க? ஒரு வேளை ஏலக்காய் தோட்டம் விப்பானோ! ஒரு பத்து லட்சம் எடுத்துக்கிட்டு மலைக்குப் போவோம். அவன் விக்கிறேன்னா அவன் தோட்டத்தை வாங்குவோம்."

இந்திய காப்பி போர்டுக்கு ஐரோப்பிய கம்பெனி ஒன்று விலை கேட்டு, தரம் கேட்டு கொள்ளளவு கேட்டு, ஒரு அவசரக் கடிதம் அனுப்பியது. மாலையே பதில் அனுப்பப் பட்டது. இரண்டு நாள் கழித்து பல்லாயிரக் கணக்கான டன்னுக்கு ஆர்டர், போர்டுக்கு அனுப்பப்பட்டது. காப்பி போர்டு கொள் முதலை தீவிரப்படுத்தியது. மறுநாள் ஒரு கிலோவுக்கு பத்து ரூபாய் விலை ஏறியது. இன்னும் ஏறும் என்று அறிவிக்கப்பட்டது. நகர வியாபாரிகள் காப்பிக் கொட்டையைப் பதுக்கினார்கள். யார் கேட்டாலும் இல்லை என்று கைவிரித்தார்கள்.

இரண்டரை ரூபாய் என்று உடுப்பி ஓட்டலில் விற்ற ஒரு கப் மூன்றரையாயிற்று.

காப்பி தென்னிந்திய பானம். வட இந்திய அரசு அதைப் பற்றிக் கவலைப்படவேயில்லை.

லட்சுமண செட்டியார் பகவதியைத் தேடி மலைக்குப் போனார்.

(தொடரும்)

சத்யகிரிராஜன்

கட முடா ஒலியை உமிழ்ந்து கொண்டிருந்தது, ராட்சதக் கலவை இயந்திரம். சிமெண்ட் கலவைச் சட்டிகள், சித்தாள் பெண்களின் தலைச் சும்மாடுகளிலிருந்து சாரத்தின் மேலே மேலே போய், கீழே வந்து கொண்டிருந்தன. அந்த மூன்றடுக்கு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், பூச்சுவேலையால் புதுமெருகுடன் புன்னகை பூத்துக் கொண்டிருந்தது.

மரத்தடியில் 'ஸெல்லோ' மடக்கு நாற்காலியில் சாய்ந்தபடியே, 'அவனே! இவனே! ஏய் புள்ளே!' என்றெல்லாம் அழைத்து, அதட்டி, உருட்டி, ஏவிக் கொண்டிருந்தார் காண்ட்ராக்டர் சபாபதி. அப்போது, திடீரென்று அது நடந்து விட்டது. காம்ப்ளெக்ஸ் உச்சியில் மணிக்கூண்டில் பூச்சு வேலையில் இருந்த கணேசன் பாலன்ஸ் தவறி, அப்படியே மல்லாக்க மடாரென்று கீழே விழுந்து விட்டான். தன் கண் எதிரே அப்படி அவன் விழுந்து, தரையில் மோதியதைப் பார்த்த சபாபதி ஆடிப்போனார். ஆனாலும் முற்றிலும் பாலன்ஸ் இழக்காமல் உறுதிச் சமநிலைக்கு வந்தார். அவருக்கு மிகவும் வேண்டிய நான்கு பேர்களை மட்டும் கீழே இறங்கி வரச் சொல்லி, வேலையைக் கவனிக்கும்படி மற்றவர்களுக்கு உத்தரவிட்டார்.

பின் மண்டை பிளந்து, ரத்தம் தரையை நனைக்க, அகலமாகக் கிடந்தான் கணேசன். தலையில் ஈரத்துணியுடன் வேனில் ஏற்றப்பட்டான்.

"ஜி. ஹெச்சுக்கா?"– புரியாமல் கேட்டுவிட்ட அந்தப் புதிய டிரைவரை முறைத்தார் சபாபதி.

"ஏண்டா கேணப்பயலே... இத்தோட நான் வீட்லே முடங்கிடணும்னு நினைச்சிட்டியா? குமார் பாலி க்ளினிக் போடா! பின்னாடியே நான் வரேன்!"

பக்கத்து டெலிபோன் பூத்தில் டாக்டர் குமாரைப் பிடித்து, சொல்ல வேண்டியதைச் சொன்னார். டாக்டர் குமார் சபாபதிக்குப் பலவகையில் நெருக்கமானவர். கணேசன் கொடுத்துவிட்ட அந்தச் சிக்கலிலிருந்து அவரை விடுவிக்கக் கூடியவர்கள் டாக்டர் குமாரும் சரவணனும்தான்! சரவணனை அழைத்துவர ஒருவனை அனுப்பினார்.

ஐந்து லட்சரூபாய் எஸ்டிமேட்டிற்குக் குறையாத ஷாப்பிங், ஹவுசிங் காம்ப்ளெக்ஸ், அபார்ட்மெண்ட், ஹோட்டல், அரசுத் துறையோ, தனியார் துறையோ எதுவானாலும் நகரத்தில் அநேகமாக சபாபதியால்தான் எழும்பிக் கொண்டிருந்தது. சபாபதியும் மேலே மேலே மாருதி, காண்டஸா, பஜாஜ், கைனடிக் ஹோண்டா, டெம்போ, வேன், லாரி, மாம்பலத்தில் அவரால் பார்த்துப் பார்த்து முழுச் செங்கற்களால், சரியான கலவையில் உருவாக்கப்பட்ட 'சொர்க்கம்' என்னும் அம்சமான

மாளிகை, ஜொலிக்கும் ஸ்தூல மனைவி, மேலி டத் துணையுடன் இஞ்ஜினியரிங் கல்லூரியில் சீட் பிடித்துள்ள மகன், பி.எஸ்ஸி. படிக்கும் மகள், பல்லாவரத்தில் பெரிய பங்களா, அதில் ஒரு சின்னவீடு, அடிமட்ட அலுவலர்களி லிருந்து அமைச்சர்கள் வரை அசுரச் செல் வாக்கு, அக்னி நட்சத்திர உமாபதியை நினை வூட்டும் தோற்றம் இத்யாதிகளுடன், அசாத் தியமாக வளர்ந்து விட்டார்! மொத்தத்தில் நாட்டில் 'உழைப்பால் உயர்ந்து'ள்ள பலருள் சபாபதியும் ஒருவர்!

இந்த இருபத்தைந்தாண்டுகளில் அவரு டைய வேலையாட்களின் காலில் கம்பி குத்தி யிருக்கிறது. காலில் கட்டை விழுந்திருக்கிறது... இப்படி ஒரேயடியாக யாரும் 'டைவ்' அடித்து விழுந்ததில்லை!

பத்தே நிமிடங்களில் சரவணன் வந்தான். தோளில் கைபோட்டு அவனைத் தனியே அழைத்துச் சென்றார் சபாபதி. சரவணன் வேறு யாருமில்லை. கீழே விழுந்த கணேசனின் சொந்தத் தங்கையின் கணவன்! சிறு டீக் கடைக்குச் சொந்தக்காரன்.

சபாபதி கூறியதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டே இருந்தான் சரவணன்... மறுக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை!

கணேசனின் மனைவியிடம் விவரம் கூறி அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப் புறப் பட்டான் சரவணன்.

கணேசனின் மனைவி பூரணியுடன் அவன் தெருவே ஆண்களும், பெண்களுமாய் நர்சிங் ஹோம் வெளியே காத்திருந்தது. ஆப ரேஷன் தியேட்டரிலிருந்து ஸ்ட்ரெச்சர் வெளி வருவதைக் கண்ட அந்தக் கும்பல் உள்ளே புகுந்தது. அங்கே கட்டிலில் கிடந்த கணே சனின் நெஞ்சில் முகம் பதித்து விம்மிக் கொண்டிருந்தாள் பூரணி.

''மூளையிலேயும் முதுகெலும்பிலேயும் பலமான அடிபட்டிருக்கு.. என்னாலே எதுவும் செய்ய முடியல்லேம்மா!''

கண்ணீரோடே டாக்டரை நிமிர்ந்து பார்த் தாள் பூரணி.

''என்கிட்டே சொன்னா வேலைக்கு வேணாம்னு சொல்லிருவேன்னு பயந்துக் கிட்டுச் சொல்லாம மறைச்சிட்டான் பாவி! சொல்லியிருந்தான்னா, அட்வான்சா பணம் கொடுத்து, மருந்து, மாத்திரை சாப்பிட்டு, பத்துப் பதினைஞ்சு நாள் கழிச்சு வேலைக்கு வந்தாப் போதும்னு சொல்லியிருப்பேன்!''–

கண்களைத் துடைத்துக் கொண்டு விவரம் புரியாமல் சபாபதியைப் பார்த்தாள் பூரணி.

''நானும் எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்திட்டேன் தங்கச்சி. பணம், காசு வேணும்னா கைமாத்தா நான் தரேன்... இப்போ இந்த உடம்போட வேலைக்குப் போக வேணாம்னு சொன்னேன்... மச்சான் கேக் கலையே?''– அவன் பங்கிற்குச் சரவணன் பூரணியைக் குழப்பினான்!

''நீங்க எல்லாரும் என்ன சொல்றீங்க?''

''அப்போ உனக்கு எதுவுமே தெரியாதா? ஏய்யா... நீ தானே இவரைக் கூட்டிக்கிட்டு வந்தே?''

''ஆமாங்க டாக்டர்... நான் சொல்லியும் மச்சான் கேக்கல்லே! நான் எதுவுமே சொல் லக்கூடாது... அவர் சம்சாரத்துக்கிட்டே மட்டு மில்லே, என் சம்சாரத்துக்கிட்டேயும் வாயே திறக்கக் கூடாதுன்னு என் கிட்டே சத்தியமும் வாங்கிட்டார்! டாக்டரய்யா மறந்திருப்பீக... இந்த கணேசன் தங்கச்சிதான் என் சம்சாரம்!''

''அடப்பாவி! அப்படியிருந்துமா... இப்படி அலட்சியமா இருந்திருக்கே.. இந்தாம்மா... உன் வீட்டுக்காரர்....''


''உடம்புக்கு முடியல்லேன்னு உங்க கிட்டே வந்தாரா? எப்போ? அவர் உடம்புக்கு என்ன டாக்டரய்யா?''

''நான் சொல்றேன் தங்கச்சி! ரெண்டு வாரம் முன்னாடி ஒருநாள் சாயங்காலம் வேலை முடிஞ்சு திரும்பினப்போ என் கடைக்கு வந்து டீ குடிச்சிட்டு, பேசிக்கிட்டி ருந்திட்டு மச்சான் புறப்பட்டப்போ, திடீர்னு தடுமாறி விழப்போயிட்டான்! பதறிப்போய், மச்சானைப் பிடிச்சு பெஞ்ச்சிலே படுக்க வச் சேன்... ஒரு வாரமா, தலைச் சுத்தல் இருந்திட்டு வர்ரதா மச்சான் என் கிட்டே சொன்னான்... மச்சானைக் கட்டாயப்படுத்தி இந்த டாக் டரய்யாகிட்டே இழுத்துக்கிட்டு வந்தேன்... டாக்டர் அவனை டெஸ்ட் பண்ணி, பிரஷர்

''எம். எல். ஏ. ஆனதும் ஸ்கூலும் ஆஸ் பத்திரியும் கட்டித் தர்ரேன்னு சொன் னீங்களே... செய்தீங்களா?''

''மூத்தவனுக்கு ஆஸ்பத்திரியும், இளையவனுக்கு ஒரு ஸ்கூலும் கட்டித் தந்து பிழக்கச் சொல்லிட்டேனே!''

–எம். அசோக் ராஜா



இருக்குதுன்னு மருந்து, மாத்திரை எழுதிக் கொடுத்தார்... ரெண்டு வாரத்துக்கு வேலைக்குப் போகக் கூடாது... வேலை பார்த்துக்கிட்டிருக்கிறபோது, தலை சுத்தி விழுந்திட்டா ஆபத்துன்னு டாக்டர் சொன்னாரு! அப்படியே ஆயிடிச்சே, தங்கச்சி?"

"இதையெல்லாம் என்கிட்டேயும் அவர் தங்கச்சிகிட்டேயும் சொல்லவே கூடாதுன்னு அவர் சொல்லிட்டார்... இல்லையா?"

"ஆமாம் தங்கச்சி! உனக்குத் தெரிஞ்சிரிச்சன்னா, உன் புருசனை வேலைக்குப் போக விடாம தடுத்திட்டு, நீ வேலைக்குப் போயிருவேன்னு உன் புருசன் பயந்திட்டான்!"



"பொய்! அவ்வளவும் பொய்! அண்ணி! நம்பாதீங்க... இவரு எப்படிப்பட்ட ஆளுன்னு எனக்கு நல்லாத் தெரியும்!"- அண்ணனின் முகத்தையே பார்த்துக் கொண்டு அதுவரை கல்லாய் அமர்ந்திருந்த காவேரி அலறினாள்!

"எனக்குத் தெரியும் காவேரி. முழுசா உன் அண்ணனுக்காக அழுது முடிச்சிடு! அது போதும்! உன் புருசன்கிட்டே உன் ஆத்திரத்தைக் காட்டி, உன் புருசனைப் பறிகொடுத்திடாதே! அண்ணன் இல்லாம இருந்திடலாம் காவேரி... புருசன் இல்லாம இருக்க முடியாது... நான் அனுபவிக்கப்போறேன்.... உனக்கு அது வேணாம் காவேரி! இனிமே எனக்குப் புருசனும் இல்லே... அண்ணனும் இல்லே... உன் புருசனை இதுவரையிலே என் அண்ணனாத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன். இப்போ அந்த சொந்தமும் போயிடிச்சு!"

"அப்போ நாங்க சொல்றதை நீ நம்பல்லே... அப்படித்தானே?"- கடுமை தெறிக்கக் கேட்டார் சபாபதி.

"தங்கச்சி! உன் துக்கம் புரியது... ஆனா நீ நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லே! கணேசன் போயிட்டதாலே முதலாளி குழம்பிப் போய் இருக்காரு! தனியா இனிமே எப்படிச் சமாளிக்கப்போறேன்னு உன்னை நினைச்சுக் கவலைப் படறாரு! அதனாலே.. தப்பா நினைச்சுக்கிடாதே தங்கச்சி! போன உயிர் திரும்பி வந்திடாது... நல்லாத் தெரியும். இருந்தாலும், தனியே நீ கஷ்டப்படப் போறதை நினைச்சு முதலாளி உனக்கு மூவாயிரம் ரூபா கொடுக்கத் தயாரா இருக்காரு... கட்டட வேலையிலேயும் உன்னைச் சேத்துக்கிடத் தயாரா இருக்காரு!"

"மூவாயிரம் ரூபாயா...? உனக்கு எவ்வளவுய்யா கமிஷன் இதிலே? கணேசனுக்கு என்ன வயசு தெரியுமா... முப்பத்தஞ்சு! உசிரோட இருந்து இன்னும் இருபது வருசம் வேலை பார்த்தான்னா, எவ்வளவு லட்சம் சம்பாரிப்பான் தெரியுமா?"- கும்பலிலிருந்து ஒருவர் சரவணன் முன்னே வந்து நின்றார்.

"யாருப்பா அது...? இந்தக் கட்டைப் பஞ்சாயத்துக்காகத்தான் கும்பலா வந்திருக்கீங்களா? உங்களுக்கெல்லாம் என்னய்யா சம்பந்தம் இதிலே?"

"நாங்க எல்லாம் கணேசனோட அண்ணன், தம்பி... அக்கா, தங்கைங்க! அப்படி அம்போன்னு அவன் சம்சாரத்தை விட்டுட்

'சிந்தாமணி'- என்ற பழந்தமிழ் நூல் தெரியும். 'கிந்தாமணி' என்ற நூல் தெரியுமா?...

வீட்டில் வைத்துக் கும்பிடும் கிரகலட்சுமி பற்றிக் கூறும் நூல்தான், 'கிந்தாமணி' என்ற நூல்!

ஆதாரம்: 'தமிழ்ப்பண்டிகைகளும் பண்பாடும்' என்ற நூல்.

தகவல் : உடுமலை எஸ். பொன்னுசாமி

டுப் போயிருவோம்னு நினைக்கிறீங்களா?''

''ஓ.... ஹோ! இப்போ என்ன வேணும் உங்களுக்கு? மூவாயிரம் போதாதா? சரி... ஐயாயிரம் தரேன்!''

''தாயீ... பூரணி! இவரு லேசுப்பட்ட ஆளாத் தெரியல்லே... போலீசுக்குப் போயிர வேண்டியதுதான்!''

''போலீசுக்கா... போங்க! நானே வேணும்னா போன் பண்ணிப் போலீசை வர வழைக்கறேன்! புகார் கொடுங்க... கணேசன் உடம்பைக் கூறு போட்டுப் பார்க்கட்டும்! கோர்ட், கேசு இதெல்லாம் எனக்குப் புதுசு இல்லே!''-

''கொஞ்சம் நில்லுங்கய்யா!''- டெலி போனை நோக்கிச் சென்ற சபாபதி திரும் பினார், பூரணி அழைத்ததும்.

''சுடலையண்ணே! நீங்க எதுவும் பேச வேணாங்க! என் புருசனை இப்படிப் போட்டு வச்சுக்கிட்டு, மூவாயிரம், ஐயாயிரம்னு ஏலம் போடறதைப் பாக்கறப்போ என் உடம்பெல் லாம் பதறுது.... என்னமோ பண்ணுது.... இனிமே நீங்க எல்லாரும்தான் எனக்கு ஆத ரவு... நான் சொல்றதைக் கேப்பீங்களா?''

''என்ன தாயீ... சொல்லு!''

''நீங்க, பீட்டர் அண்ணன், மூர்த்தியண் ணன் மூணு பேர் மட்டும் இங்கே இருங்க... மத்தவங்களை வீட்டுக்குப் போகச் சொல்லி டுங்க... இன்னும் கொஞ்ச நேரத்திலே என் புருசனோட நான் அங்கே வரத்தானே போறேன்...?''

கும்பல் கலையத்தொடங்கியதும், ''ஆயீ! பெரியாயீ...''- பூரணி ஓடிச் சென்று ஒரு மூதாட்டியின் முன் நின்று ஏதோ சொல்ல, அவள் தலையசைத்து மறுக்க, பூரணி அம் மூதாட்டியின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்ச... இறுதியில், கண்களைத் துடைத்துக் கொண்டு, பூரணியின் தாலிக் கயிற்றை அவிழ்த்து அவள் கையில் கொடுத்து விட்டுப் போனாள் அம்மூதாட்டி!

''சுடலையண்ணே! மூர்த்தியண்ணன் இங்கேயிருக்கட்டும்... நீங்களும் பீட்டர் அண் ணனும் இதைவித்திட்டு, வேன் அமர்த்திக் கிட்டு வந்திடுங்க... எப்படியும் அறுநூறு ரூபாயாவது கிடைக்கும்... அவர் கட்டின தாலி அவர் காரியத்துக்கு உதவட்டும்!''

நிதானமாக நடந்து சபாபதியின் முன் நின்றாள் பூரணி.

''இன்னிக்கு, நேத்தா... அஞ்சு வருசமா உங்ககிட்டே உழைச்சிருக்கார் என் புருசன்! என் போதாத காலம்... எப்படியோ இப்படிக் கீழே விழுந்து மேலே போயிட்டார்...

'' 'உன் புருசன் வேலை பாத்துக் கிட் டிருந்தபோது தவறி, கீழே விழுந்திட்டான்... உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயும், அவனைக் காப்பாத்த முடியல்லே... புருசனைப் பறி கொடுத்திட்டு நிக்கற உன்னைப் பாத்தா எனக்குப் பாவமாயிருக்கும்மா' அப்படின்னு ஆறுதலா நாலுவார்த்தை சொல்றதை விட் டுட்டு எதுக்காகய்யா இத்தனை பொய்? நீங்க அவரைப் பிடிச்சுத்தள்ளிக் கொலை பண்ணிட் டீங்கன்னா நான் சொல்லப் போறேன்? சாகப் போறவங்ககிட்டே கூட, 'பயப்படாதீங்க... நீங்க பிழைச்சுக்கிடுவீங்க'ன்னு தான் டாக்டருங்க பொய் சொல்லுவாங்க... உங்க டாக்டர் கல்லு மாதிரியிருந்தான்! புருசனை சீக்காளின்னு கூசாமச் சொல்றாரு-'தங்கச்சி, தங்கச்சி'ன்னு என்னை அழைச்சுக்கிட்டே, கண்ணுலே யிருந்து பொட்டுத் தண்ணிகூட வராம, பொய்க்கு மேலே பொய்யா அடுக்கிக்கிட்டே போறாரு இவரு... தங்கச்சி புருசன்!''

விழி திறவாமல் கிடந்த கணவனின் முகத் தையே வெறித்துப் பார்த்த பூரணி, திடீரென்று டாக்டர் குமாரின் அருகில் வந்தாள்.

''டாக்டரய்யா... இவரோட முதலாளிக்கு இப்படிப் பச்சைப் பொய்யைச் சொல்லி உப காரம் பண்ணிட்டீங்க... இப்போ என் புரு சனுக்கும் நீங்க உபகாரம் பண்ணணும்! போன மாசம் ஒருநாள் பக்கத்து வீட்லே டி.வி. பார்த் திட்டு வந்ததும், டி.வி.யிலே அவர் பார்த்த தைப் பத்தி என்கிட்டே சொன்னாரு. இவரு போயிட்டார்னா, நான் உக்காந்து அழுதுக்கிட் டேயிருக்காம, ஆஸ்பத்திரிக்குச் சொல்லி யனுப்பி, ரெண்டு கண்ணையும் எடுத்திட்டுப் போக ஏற்பாடு பண்ணணும்னு என்கிட்டே சொன்னாரு. ஒரே மாசத்திலே போயிட்டாரு! உடனே கண் ஆஸ்பத்திரிக்குப் போன் பண்ணி, என் புருசனோட ரெண்டு கண்ணை யும் வந்து எடுத்துக்கிட்டுப் போகச் சொல் லுங்க டாக்டரய்யா! ஏற்கனவே நேரமாயி ரிச்சு... சீக்கிரமா எடுக்கணும்னு சொல்வாங்க. என் புருசனுக்கு இந்த ஒத்தாசை பண்ணுங்க டாக்டரய்யா!''- கையெடுத்துக் கும்பிட்ட பூரணியைக் கண்டு தொறுங்கிப் போய் நின் றார் டாக்டர் குமார்!

● வாடகைக்கு வீடு எடுக்கலாம். வீடியோ எடுக்கலாம். சைக்கிள் எடுக்கலாம். வாடகைக்கு வாத்தியார் எடுத்த விஷயம் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

கேரளாவில் 'கும்பிள்' என்ற ஊரில் உள்ள அரசுப் பள்ளி ஒன்றில் ஆசிரியர்களே கிடையாது! பலமுறை இதுபற்றி, பெற்றோர்-ஆசிரியர் கழகத்தினரும் ஊராரும் மேலிடத்துக்குப் புகார் எழுதியும் 'நோ ரெஸ்பான்ஸ்!'

இந்த ஆண்டு காலாண்டுத் தேர்வும் நெருங்கி விட, எந்த வகுப்பிலும் பாடங்கள் ஏதும் நடக்காத நிலை கண்டு, உள்ளூர் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தினர் ஒரு முடிவுக்கு வந்தனர்.

ரூ.500 மாத வாடகைக்கு ஐந்து ஆசிரியர்களை வெளியிலிருந்து தருவித்து, பரீட்சைக்குள் ஒருவழியாகப் பாடங்களை நடத்தி முடித்திருக்கிறார்கள்.

பரீட்சைகள் முடிந்து, ஓணம் விடுமுறையில் போய்விட்ட மாணவர்கள், மீண்டும் வகுப்புக்கு வரும் போதாவது ஆசிரியர்களை அரசு அனுப்புமா என்பதுதான் இப்போதைய கேள்வி!

● "நமது அமைச்சர்களில் பலர் மிக ஆரோக்கியமாக இருக்கிறார்கள். இதன் ரகசியம் என்ன தெரியுமா? அவர்கள் 7-8 வயது வரை தாய்ப்பால் குடித்து வளர்ந்தது தான்!"

– கேரள சட்டசபைக் கூட்டத்தில், மாத்யூ ஸ்டீபன் என்கிற எம்.எல்.ஏ. இப்படிப் பேச, சபையே கலகலத்து விட்டது!

"சில அமைச்சர்கள் 5-8 வயது வரை தாய்ப்பால் குடித்த விஷயத்தை என்னிடமே கூறி இருக்கிறார்கள்" என்று அவர் மேலும் பேச, பலருக்கு ஆவல் எல்லை மீறி விட்டது!

"எட்டு வயது வரை தாய்ப்பால் குடித்த அந்த அமைச்சர் யார் என்று தெரிவிக்க வேண்டும்!" என்று பலர் கேட்க ஆரம்பிக்க, சபாநாயகருக்கு தர்ம சங்கடமாகப் போய் விட்டது!


கடைசியில் இப்படி முடித்து விட்டார்!

"ஐயா, அந்தப் புரட்சி அமைச்சர் யாரென்று தெரிந்து கொள்ள நினைப்பது உங்கள் உரிமை. ஆனால் அதை சபையில் வெளியிட அனுமதி மறுப்பது என் கடமை!"

சே!

● கேரளாவில் பஞ்சாயத்துத் தேர்தல் பணிகள் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டன. (ஹூம்!) அது ஒருபுறம் இருக்கட்டும். ஒரு பத்திரிகையைச் சேர்ந்த ஐந்து பேர் இம்முறை இத்தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருப்பது தான் விசேஷம்.

வாடகைக்கு வாத்தியார்கள்!



கேரள தினசரி நாளேடான 'சந்திரிகா'விலிருந்து ஒரு துணை ஆசிரியர், ஒரு உதவி ஆசிரியர், மூன்று நிருபர்கள் ஆகியோரே அந்த ஐவர்!

பத்திரிகையாளர்களைத் தேர்தலில் நிறுத்தும் இந்தப் புதிய உத்தியைத் தொடங்கி இருப்பது முஸ்லிம் லீக் கட்சி.

'சந்திரிகா', முஸ்லிம் லீக்கின் அதிகார பூர்வ பத்திரிகை.

● இதே பஞ்சாயத்து தேர்தல் தொடர்பாக இன்னொரு படு சுவாரஸ்ய செய்தி பாருங்கள்.

கோழிக்கோடு ஜில்லா கொடுவள்ளி பஞ்சாயத்து வார்டில் நாசர் என்பவர் வேட்புமனு தாக்கல் செய்திருக்கிறார். மனுக்களைப் பரிசீலித்த தேர்தல் அதிகாரி, இவரது மனுவை நிராகரித்து விடவே, நாசர் தேர்தல் அதிகாரியிடம், "எப்படியாவது ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று காலில் விழாத குறையாகக் கெஞ்சியிருக்கிறார்.


ஊஹூம்! மசிகிற ஆளா அவர்?

"சான்ஸே இல்லை" என்று பெரிசாக ஒரு கும்பிடு போட்டு விட்டார்.

ஏனாம்?

அந்த வார்டு, பெண்களுக்கான ரிசர்வ் தொகுதி!

திருவனந்தபுரத்திலிருந்து : **எஸ்.எஸ். மணி**



சமைத்துப் பார்

தேவையான பொருட்கள் :

அரைக்கிலோ செண்டிமெண்ட், ஒரு கிலோ வீரம், நாலு லிட்டர் ரத்தம், ஆறு லிட்டர் கண்ணீர், நூறு கிராம் நகைச்சுவை, ஒரு குவிண்டால் கிளாமர், இசை - தேவைக்கேற்ப.

செய்முறை :

குடும்பப் பகை - பங்காளி சண்டை என்ற வாயகன்ற பாத்திரத்தை எடுத்துக் கொண்டு முதலில் செண்டிமெண்ட் மசாலாவைப் போட்டு கொஞ்சம் கிளுகிளுப்பு என்னும் நெய் விட்டு நன்கு சிவக்கும் வரை கிளற வேண்டும். சரியான பதம் வந்ததும், தயாராக எடுத்து வைத்துள்ள வீர மிக்சரைச் சேர்த்து ஒரு புரட்டு புரட்ட வேண்டும். கொதிக்கத் தொடங்கும் நேரத்தில் ஸ்கிரிப்ட் கரண்டி உதவியுடன் நன்கு கிளறி, கொஞ்சம் போல் ரத்தம் சேர்த்து, மேலும் கொதிக்க விட வேண்டும். காரமான நெடி மூக்கில் ஏறும் சமயம் கௌண்டமணி - செந்தில் என்கிற நகைச்சுவை ஏலப் பொடியை மேலே தூவினால் கொஞ்சம் கார நெடி மட்டுப்பட்டு, சுகந்தம் சேரும். பக்குவம் வந்ததும் இறக்கி, ஆறவைத்து, கனகா - வினிதா கிளாமர் எஸன்ஸ் சேர்த்து, ஃப்ரிட்ஜில் வைத்து ஒன்றரை மணி காத்திருக்க வேண்டும்.

இடைப்பட்ட நேரத்தில் மனோரமா பிராண்ட் ஐ.எஸ்.ஐ. கண்ணீரை இளையராஜா பிராண்ட் இசையுடன் போட்டுக் கலக்கி ஒரு புளிப்புக் கலவை தயார் செய்து கொள்ளுதல் நலம்.

பின்னால், பதமாகி, ஃப்ரிட்ஜிலிருந்து எடுக்கப்படும் மசால் கலவை மேல் இந்த புளிப்புக் கரைசலைத் தெளித்து, எழுபது எம்.எம். தட்டில் ஊற்ற வேண்டும்.

சில இடங்கள் கட்டியாகவும் சில இடங்கள் நீர்த்தும், கொஞ்சம் நூடுல்ஸ் போலவும் மிச்சம் புட்டு மாதிரியுமாக Four-in-one மிக்சர் கிடைக்கும்.

ருசித்துச் சாப்பிடப் பலரும் விரும்பும் டிபன் இது. அஜீரணம் ஏற்பட அதிக வாய்ப்பு என்பதையும் சொல்லி விட வேண்டும்.

— ஆர்.பி.ஆர்.

பாதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Sri lanka.

